கம்பன் மணி மலர்

துன்மதி 1982



கம்பன் கழகம் - காரைக்குடி

கம்பன் மணி மலர்

1982

துன்மதி பங்குனி உஉ முதல் உடு வரை

1982 ஏப்ரல் 4 முதல் 7 வரை நிகழ்ந்த

44-ஆவது கம்பன் திருநாள் வெளியீடு.

கம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-2.

உள்ளுறை

முன்னுரை

கம்பன் ஓர் உலக மகாகவி; கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் எந்தைபிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக்கொண்ட ஆதித்தன் (கி.பி. 871-907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப்பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனை, பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய்நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதா சன்னதமும் கற்றோரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும் ரசிகப் பெருமக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் பேராற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும், ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்பராமாயணம். தமிழ்மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை, என்னப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய்நல்லூரில் அரங்கேற்றினான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெரும் திருவிழாவாக, "நாவலோ, நாவல்!" என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807; கலியாண்டு 3986-க்குச் சரியான விசுவாவசு-பங்குனி 4-ஆந் தேதி (கி. பி. 886 பெப்ருவரி—23) புதன்கிழமை அஸ்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள், அன்றுதான் என்னுடையன் கம்பனை, "கவிச்சக்கரவர்த்தி" என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச்சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், "கவிச்சக்கரவர்த்தி" பிறந்த நாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில் தானே "கவிச்சக்கரவர்த்தி" பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் "கவிச்சக்கரவர்த்தி" என்ற விருதுப்பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளையே கம்பன் திருநாளாக — ஜன்ம நட்சத்திரமாக — ஏற்று விழா எடுத்து வருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாட்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதிகொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடைத் திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா, எவ்விதமான, சாதி, சமய, மொழி, கட்சி, பால் வேறுபாடின்றி யாவரும் கலந்துமகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய்வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும் பெருமை செய்கின்றனர்.

கம்பன் திருநாட்செலவு ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது. நாற்பத்து மூன்றுஆண்டுகட்கு முன் முந்நூற்றைம்பது ரூபாய் அளவில் தொடங்கிய கம்பன் திருநாளின் செலவு ஆண்டுதோறும் வளர்ந்து, எத்துணைச் சிக்கனமாக நடத்தினும், ரூபாய் இருபதாயிரத்திற்கு மேல் உயர்ந்துவிட்டது. விழாச்செலவுக்காக இதுவரை யாரையும் நன்கொடை கேட்டு அணுகியதில்லை. நிலையறியும் உடனுறை நல்லன்பர்கள் தாங்களாகவே முன் வந்து உவந்தளிக்கும் நன்கொடை, செலவின் ஒரு சிறு பகுதியையே ஈடு செய்கிறது.

இந்நிலையில் கம்பன் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்துப் பயனுள்ள மலர் வெளியிடுவதென்றும், அதில் விளம்பரங்கள் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப் பெற்றது. அதற்குக் கம்பன்பால் அன்பும்,அடியேன் பணியின்பால் பரிவும் உள்ள அன்பர்கள் பலர் விளம்பரங்கள் உதவி, இப்புனிதப் பணிக்கு ஆக்கம்தர முன்வந்துள்ளனர்.

இவர்கட்கெல்லாம் எளியேன் என்ன கைம்மாறு இயற்றவல்லேன் ? என்னப்பன் கம்பனும், அவன் பாடிப் பரவிடும் முழுமுதற் பரம்பொருளும், இவ் அறவோர்கட்கும், இவர்களின் முயற்சிகட்கும், தொழில்துறை வாணிபங்கட்கும் எல்லா நலன்களையும் வளங்களையும் அருளிக் காத்தருள வேண்டுமென்று மன மொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.

எல்லா வகையாலும், முன்னரும், பின்னரும் கம்பன் திருநாளுக்கும், கம்பன் திருப்பணிகட்கும் உதவிய—உதவி வருகிற—அறவுள்ளம் படைத்த பெரியோர்கள் அன்பர்கள் யாவர்க்கும் என்றும் மறவா நன்றியுடன் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி மகிழ்கிறேன்.

இம்மலரை மிக்க சிரத்தையுடன் அச்சிட்டு உதவிய சென்னை ஏசியன் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி உரியதாகும்.

கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002,
4. ஏப்ரல் 1982.

அன்பும் பணிவுமுள்ள,
கம்பன் அடிப்பொடி
செயலாளன், கம்பன் கழகம்.

அடுத்த ஆண்டில் கம்பன் திருநாள்

துந்துபி	பங்குனி	மகம்	பூரம்	உத்தரம்	அஸ்தம்
		கஉ	கஎ	கஅ	கக
		26	27	28	29
1983	மார்ச்	சனி	ஞாயிறு	திங்கள்	செவ்வாய்

கம்பன் கழகங்கள் — முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.
[தொலைபேசி : 600]

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை - 623 556

3. கம்பன் கழகம்,
ஆமருவியப்பன் கோயில்,
தேரழுந்தூர் - 609 808
மயூரம் வழி.

4. கம்பன் கழகம்,
சீராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி - 638 505,
Via Erode R. M. S.
[தொலைபேசி : 44]

5. கம்பன் கழகம்,
நாமக்கல் - 637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம் - 638 452.
[தொலைபேசி : 84]

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
புதுச்சேரி - 605 001.
[தொலைபேசி : 509]

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம் - 637 408,
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயமுத்தூர் - 641 037.
[தொலைபேசி : 35851]

10. கம்பன் கழகம்,
4, பி. சாலை ரோடு,
சேலம் - 636 001.
[தொலைபேசி : 3501]

11. கம்பன் கழகம்,
கற்பகச் சோலை,
1, வெள்ளையன் செட்டியார் வீதி,
கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.
[தொலைபேசி : 411110]

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜுவலி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை - 622 001.
[தொலைபேசி : 560]

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி,
பாளையங்கோட்டை - 627 002.

14. மலேசியக் கம்பன் கழகம்,
61, Jalan Hang Jebat,
MALACCA, (Malaysia).
(Phone : 3206)

15. கம்பன் கழகம்,
120, காந்தி சாலை,
திருவாரூர் - 610 108.

16. கம்பன் கழகம்,
11, சின்னையா தெரு,
பட்டுக்கோட்டை - 614 601.
[தொலைபேசி : 102]

17. கம்பன் கழகம்,
62, காமராஜ் சாலை,
திருப்பத்தூர் - 635 601,
வட ஆர்க்காடு மாவட்டம்.
[தொலைபேசி - 290 26.]

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு,
சிவகங்கை - 623 560.

19. கம்பன் கழகம்,
அனுமார் கோயில்,
பரமக்குடி - 623 707.

20. கம்பன் கழகம்,
13, E. B. காலனி,
காந்தி நகர், வேலூர் - 632 006,
வடஆர்க்காடு மாவட்டம்.

1955-ல் ஒரு தலைமையுரை

கோவைக்கிழார் C. M. ராமச்சந்திரன் செட்டியார், கோவை

I. முன்னுரை

வணக்கம்,

அழைப்பு வந்தது. செல்ல இசைந்தேன். அதே நாளுக்கு வேறு ஓர் அழைப்பும் வந்தது. ஆனல் அதற்குச் செல்ல என் நெஞ்சு இடம் தரவில்லை. முந்திய அழைப்பு ஒரு புலமை விருந்திற்கு. பிந்தியதோ சமய ஈடுபாட்டிற்கு. புலமையைக்காட்டிலும் சமய ஈடுபாட்டிலே நின்றவன் யான். அதனைப் பிறரும் அறிவார்கள். அப்படியாயின் இந்தத் தடவை ஏன் இவ்வாறு என் நெஞ்சு மாறுபட்டு நின்றதோ? அதனை அறிய நீங்கள் விழைய வேண்டாம். யானே அதனை அறிய என்னைத் துருவி ஆராய்ந்தேன்.

II. கம்பன் ஒடுக்கக் கோயில்

விழைவு

''கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க'' என்ற ஒரு பெரு முழக்கம், தமிழ்நாடு எங்கும் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. அவ்வொலி சில ஆண்டுகளாகத் தமிழ்நாடு முற்றும் ஓங்கி வளருகின்றது. அதனைக் கேட்டு மகிழாத தமிழ் மக்கள் இல்லை. அவ்வொலியின் தோற்றம் காரைக்குடியில் தொடங்கிற்று என்று எவரும் அறிவார்கள். அவ்வொலியை அருகிலிருந்து கேட்டு மகிழும் பொருட்டுக் கணக்கற்ற அறிஞர்கள் கைக் காசையும் அரும்பொழுதையும் செலவிட்டுச் சென்று இன்புறுகிறார்கள். கம்பனைத் தூற்றி நசுக்கிவிட வேண்டுமென்று முயலும் ஒரு கடும் புயல் காற்று ஒரு புறம் அடிக்க, அக் காற்றையே அமைதியாக்கி, அதனைத் தென்றல் போலப் பரிணமிக்கச்செய்து உணர்ச்சி ததும்ப விளங்குகிறது, அந்தத் தூய்மையான வாய்மை மொழி ஒலி. ஓர் உரம் பெற்ற சிறு விதை அல்லவா, பெரிய ஆலமரமாக வளர்ந்து நிழல் தருகிறது! அதுபோல, ஒரு தனி மனிதன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியே ஒரு பெரிய இயக்கமாகக் காட்சி அளித்துத் தமிழ்நாட்டை இன்புறச் செய்கிறது. அந்தத் தனி மனிதன் அனுப்பிய ஓர் அழைப்பு என்றால் எவரே புறக்கணிக்க முடியும்? அதனை ஏற்றுக்கொண்டு கம்பன் புகழுக்கு ஒரு வணக்கம் செலுத்த என் நெஞ்சு உடன்பட்டது என்றால், அதன் மலர்ச்சி பொருந்திய உரிமையைக் கேட்கவும் வேண்டுமா? ஆகவே, யானும் உடன்பட்டுச் செல்ல விழைந்தேன்.

கம்பன் புகழ்

கம்பனைப் படித்து, அவனைச் சுவைத்து இன்புறும் மக்கள் எத்தனையோ பேர் நம் செந்தமிழ் நாட்டில் முளைத்து இருக்கிறார்கள். அவனை இரசிக்கக் கூட்டங்கள் கூட்டி விழாக் களும் நடத்துகிறார்கள். அதற்காக எத்தனையோ மன்றங்களும் தோன்றி இருக்கின்றன. ஆனல், காரைக்குடிக் கம்பன் கழகம் என்றால் அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அதைப் போன்று வேறு எந்தக் கழகம் அடிப்படை வேலையினையும் நிரந்தரச் செயலையினையும் இயற்றி இருக்கின்றது இதற்கு விடை, யான் என்னையே கேட்டது உண்டு. இந்தத் தடவை காரைக்குடிக்கு வருகிறபோது அதன் மர்மத்தை அறிந்தேன். அதனையும் சொல்லிவிடத் துணிகிறேன். உலகில் எத்தனையோ புனித இடங்கள் உண்டு. ஆனல், எல்லா இடங்களிலும் ஒரே தன்மையான பெருமையைக் காண்கிறோமா? இல்லையே! இந்தக் காரைக்குடியிலோ ஒரு தனிப்பட்ட பெருமை கம்பனுக்குக் கிடைத்திருக்கின்றது என்று அறிவோம்.

அவனது ஒடுக்கக் கோயில்

காரைக்குடியில் கம்பன் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு இருக்கவில்லை. அங்கே செவிக்கு ஓர் அரிய விருந்து மட்டும் யான் பெற்றேன். ஆனல், கம்பன் திருநாளான பங்குனி அத்த நாள் ஆகிய இன்று அவன் திருக்கோயில் அமைந்திருக்கும் நாட்டரசன் கோட்டை எனப் பெயர்பெற்ற இப்புனித

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம் - 604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானநிக்கம் பிள்ளை தெரு,
கல்லுக்குழி,
திருச்சி - 620 020.

23. கம்பன் கழகம்,
8, இராஜ வீதி,
காஞ்சிபுரம் - 631 502.

24. கம்பன் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

25. கம்பன் கழகம்,
9, அண்ணா நகர்,
மதுரை - 625 018.

26. கம்பன் கழகம்,
அவினாசி - 638 654.

27. கம்பன் கழகம்,
37, மெயின் ரோடு,
கவுந்தப்பாடி - 638 455.
Via—Erode, R. M. S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி - 642 002.

29. கம்பன் கழகம்,
23-24, அன்னதானவிநாயகர் கோயில் தெரு
பேட்டை, திருநெல்வேலி - 627 004.

30. கம்பன் கழகம்,
தென் திருப்பேரை - 628 623,
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர் - 632 315,
வட ஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
7-B, வாங்கப்பாளையம்,
சேலம் சாலை, கரூர்-639 006.

33. கம்பன் கழகம்,
4-A, DR. SARAT BANERJEE ROAD,
CALCUTTA - 700 029

34. கம்பன் கழகம்,
68, இராசாராம் தெரு
சவகர் நகர்,
திருமங்கலம் - 626 706.

35. கம்பன் கழகம்,
பேராசிரியர் குடியிருப்பு,
கிழக்குத் தாம்பரம் - 600 059
[தொலைபேசி : 48581]

36. கம்பன் கழகம்,
57, பஜார் தெரு,
பெரம்பலூர் - 621 212.

37. கம்பன் கழகம்,
மேலரத வீதி,
நாட்டரசன் கோட்டை - 623 556.

38. கம்பன் கழகம்,
2, பேட்டை பாக்யநாதம் தெரு,
கும்பகோணம் - 612 001.

39. கம்பன் கழகம்,
ஆலடிப்பட்டி-நல்லூர் 627 853,
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்.

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேச்வரம் - 623 526.
[தொலைபேசி-24]

41. கம்பன் கழகம்,
"சோலை", 6, தாண்டவல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம் - 626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி,
கமர்ஷியல் சாலை,
உதகமண்டலம் - 643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
135, வாசகசாலை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம், Srilanka

44. கம்பன் கழகம்,
B-11, சந்தன மர வீதி, வட்டம் 9,
நெய்வேலி - 607 801.

45. கம்பன் கழகம்,
வையப்பமலை,
சேலம் மாவட்டம் - 637 410.

46. கம்பன் கழகம்,
திருத்துறைப்பூண்டி - 614 713,
தஞ்சை மாவட்டம்.

இடத்தில் எனக்கு ஒரு பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எனக்கு நினைக்க ஒண்ணு மகிழ்ச்சி தருகிறது. கம்பனுடைய ஒடுக்கக் கோயிலில் அவனுடைய அமைதி நிலையைக் கண்டு அவனுடைய பெருமையை நெஞ்சாரப் பருகினேன். அதுவே எனக்குப் பெரும் ஆறுதல் அளிக்கின்றது.

ஒடுக்கங்களின் பெருமை

நமது நாட்டில் பெரியார்களின் ஒடுக்கங்கள், மிகுந்த ஆற்றல் வாய்ந்த இடங்கள் ஆகும். இவ்விடங்கள், புனிதம் பொங்கி எழுந்து எவரையும் கவர்ந்து இழுக்கும் இடங்கள் ஆகும். பிறப்பு இடங்கள், வளர்ப்பு இடங்கள், அருள் பெற்ற இடங்கள் - இவை களைக்காட்டிலும் இறப்பு இடங்கள் அல்லது ஒடுக்கங்கள் தமிழ் மக்களால் மிகவும் பாராட்டப்படுகின்றன. கம்பனின் இறுதி ஒடுக்க இடமாகிய இந்நாட்டரசன் கோட்டை அத்தகைய புனித இடமாகும். ஆகவே, இங்கே அவன் புகழ் பாடி அவனுக்கு வழிபாடு நடாத்தும் காரைக்குடிக் கழகம் அப்பெருமகனுடைய ஆசியை நுண்ணுலகத்திலிருந்து பெற்று வளங்கும் அல்லவா? ஆகையால், இச்சீரிய விழா வெகு புகழுடன் நடைபெறுகின்றது என்றால் அது மிகை ஆகாது.

நான், நாட்டரசன் கோட்டைக்கு வந்து கம்பன் திருக்கோயிலைக் காணும் மட்டும் இங்கே அவனது தூய்மையான ஒடுக்கம் இருக்கின்றது என்று அறியேன். இதனைக் கண்டவுடன் எனக்கு ஒரு பெருமிதம் ஏற்பட்டது. நமது நாட்டுப் பொது மக்களின் நம்பிக்கை பொய் ஆகுமா? சித்தர்களின் ஒடுக்க இடங்கள் ஆன பழனி மலை, மருத மலை, கஞ்சமலை முதலிய மலைகளும், சிவனடியார்களின் ஒடுக்க நிலைகளான திருப்புகலூர், ஆச்சாபுரம், திருவஞ்சைக்களம், சிதம்பரம் முதலிய திருத்தலங்களும், பெருந்துறவிகளின் அமைதியிடங்களான திருவொற்றியூர், முகவை, இலக்குமிபுரம் முதலிய சமாதி இடங்களும், வீரசைவப் பெரியார்களின் ஒடுக்க நிலைகளான பேரூர், நல்லாற்றூர், திருப்போரூர் முதலிய பேர் இடங்களும் எவ்வாறு புனிதம் பெற்று விளங்குகின்றனவோ அதுபோலவே நாட்டரசன் கோட்டையும் கம்பனது பூத உடலைத் தாங்கி விளங்கும் புனிதம் பெற்றுள்ளது. ஆதலால், மிகப் பெருமையுடன் இது விளங்குகின்றது. இந்த விளக்கமே நமது கம்பன் கழகத்திற்கும் அளவு கடந்த பெருமை தருகின்றது என்று எண்ணுகிறேன்.

ஒப்புவமை

இந்த விளக்கம் என் நெஞ்சில் பட்டவுடன் பல எண்ணங்கள் என் கண் முன் தோன்றின. அவைகளை எண்ணிக்கொண்டே இப்புனித நிலத்தின் மண்ணை மிதித்தேன். அதற்குச் சான்றாக எங்கும் அமைதியே இயற்கையில் நிலவிக்கொண்டிருக்கிறது. சாரைக்குடியில் நடந்த காட்சிகள் மிகுந்த உணர்ச்சிகளை எழுப்பி விட்டன. அவை நாடக மேடைகள்போல இலங்கின. ஆனால், அத்தகைய காட்சிகள் இங்கு இல்லை. எங்கும் ஒப்பற்ற அமைதியையே காண்கின்றோம். அங்கே இலக்கியச் செழிப்பு, இங்கே சமய மேம்பாடு; அங்கே உணர்ச்சியின் ஆர்வம், இங்கே அமைதியின் உச்ச நிலை. இந்த வேறுபாட்டைக் கண்டவுடன் என் நெஞ்சில் முன் அறிந்த பிற ஒடுக்க நிலைகளின் எண்ணங்கள் தோன்றின. ஒப்புதல் கூற வேண்டி ஒன்று இரண்டு கூறுகின்றேன்.

ஓர் எடுத்துக்காட்டு

மாலை நேரம். ஒரு தனித்த கொடி வழி. ஓர் எருது வண்டி தனியே செல்லுகின்றது. அதில் ஒரு பெண் இருந்தாள். வழியோ மணல் பாங்கு. இருபுறமும் உயர்ந்த கள்ளி வேலி. மக்கள் நடமாட்டம் இல்லை. சில குருவிகள் மட்டும் மரக்கிளைகளில் பதுங்கச் செல்லும் ஒலி கேட்டது. இந்த அமைதியான வழியில் திடீர் என்று வண்டிக்காரன் வண்டியை நிறுத்தினான். அந்தப் பெண் திடுக்கிட்டாள். ‘வண்டிக்காரரே, ஐயன் கோயிலுக்கு வந்துவிட்டோமா’ என்றாள். ‘இல்லை, அம்மா; கோயில் இன்னும் இரண்டு கல் இருக்கின்றது. மணலில் எருது இழுக்கவில்லை. இங்கே சற்று இளைப்பாறிச் செல்லுவோம்’ என்றான் வண்டிக்காரன். ‘வேண்டாம், ஐயா, மனித சஞ்சாரம் இங்கு இல்லை. தனியே இருக்க அச்சம். உறவினர் பூஜை சாமான்களுக்காக என்னை எதிர்பார்ப்பார்கள். பூஜை நடக்க வேண்டும், விரைவில் செல்லுங்கள்’ என்று வினயமாய்ச் சொன்னாள். ‘அது எல்லாம் முடியாது. இங்கே சுகமாக இருக்கிறது. சற்று இளைப்பாறிவிட்டுச் செல்லலாம்’ என்று புன்முறுவலுடன் சொன்னான். ‘என்ன ஐயா! ஏதோ பிதற்றுகிறீர். ஐயன் சமாதிக்குச் செல்லுகிறோம் என்று அறியீரா? ஐயன் பூஜைக்குத் தாமதம் செய்வது தப்பு’

என்று கடிந்து பேசினுள். ''இந்தப் பேச்சில் எனக்கு நம்பிக்கை இல்லே. நீ சம்மதப்படா விட்டால் பலவந்தப்படுத்துவேன்' என்று உடல் நிமிர்ந்தான். 'ஐயோ, வாழைத் தோட்டத்து ஐயனே! உன் பாதமே கதி, என்னேக் காப் பாற்று' என்று கத்தினுள். 'அம்மா, சொல் வதைக் கேள். இங்கே எவரும் இல்லே. வீணுகத் தொண்டை வலிக்கக் கத்தாதே. இந்த நாளில் சாமியேது பூதம் ஏது?' என்று மிரட்டிப் பேசி ஞன். 'ஐயனே, ஆண்டவனே, திக்கற்ற வளேக் காப்பாற்று. சரணம் சரணம்' என்று கும்பிட்டுத் துதித்தாள். உடனே ஒரு பெரும் வியப்பு. அடுத்த வேலியிலிருந்து ஒரு பெரிய நாகம் சீறிக்கொண்டு வந்தது. வண்டிச் சக் கரத்தின் மேல் ஏறி வண்டிக்காரன் பக்கமாக நகர்ந்து சென்றது. பெண்ணே, அதனே வணங்கி நின்ருள். வண்டிக்காரனே கீழே குதித்து ஓடினன். பாம்பும் அவனேத் துரத்திச் சென்றது. 'அம்மா, நீதான் கதி. உனக்கு வணக்கம். பாம்பைப் போகச் சொல்லு' என்று அச்சத்துடன் கத்தினன். அந்த அம்மாள் அவன் நிலேமையைக் கண்டு இரங்கித் தனக்குச் செய்த தீங்கையும் மறந்து, 'ஐயனே, இவனுக் குச் செய்த தண்டனே போதும், விலகிப்போம்' என்று வணங்கினுள். 'இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்து விடல்' என்ற வாய்மைக்கு இணங்க அவள் வழிபட் டாள். அவள் வழிபாட்டைக் கேட்டான் போலும் ஐயன்! பாம்பும் நகர்ந்தது. இதற் குள் மக்கள் கூடிவிட்டனர். பெண்ணும் சிறிது நேரத்தில் ஐயன் சமாதி அடைந்து, அங்கே வழிபாடு செய்து, நன்றியும் செலுத்தினுள். வண்டிக்காரனும் தீங்கு எண்ணம் விட்டு நல்ல வன் ஆனுன்.

இந்தச் செய்தி ஐயன் கோயிலில் இன்றும் கர்ணபரம்பரையாக வழங்குகிறது. ஆயிரக் கணக்கான மக்களுக்கு ஐயன், சமாதியின் மூலம் அருள் புரிந்துகொண்டே இருக்கிருன். பாம்பு கடி, தேள் கடி, கை கால் முடக்கம் முதலிய நச்சு நோய்கள் ஐயன் சமாதியில் புற்று மண் ணுல் தீருகின்றன. அதுபோலவே, இந்தக் கம்பன் சமாதியிலும், சமாதி மண்ணினுல் இடர்கள் நீங்குகின்றன அல்லவா?

மற்ருேர் எடுத்துக்காட்டு

ஓர் அரசிளம் குமரி, மிக வனப்பு வாய்ந்தவள். நாள்தோறும் அந்தி மாலேயில் இறைவன் கோயி லுக்குச் செல்வாள். தோழி வழிபாட்டுச் சாமான் களே எடுத்துவரத் தான் அமைதியுடன் வழிபாடு செய்துவிட்டுத் திரும்புவாள். ஒரு நாள் ஓர் அராபிய வாலிபன் வாணிபத்தின்பொருட்டு அவ்வூருக்கு வந்தான். அன்று மாலே கோயி லண்டை அக்குமரியின் அழகைக் கண்டு அடக்க ஒண்ணுக் காமவெறி அடைந்தான். அது முதல் கோயில் அருகில் ஒரு மறைவில் நின்றுகொண்டு அவள் அழகைப் பருகுவான். காதல் மிகவே, தன் தொழிலேயும் மறந்து, வறியனுகி, உணவு உறக்கம் இன்றி உடல் மெலிந்தான். வெறியன் போலத் திரிவான். காதல் குறையவில்லே. அந்தி யின் போது அவளேக் கண்டு செல்வதே தன் கடமை ஆக்கினன். அவளது காட்சிக்காகவே உயிரையும் வைத்திருந்தான். அரசிளங் குமரிக்கோ அவனேயாவது அவன் காதலேயாவது தெரியாது. இவ்வாறு ஒருதலேக் காமம் வளர்ந்தது. அவ்வாலிபன் உணவும் உறக்கமும் இன்றிக் காதல் நோயுற்றுக் கோயில் அருகே உயிர் துறந்தான். கோயிற்காப்பாளர்கள் அப்பிணத்தை அகற்ற முயன்றும் அதனே அகற்ற இயலவில்லே. அச்செய்தி அரசன் செவிக்குச் சென்றது. பலரும் வந்து அரசன் ஆணேப்படி அப்பிணத்தைக் கிளப்ப முயன் ருர்கள். இளங்குமரியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அசைத்துப் பார்த்தார்கள். இறுதி யில் அக்குமரியும் வந்தாள். அப்பிணத்தைத் தொட்டாள். அப்பிணம் பெயர்ந்தது. என்ன வியப்பு! கைக்கிளேக்கும் இத்தனே ஆற்றல் உண்டா? 'இதுவும் என் விதியா?' என்று அவள் எண்ணி, அப்பிணத்தோடு தானும் உடன்படுத்து உயிர் துறந்தாளாம். இரண்டு உடல்களும் ஒரே இடுகுழியில் அடக்கம் செய் யப்பட்டனவாம். இவ்வித அதிசய இரட்டைச் சமாதி இன்றைக்கும் கதிரியில் காட்டப்படுகின் றது. இந்தச் சமாதியில் தற்போதும் ஆண்டு விழா நடைபெறுகின்றது. கவிஞர்கள் நாட்டுப் பாடல்தனேப் பாடியிருக்கிருர்கள். காதலர்கள் காதல் முற்றுப்பெறுதற்கும் ஊடல் தீர்ப்ப தற்கும், இந்தச் சமாதியின்பால் சென்று வழி பாடு செய்கிருர்களாம். இது உலயே சமாதி யின் ஆற்றலேக் காட்டும்.

இனியுமோர் எடுத்துக்காட்டு

வான் அளாவிய சோலே மரங்கள் நிரம்பிய செழிப்பான மருத நிலம். இருமருங்கிலும் மா, பலா, தென்னேந் தோப்புகள். கரும்பு, வாழை, நெற்பயிர்கள். இடையிலே ஒரு பெரிய நீண்ட பாதை. அது மேற்கே ஒரு பெரிய கோயிலுக்குச்

செல்லுகின்றது. அதன் வழியே ஆயிரக்கணக்கான மக்கள் நடந்து செல்லுகிறார்கள். ஓர் இளங்குமரன், அகன்ற நெற்றியினன் ; கூரிய கண்கள் வாய்ந்தவன், அவர்களிடையே செல்லுகிறான். அருகே செல்லுபவர்களை நோக்கி 'எதற்காக இத்தனைக் கூட்டம் செல்லுகிறது' என்றான். அவர்கள் 'உனக்குத் தெரியாதா ? புனிதக் கோயிலில் நாளை குடமுழுக்கு நடைபெறுகிறது. ஓர் ஒப்பற்ற சிற்பி உயர்ந்த ஒரு சிற்ப மண்டபத்தை அற்புதமாகக் கட்டியிருக்கிறான். திருவிழாவை நடத்தி வைக்க மன்னவனே வந்து இருக்கின்றான்' என்றார்கள். சிற்பம் என்றவுடனே அதனைக் கண்டு மகிழ்வதற்காகக் குமரனும் கோயிலுக்குச் சென்றான். கோயிலில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு சிற்பத் தூணையும் நுணுக்கமாக ஆராய்ந்துகொண்டே சென்றான். மூலையில் அமைந்திருந்த ஒரு குதிரை உருவத் தூணைக் கண்டு, சிறிது கலக்கம் கொண்டான். அருகில் இருந்த மக்களைப் பார்த்து, 'இச்சிற்பம் செய்தவன் யார்? அவன் தகுதி அற்றவன். இத்தூணில் குற்றம் இருக்கின்றது' என்று அஞ்சா நெஞ்சுடன் பேசினான். அதனைக் கேட்டவர்கள், 'அரசச் சிற்பியைப் பழுது கூறும் இவ்வாலிபன் எத்தனை துடுக்கு உள்ளவன்' என்று அவனை நிந்தித்து, மன்னன் முன்னிலையில் நிறுத்தினார்கள். மன்னனிடமும் அவன் சிறிதும் அஞ்சாது அதையே கூறினான். அருகில் இருந்த அரசச் சிற்பியோ சினந்து, 'நீ சொல்வதை நிரூபித்தால் என் உயிரையும் தருவேன்' என்று சூள் உரைத்தான். உடனே இளையவன், நிரம்பச் சந்தனம் கொண்டுவரச் சொல்லி அச்சிற்பத்திற்குப் பூசினான். சந்தனம் உலர்ந்தது. குதிரை உருவத்தில் ஒரு சிறு பகுதி மட்டும் உலராமல் ஈரமாகவே இருந்தது. அந்த இடத்தை உளியால் செதுக்க, அதன் உள்ளே ஒரு தேரையும் சிறிது மணலும் நீரும் இருக்கக் கண்டார்கள். தோற்றுப்போன முதிய சிற்பியோ தான் சொன்ன சூளுரைப்படி தன் கைவாள் உயர்த்தி, மார்பில் குத்திக்கொண்டு கீழே விழுந்தான். உயிர்போகும் முன் அவ்விளைஞன் யார் என்று வினவினான். அவனே இளமையில் கல்வி கற்கச் சென்ற தன் சொந்த மகன் என்று அறிந்து, மிக மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் உயிர் விட்டான். அச்சிற்பியின் சமாதியின்மீது ஓர் அரிய சின்னம் எழுப்பப்பட்டது. சிற்பம் கற்கச் செல்லுபவர்கள் அச்சமாதிக்குச் சென்று, வழிபாடு செய்யும் வழக்கமும் நாட்டில்ஏற்பட்டுவிட்டது. அவ்வழிபாட்டினால் உயர்ந்த சிற்ப ஞானம் வரும் என்பது மக்கள் நம்பிக்கை.

நாட்டரசன் கோயிலில் ஏட்டரசன் கோயில்

இந்த மூன்று எடுத்துக்காட்டுகளும் நாட்டுக் கதைகளிலும் நாட்டுப் பாடல்களிலும் காணப்படும் மேலோர்களின் சமாதிகளைப்பற்றிய வரலாறுகள் ஆகும். பொது மக்கள் அச்சமாதிகளை எந்த வகையில் வைத்துப் பாராட்டினார்கள் என்பது இவைகளால் தெளிவாகும். சமாதிகளை மக்கள் தொழுது வந்ததுமன்றித் தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளும் சின்னங்களாகவும் மதித்து வந்தார்கள். இவையெல்லாம் நம்பிக்கையின்பாற்பட்டன. சமயம், கல்வி, காதல்—இவைகளை அடிப்படையாகக் கொண்ட சமாதிச் சின்னங்களைக் கண்டோம். அவைகளை ஒட்டி விழாக்கள் நடைபெறுவதும் மிகவுண்டு. நமது நாடு மட்டுமோ? பிற நாடுகளிலும், பிற மொழிகளிலும், பிற சமயங்களிலும் சமாதித் தொழுகைகள் உண்டு. ஆகவே, கம்பன் கோயில் என்றவுடனே, இங்கேயும் அவ்வகைப்பண்டைக்கொள்கைகள்வழங்கலாம் என்று எண்ணி யானும் வந்தேன். நாட்டரசன் கோட்டையில் ஏட்டரசன் கோயில் இருப்பது பொருத்தம் அல்லவா?

ஒடுக்கத் திருநாள்

இங்கே வந்தவுடன் மக்களைக் கேட்டு அறிந்த அளவில் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக, இந்தத் தனித்த, அமைதி வாய்ந்த புனித இடத்தில் இக்கோயில் பாராட்டப்பட்டு வருகிறது என்று அறிந்தேன். இக்கோயிலைப் பரம்பரையாக நகரத்து வணிகக் குடும்பம் ஒன்று நடத்தி வருகின்றது என்றும் அறிந்தேன். இக்குடும்பம் மிகுந்த அன்போடு இவ் ஒடுக்கக் கோயிலைப் போற்றி வருகிறது என்றும், கம்பனின் ஒடுக்க நாளான பங்குனி அத்தத் திருநாளைப் பெரும் திருவிழாவாகக் கொண்டாடி வருகிறது என்றும் அறிந்தேன்.

ஒடுக்கம், கோயிலாக வளர்தல்

நமது தமிழ்நாட்டில் சமாதிகளுக்கு முந்நூறு ஆண்டுகளானால் அவை கோயில்களாகப் பரிணமிப்பது வழக்கம். அந்த வகையிலும் கம்பர் சமாதி ஒரு திருக்கோயிலாக ஆகி இருக்கிறது. இந்தச் சாமதிக் கோயிலில் சிவலிங்க உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்நாட்டு மக்கள் கம்பனை ஒரு சைவ

மகனைகப் போற்றி வருகிறார்கள் என்பது திண்ணம். காரைக்குடிப் பெருமக்கள் இந்தப் புனிதக் கோயிலில் நான்காவது நாள் திருவிழா நடத்தி வருகிறார்கள். முதல் மூன்று நாள்களும் காரைக் குடியில் பெருவிழாவாக நடத்தி நான்காவது நாளைப் புலவர் பெருமகனாரின் ஒடுக்க நிலையத்தில் தக்க புனித விழாவாக நடத்துவது மிகப் பொருத்தமேயாகும். இக்கருத்தையொட்டி இங்கே நடைபெறும் இந்நான்காவது நாள் திருவிழாவிலே நான் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி.

இங்குக் கம்பன் வந்தது

கம்பன் சோழ நாட்டில் பிறந்தவன். இளமையிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய வற்றிலுள்ள சிறந்தவையான, கணக்கற்ற நூல்களைப் படித்தவன். அவைகளில் கண்ட சொற்சுவை, பொருட்சுவை முற்றும் பருகினவன். பல நாடுகளையும் சுற்றி உலகப் பண்பாடுகளை அறிந்தவன். இக்கருத்துகளை அவன் நூலின் வாயிலாகவே நாம் அறியலாம். இந்தப் படி கல்வியில் புகழ் பெற்ற இக்கம்பன், தான் அறிந்தவைகளை உள்ளது உள்ளபடி நன்கு எடுத்துக் கூறும் வல்லமை பெற்று இருந்தான். அவன் நெஞ்சில் நல்லுணர்ச்சி ததும்பிக் கொண்டு எழுந்தது. அதனை உலகத்திற்கு அளிக்க வேண்டும் என்ற அவா பொங்கி இருந்தது. தான் கண்ட உண்மைகளை வெளியிடுவதற்குக் காத்துக்கொண்டே இருந்தான். அவன் பல இடங்களுக்குச் சென்றதாகவும், மக்களிடம் அளவளாவி இருக்கையில் பல அரிய பாடல்களைப் பொழிந்ததாகவும் கர்ண பரம்பரைகள் கூறுகின்றன. ஆனால், அவைகளுக்குச் சான்றுகள் இல்லை. வெகு தொலைவில் இருக்கும் எங்கள் கொங்கு நாட்டிற்கும் அவன் வந்ததாகக் கேள்வி. எங்கள் நாட்டார்கள் அவனை மறக்கவில்லை. தங்கள் திருமணங்களில் அவன் பாடித் தந்ததாகச் சொல்லும், 'திருமண வாழ்த்து' என்னும் ஒரு நெடிய அகவல் பாவை இன்றைக்கும் பாடுகிறார்கள். கொங்கு நாடு சென்று இருந்தால் கம்பன், பாண்டி நாட்டிற்கும் வந்து இருப்பான் அல்லவா? அதனால் தான் இந்த நாட்டு அரசன் கோட்டைக்கும் அவனுக்கும் மறக்க முடியாத தொடர்பு இருக்கின்றது. கொங்கு நாட்டிற்குத் திருமண வாழ்த்துத் தந்திருப்பவன், பாண்டி நாட்டிற்கு தன் திருமேனியையே தந்திருக்கின்றான். இந்தப் பெருமை பெற்ற புனித இடத்திலே நாம் இன்று இருக்கின்றோம். அவனைப்பற்றி இன்று நிரம்ப நினைவுகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இங்கு அவனது அடக்கம்

பல நாடுகளையும் சுற்றி, மக்கட்பண்பாடுகளையும் அறிந்து வந்த கம்பன், தான் அறிந்த பண்புகளை எல்லாம் உருவாக்கி இராமன் கதையில் புகுத்தி இருக்கிறான். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் அந்தச் செயலுக்கு ஆதரவாக நின்றார். அவ்வாதரவை ஒரு மன்னன் காட்டவில்லை; ஒரு சமயத் தலைவன் காட்டவில்லை; ஒரு மடத்தலைவன் காட்டவில்லை; ஒரு வேளாளன்தான் காட்டினான். தான் உலகில் பிறந்து வாழ்ந்து, அதில் அடைந்த பயன்களை நன்கு பாடிவிட்டுத் தான் அடங்குவதற்கு ஒரு புகலிடம் தேடினான். பட்டினத்தார் பேய்க்கரும்பை வைத்துக்கொண்டு தமக்கொரு ஒடுக்க நிலம் தேடினது போலக் கம்பனும் பல ஊர் சென்று இருக்கலாம். திருஒற்றியூரே தனது புகலிடம் என்று அறிந்த பட்டினத்துத் துறவியார்,

''ஒடுவிழுந்து சிப்பாயும் ஒன்பதுவாய்ப்
புண்ணுக்கு
இடுமருந்தை யான்அறிந்து கொண்டேன்—
கடுவருந்தும்
தேவாதி தேவன் திருஒற்றி யூர்த்தெருவில்
போவார் அடியில் பொடி''

என்று கூறிப் போந்து, கடற்கரையில் அடங்கினார். கம்பனும் பல நாடுகள் சுற்றி இங்கே வந்து, தக்க அமைதியிடம் இங்கு இருக்கக் கண்டான். இந்த இடம் கண்டால் எவன்தான் ஒடுக்க நிலைக்குத் தகுதியெனக் கூறமாட்டான்? நமது நெஞ்சங்கள் தற்போது அடையும் அமைதியையே அக்காலத்தில் கம்பனும் அடைந்து இருக்கலாம் அல்லவா ?

அமைதி இடம்

இயற்கை அமைதி பொருந்திய நிலம், சஞ்சலம் புகாத இடம், அழகிய நிலப்பரப்பு சூழ்ந்த இடம், பசுமை இலைகள் அடர்ந்த மரங்கள் வளர்ந்த இடம், தூய்மையான தென்றல் காற்று அடிக்குமிடம் — இவைகள் எல்லாம் ஒன்றுசேரின் சஞ்சலத்தில் உழலும் மனத்திற்குச் சாந்தி தோன்றும் அல்லவா? இது தான் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு சிறந்த பண்பாட்டு மகனுக்கு இறுதியில் கிடைக்கக்கூடிய

அமைதியாகும். இந்தத் தூய்மையான இடத்தில் நாம் அமைதியுடன் இருந்து அவனுடைய திருமுன்னர் அவன் உள்ளப்பாங்கைத் துய்த்து மகிழ்வோமாக !

III. கம்பன் கவிதை

புலமை ஓவியங்கள்

கம்பன் என்னென்ன கொள்கைகளை உண்டு செய்தும் கண்டு கொண்டும் அவைகளைப் பெருக்கியிருக்கிறான்? என்னென்ன முறையில் அவைகளைத் தன் கவிதைகளில் ஊட்டி அளித்திருக்கிறான்? இவ்வகைக் கேள்விகள் மிகப் பொருத்தமானவையாகவும், உணர்ச்சிஅளிப்பன வாகவும் உள்ளனவல்லவா? ''கல்வியில் பெரியன் கம்பன்' என்று உலகம் கூறும். ஆகவே, இக் கேள்விகளின் மூலம் அவனை ஆராய்ந்து அவனைச் சுவைத்தால் மிக்க பயனை நாம் அடையலாம். உலகில் எத்தனையோ கவிஞர்கள் தோன்றி இருக்கின்றனர். தங்கள் தங்கள் மொழிகளில் எத்தனையோ கவிதைகளை உண்டுபண்ணித் தங்கள் தங்கள் மொழிகளையும் நாடுகளையும் உணர்ச்சி ததும்ப ஊக்கி இருக்கின்றனர். அவர்களையும் அவர்கள் கருத்துகளையும் கம்பனுடனும் கம்பன் கருத்துகளுடனும் ஒத்துப் பார்ப்பதில் நல்ல பலன்களை நாம் அடைய முடியும் அல்லவா? அந்த வகையில் காரைக்குடிக் கழகம் நல்ல வேலை செய்து வருகின்றது. புலமையில் சிறந்தவர்களைக் கவிஞர்கள் என்று பொதுவாய்க் கூறுகின்றோம். தமிழ்நாட்டில் பண்டைய நாளில் அவர்களைக் கணக்காயர் என்றும், தற்போது எழுத்தாளர் என்றும் கூறுகின்றோம். இவர்கள் தாங்கள் படைக்கும் கருத்துகளை எழுத்து மூலமாக வெளியார்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். பண்டைய நாளில் கவிதை ஓவியங்களாகவும் அண்மை நாளில் உரைநடை, கவிதை என்று இருவகைகளாகவும் அறிவுறுத்துகிறார்கள். அன்னார்களுடைய கருத்தோவியங்கள் இரண்டு தன்மைகளாகக் காட்சி அளிக்கின்றன. அவ்விரண்டும் வெவ்வேறு பலன்களை அளிப்பது இயல்பே. அப்பலன்களுக்குத் தக்கபடி எழுத்தாளர்களின் புலமையும் கணிக்கப்படுகின்றது. இந்த இயல்பு தமிழ்மொழியில் மட்டுமே அன்று உலக முழுவதிலுமே பண்பாடு உடைய எல்லா மக்கள் மொழிகளிலும் உண்டு. அவ்வாறு மக்களுக்குப் பலன் தரத்தக்க முறையில் சேவை செய்த புலவர்களே உலகப் பெருமக்கள் ஆவார்.

இருவகைப் படைப்புகள்

இவ்விருவகைப் படைப்புகள் எவை என்று ஆராய்வோம். புலவர்களும் படைப்புக் கடவுளைப் போலக் கருத்துகளைப் படைப்பவர்கள் என்று தமிழ்ப்பெரியார் குமரகுருபரர் கூறி இருக்கின்றார் அல்லவா? அப்பெரியாரோ எழுத்தாளர்களைப் படைப்புக்கடவுளைவிட ஒரு படி உயர்த்தியே கூறிச் சென்றிருக்கின்றார். புலவனுடைய கருத்துகள் இரண்டு வகையில் தோற்றம் அளிக்கின்றன என்றோம். மக்களுடைய எண்ணப் போக்கை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுவது ஒன்று. இது ஒரு சிறந்த கண்ணாடியைப் போல எதிர் ஒளிப்பது. மற்றும் ஒரு சிறந்த புகைப்படம் போலச் சித்திரிப்பது. மற்றொன்றோ மக்களைத் தூண்டி உணர்ச்சி எழுப்பச் செய்வது. மந்தகதி உள்ள மக்களிலும் உணர்ச்சியை விளைவித்து முன்னேற்றத்திற்கு வழிகாட்டி உயர்த்துவது. இந்த வகை மனிதனை மனிதனாக ஆக்குவது மட்டும் அன்றி அமரனாகவும் செய்துவிடும். இவ்விருவகைப் பட்ட புலமைகளும் பற்பல நாடுகளில் தோன்றி அந்நாட்டு மக்களை உருவாக்கிவந்த செய்தியை, அந்நாட்டு இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன.

பொற்காலம்

இவ்விருவகைப் புலவர்களும் முதன்மை பெற்ற எல்லா நாடுகளிலும் தோன்றி இருக்கின்றார்கள். மேல் நாடுகளிலோ மிகச்சிறப்போடு விளங்கி இருக்கின்றார்கள். ஆங்கில நாட்டில் ஓவிய வகையினர் நிரம்ப இருந்திருக்கின்றார்கள். அவர்கள் காலததைப் பொற்காலம் என்று கூறுவார்கள். ஷேக்ஸ்பியர், மில்டன் வாழ்ந்த காலம், பொற்காலம் ஆகும். நாட்டு மக்கள் செல்வத்தில் சிறக்க வேண்டும் என்று கருதி வெளிநாடுகளுக்குச், சென்று பொருள் ஈட்டிச் செல்வாக்கில் முன்னேறின காலம். அவ்விரு ஆங்கிலப் புலவர்களும் மக்களுடைய மனப்போக்கை நன்கு அறிந்துகொண்டார்கள். தங்கள் நாடகங்களிலும் காவியங்களிலும் மக்களுடைய மனப்போக்கை எதிர் ஒலித்தார்கள். அவைகளால் ஆங்கிலேய இலக்கியம் உயர்ந்த நிலை அடைந்தது.

உணர்ச்சிக் காலம்

இனி, மக்களுடைய உணர்ச்சிகள் மங்கியிருந்தபோது அவர்களை எழுப்பிப் புத்துணர்ச்சிகளைத் தந்து தம் கவிதைகளால் புது மக்கள் ஆக்குவது எழுச்சிக்காலம் அல்லது மறுமலர்ச்

சிக் காலம் எனப்படும். ஆங்கில நாட்டில் இவ்வெழுச்சிப் புலவர்களில் ஷெல்லி, பைரன் என்பவர்களை முன்னணியில் வைப்பார்கள். கலைப் பண்பு, காதற்பண்பு — இவைகளில் புரட்சிக் கொள்கைகளைக் கவிஞர்களே தோற்றுவித்தார்கள். இவர்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்கள். இவ்வாறே மற்ற வெள்ளையர் நாடுகளிலும் இருவகைப் புலவர்கள் தோன்றி இருக்கின்றனர். பிரஞ்சு நாட்டில் ஹ்யூகோ, ஜெர்மனியில் கதே, ஸ்பெயினில் சர்வெண்டிஸ், இத்தாலியில் தாந்தே முதலியவர்கள் ஓவியக் கலைஞர்கள். ஆனல், பிரான்சில் வால்தார், ரூசோ, ருஷ்யாவில் டால்ஸ்டாய், ஜெர்மனியில் மார்க்ஸ் முதலியவர்கள் புரட்சிக் கலைஞர்கள். வெள்ளையர்கள் மொழியில் தோன்றின வேறுபாடு தமிழ் மொழியிலும் இருந்தது என்று அறியலாம்.

தமிழில் பாகுபாடு

தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்தைப் பொற்காலம் எனலாம். அச்சங்க காலத்துப் புலமையின் போக்கை ஒரு சிறிது ஆராய்வோம். உலக நிகழ்ச்சிகளை உள்ளதை உள்ளதுபோல விரிப்பதில் சங்கப் பாடல்களே சிறந்தவை. மனித உள்ளத்தில் எழும் நிகழ்ச்சிகளையோ புறத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளையோ எவை எடுத்துக் கூறிய போதிலும், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலில் சங்கப் பாடல்களைப்போல வேறு எவையும் தமிழில் இல்லை. தெளிவான கருத்துகள், பொறுக்கி எடுத்த சொற்கள், அவைகளை விளக்கும் சிறந்த உவமைகள்-இவைகளே சங்கப் பாடல்களில் தக்க பண்புகளாக அமைந்திருக்கின்றன. இவற்றை ஒன்று இரண்டு எடுத்துக்காட்டுகளால் விளக்குவோம்.

எடுத்துக்காட்டுகள்

''பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்
கழனி யூரன் மார்பு
பழனம் ஆகற்க எனவேட் டேமே''

இப்பாட்டில் காணும் அகப்பொருள் துறையைச் சற்று விளக்குவோம். ஒரு தலைவன் வேறு நாடு சென்றுவிட்டுத் தன் ஊர் திரும்புகிறன். தலைவியும் தோழியும் வரவேற்பதில் மகிழ்கிறார்கள். தான் ஊரிலில்லாத காலத்தில் இவ்விருவர் நெஞ்சமும் எத்தன்மையில் இருந்ததோ என்று தோழியைத் தலைவன் வினவுகிறன். தலைவி தன் தலைவனுடைய நலத்தையே கோரிக்கொண்டு அவனை எதிர்பார்த்தவண்ணமே இருந்தாள் என்றும், தோழியோ தலைவனுடைய மார்பு (நெஞ்சு) கரும்பும் நெல்லும் ஒருங்கு விளையும் கழனிபோல் இருக்கப்படாது என்று நினைத்ததாகவும் கூறினள். தலைவனுக்குப் பொருள் விளங்கிற்று. மதியில் சிறந்த தோழியை ஏன் கேட்டேன் என்று தன்னையே நொந்துகொண்டு ஏங்கினன் தலைவன். தோழி சொன்ன கருத்து என்ன? ஒரே கழனியில் பூப் பூத்துக் காய் காய்க்கும் நெல்லுண்டு. பூப்பூத்து விளைகின்ற கரும்பும் உண்டு. பூப் பூத்துக் காய் காய்ப்பவள் மனைவி. பூப்பூத்துக் காய்காய்க்காதவள் பரத்தை. காய் என்பது புதல்வர். அவன் நெஞ்சில் இவ்விருவர்பாலும் இடம் இருக்கக்கூடாது. வேறு இடத்திற்குச் சென்ற காலத்தில் தலைவன், தலைவியின் நினைவு கொள்ள வேண்டுமே ஒழியப் பரத்தையின் தொடர்பு இருக்கக் கூடாது என்பது தோழியின் கருத்து. இச்செய்யுளில் உள்ளுறை உவமம் சிறந்து இருப்பதைக் காண்க.

இனி,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா''

என்ற புறச்செய்யுளை ஆராய்வோம். இதில் சங்க காலச் சிறந்த புலவர் (இந்த நாட்டுப் பூங்குன்றனர்.) அந்தக் காலத்துத் தமிழர் பண்பாட்டை எவ்வளவு சிறப்போடு எழுத்தாளுகிறர். தமிழர்கள் சின்னஞ்சிறு குலங்களாகவும், குடிகளாகவும் வாழக்கூடாது, உலக மக்களாக வாழ வேண்டும்; எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் நண்பர் என்ற மேன்மைக் கருத்துக் கொண்டவர்களாக இருக்கவேண்டும்; ஒருவர்க்கொருவர் பகை கொள்ளாது நட்புக்குரியவர்களாக இருத்தல் வேண்டும் என்று கூறுகிறர். அது மட்டும் அல்ல; ஒரு மனிதன் தன் செயலுக்குத் தானே பொறுப்பு, பிறன் ஒருவன் நன்மையோ தீமையோ செய்ய இயலாது என்ற அரிய குறிக்கோளை உணர்த்துகிறர். தற்போது கோயிலில் ஒரு பூசாரி பணத்தைப் பெற்றுக்கொண்டு நல்ல கதி தருவதாகச் சொல்லும் இழிந்த நிலை அக்காலத்துத் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. இப்பாடல் எவ்வளவு அழகாகத் தமிழர் மனப்போக்கை எடுத்துக் கூறுகின்றது! இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளும் சங்க காலத்து மக்கள் பண்பாட்டை உள்ளது உள்ளபடி விரிக்கின்றன அல்லவா ?

எழுச்சிப் புலமை

இனி, இரண்டாம் தன்மையான எழுச்சிப் புலமைக்கு ஒன்று இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறுவோம். தமிழ்நாட்டில் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் சமய மறுமலர்ச்சிக் காலம் தோன்றிற்று. அதற்குள் சங்க இலக்கிய காலம் மறைந்துவிட்டது. மனித எண்ணப் போக்கை அறிந்து அதனை ஓவியமாகப் படைத்த காலம் போய்விட்டது. உள்ளது உள்ளபடி சொல்லுவதில் மக்களுக்குச் சுவை தோன்றவில்லை. வடநாட்டிலிருந்து வந்த சமண பௌத்தங்கள் மக்களுடைய கருத்துகளை மாற்றிவிட்டன. அப்புதுச் சமயங்கள் நாளடைவில் உணர்ச்சி அற்ற சமயங்கள் ஆகிவிட்டன. மக்களுக்கு அவைகளில் வெறுப்புத்தோன்றிற்று. உள்நாட்டுச் சமயப் பெரியார்கள் தோன்றினார்கள். நாட்டுச் சமயத்தைப் பெருக்கி மக்களை அதில் ஈடுபடுத்த விழைந்தார்கள். அப்போது தோன்றிய பெரியார்கள் நால்வர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், வாதவூர் அடிகள். இவர்களே சமய மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்கள். சமயத்தைப் பரப்பும்போது இச் சமயப் பெரியார்கள் இன்னிசையைத் தமக்கு உதவியாகக் கொண்டார்கள். ஆகவே, அவர்கள் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினவர்கள்' ஆனார்கள். அக்காலத்துச் சமண பௌத்தச் சடங்குகளை வெறுத்து அவை மறைவதற்குப் பணி செய்தார்கள். இப்பெரியார்கள் ஊட்டிய மறுமலர்ச்சி இதுகாறும் தமிழ் உலகத்தில் நிலவி வருகின்றது. அதே நூற்றாண்டுகளில் வைணவப் பெரியார்களாகிய ஆழ்வார்கள் தோன்றிப் பத்திச் சுவை சொட்டச் சொட்டப் பாசுரங்களைப் பாடினார்கள். இந்த வகையில் சமய பிரசாரமும், கல்விப் பிரசாரமும் மேல் எழும்ப, மக்களிடம் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. திருக்கோயில்களில் எல்லாம் தேவார முழக்கமும், பிரபந்தப் பேர் ஒலியும் எழுந்தன. இந்த உணர்ச்சி மக்களை நல்ல துறைக்கு முன்னேறச் செய்தது. ஆகவே, அக் காலப் பண்பாட்டை எழுச்சி இயக்கம் எனக் கூறலாம். நால்வர்களும், ஆழ்வார்களும் பொது மக்களைநல்வழிப்படுத்த, அவர்களைத்தொடர்ந்து மற்ற நாயன்மார்களும், ஆசாரியர்களும் அவ் உணர்ச்சி குறையாது மேல் ஓங்கச் செய்தார்கள். அக்காலத்தில்தான் பல்லாயிரக்கணக்கில் அழகிய துதிப்பாடல்கள் தோன்றின.

இரண்டு வகையில் கம்பன் காட்சியளிப்பது

இந்த வகையில் ஓவியப் புலமையும் மறுமலர்ச்சிப் புலமையும் தனித்தனியாக நாட்டில் தோன்றினதைக் காண்கின்றோம். ஆனால், இந்த இரண்டு வேறுபட்ட நோக்கங்களையும் ஒருவனே தன்னில் கொண்டு விளங்கினது உண்டா என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. ஆம், அப்படிப்பட்ட மேதை ஒருவன் தமிழ்நாட்டில் தோன்றி, இருவகை நோக்கங்களையும் நிறைவேற்றி, அவற்றின் பலன்களை உலகுக்கு ஈந்தான். ஈந்ததும் மட்டும் அல்ல, தன்னுடைய வாழ்க்கையிலேயே 'வாழ்வாங்கு வாழ்ந்து' ஒப்பற்ற புகழும் பெற்றான். அந்தப் பெருமகன்தான் நமக்கு எதிரே கோயில் கொண்டிருக்கும் தூய வாழ்வினனான கம்பன் என்னும் புலவர் பெருமகன் என்று அறிய வேண்டும். இப்பெருமகன் தான் கவிச்சக்கரவர்த்தி என்ற, அழியாத, உயரிய பெயரில் பல நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் தோன்றியவன்.

அதற்கு ஏற்ற கால நிலை

இனி, கம்பன் வாழ்ந்த காலத்தின் நாட்டு நிலை எவ்வாறாக இருந்தது என்று சிறிது நினைவு ஊட்டுவோம். தமிழ் மொழியில் இலக்கியப் பொற்காலம் கடந்துவிட்டது. பின்னர் எழுச்சிக் காலம் நன்கு தோன்றி மறைந்தது. மக்கள் தங்கள் பெருமையை உணர்ந்து, அரசியலிலும் செல்வாக்கிலும் சிறந்து விளங்குவதன் பொருட்டு நற்கலைத் தொழிலில் இறங்கினார்கள். தமிழ்மக்களுடைய பண்பாட்டை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அச்காலச் சோழர்கள் கடல் கடந்தும் நாவாய்களைச் செலுத்தியும் பிற நாடுகளுக்கும் தீவுகளுக்கும் சென்றும் தமிழ்ப் பண்பாட்டை யாவரும் அறியச் செய்தார்கள். அதனை உலக உரிமையாகவும் ஆக்குவித்தார்கள். தமிழ்அன்னையை அரியாசனத்தில் அமர்த்திச் செங்கோல் ஓச்சிவரச் செய்தார்கள். அறுபத்து நான்கு கலைகளிலும் அவள் சிறந்து விளங்கினாள். சாவகம், கடாரம், காம்போஜம், விஜயம் முதலிய கீழ்நாடுகளுக்குத் தமிழர்களின் உயர்ந்த கலைகள் கொண்டு செலுத்தப்பட்டன. இலக்கியங்கள், கல்வெட்டுரைகள், சிற்பங்கள், ஓவியங்கள், இன்னிசைகள், கட்டட ஒழுங்குகள்- இவையெல்லாம் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இப்படிப்பட்ட மேன்மையான நிலைமைகளுக்கு இலக்கியத்தின் மூலம் அடிகோலின பெருமகன் கம்பன் எனச் சொல்லின் மிகை இல்லை.

கம்பன், தமிழ் மகனுடைய வாழ்க்கைப் பெருமையை வெளியிடும் முறையில் ஒப்பற்ற வழிகளைக் கைக்கொண்டான். அவன் ஒரு வடநாட்டுக் கதையைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டாலும், அதிலே தமிழ் மக்களுடைய பண்புகளைப்புகுத்திவிட்டவகையில் வடநாட்டுக் கதையைத் தமிழ்மயம் ஆக்குவித்தான். அவன் விவரித்த நாடு, தமிழ்நாடு; ஆறு, தமிழகத்து ஆறு; மக்கள், தமிழ் மக்கள்; வாழ்க்கை வரலாறு, தமிழ்நாட்டு வழக்கு — இவைகளைக் காணும்போது, தான் வாழ்ந்த நாட்டின் வரலாற்றையே தான் எடுத்துக்கொண்ட கதையில் இணைத்துவிட்டான். கம்பனுடைய இராமன் ஒரு தமிழ் மகன்; அவனுடைய சீதை ஒரு தமிழ்ப்பெருமாட்டி. இருவருக்கும் தோன்றிய காதல் தமிழகக் காதலே. இலக்குவனும் பரதனும் தமிழ்த் தம்பிமார்கள்; தாய்மார்களும், தமிழ்த் தாயரே. வாலி, சுக்கிரீவன், ஹனுமான் என்றவர்களைக் குரங்குகள் என்று சொன்னாலும் அவர்களைக் கம்பன் தமிழினத்தார் ஆக்கிவிட்டான். இதுமட்டுமோ? இராக்கதர்கள் என்னும் இராவணன், கும்பகர்ணன் முதலியோரும் தமிழ்நாட்டு அரசியலையே பின்பற்றியுள்ளார்கள். இவ்வாறு வடநாட்டுக் கதையில் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையைக் கம்பன் சித்திரித்துவிட்டான். கதையை விரித்துக்கொண்டு போகும்போது ஒவ்வொரு பகுதியிலும் தமிழ் மயம் புகுந்து விட்டது. ஆகவே, அக்காலத்து மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு பிரதிநிதியாகவே கம்பன் விளங்குகிறான். இந்த வகையில் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் கம்பன் சிறந்து விளங்கினான் என்க.

அவன் உணர்ச்சி தூண்டியது

மேலே விவரித்த இரண்டாவது தன்மையிலும் கம்பன் விளங்கினான் என்றால், அது வியப்பு அல்ல. மாறுபட்ட இரண்டு நோக்கங்களை ஒரே புலவன் கொண்டு இருக்க முடியுமா என்றால், அது அரிதுதான். ஆனால், கம்பன் போன்ற பெருமக்கள் அதற்குப் புறநடை என்று சொல்ல வேண்டும். கம்பனைக் குறித்த மட்டில் அதில் வியப்பு இல்லை. தமிழ் மக்களைச் சிறந்த மக்கள் ஆக்குவதற்குத் தன் காப்பியத்தில் அரிய உணர்ச்சி ததும்பப் பாடல்களை எழுதியிருக்கிறான். மந்த கதி மக்களையும் ஊக்கிச் சுறுசுறுப்பு உள்ளவர்கள் ஆக்கிவிட்டான். தாமச குணத்தை இராஜசமாகவும் இராஜச குணத்தைச் சாத்துவிகம் ஆகவும் அவன் வளர்த்திருக்கிறான். இவ்வகை ஆற்றல் பெற்ற கவிதைகள் அவன் நூலில் நிரம்ப உள்ளமையால் அவனுடைய காவியம் ஓர் ஒப்பற்ற உணர்ச்சி நூலாகும். அவன் நூல் சென்ற பத்து நூற்றுண்டுக்கும் மேலாக நாட்டு மக்களைத் தன் வயப்படுத்தி நன்மக்களாகச் செய்து வருகிறது. இல்லாவிடில், ஒரு வடநாட்டுக்கதை இத்தனை வலிவு உள்ளதாகக் குன்றாப் பெருமையுடன் விளங்குமா? தமிழ் இலக்கியத்திற்குக் கூற முடியாத இடையூறுகள், மக்கள் அறியாமையினாலும், பிற நாட்டு ஒறுத்தல்களாலும் ஏற்பட்டிருந்த போதிலும் பொது மக்கள் கம்பனைச் சுவைப்பதை விட்டுவிடவில்லை. ஆகவே, அவன் நூலின் பெருமை மிகுந்த வலிவோடு தோன்றியுள்ளது அல்லவா?

அவன் கண்ட கனவு

நாடு, மக்கள், அரசியல் — இவை எவ்வாறு அமைய வேண்டும் என்று எண்ணிக் கம்பன் ஒரு கனா உலகத்தைக் காணுகிறான். திருவள்ளுவர் கண்ட கனவிலும் அது வேறுபட்டது அல்ல. கிரேக்க நாட்டுப் பிளேட்டோ கண்ட 'மக்கட்குடியரசு', ஆங்கிலத் தாமஸ் மோர் கண்ட 'உடோப்பியா' என்பவை கம்பன் கண்ட கனவுலகம் போன்றவையே. பிளேட்டோவையும் மோரினையும் இரசிக்கிற வெள்ளையர்கள் கம்பன் கனவைக் கண்டிலர். இரப்பவர் இல்லா நாடொன்றைப் படைத்தான். ஒரு வறியன் ஒரு செய்நிலத்தைத் திருத்திப் போதிய விளைவை எடுப்பது போல் மன்னன் தன் அகன்ற சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தான் என்பதும், மக்கள் நலத்தையே போற்றும் அரசியல் ஏற்படலாம் என்பதும் எல்லாம் கம்பன் கண்ட கனவுகள். இத்தகைய சீரும் சிறப்பும் ஒரு நாடு கொண்டது என்றால் அதனைப் படிக்கும் மக்கள் ஏன் உணர்ச்சியில் முன்னேறார்? கல்லையும் பொன்னையும் ஒன்றாக எண்ணினார் அப்பர். அதுபோல், இராமன் முடியேற்க இருந்த நாளில் சடையேற்றுக் காடு சென்றான். அதனால் அவன் எக்கவலையும் கொள்ளவில்லை. மேலும், இலக்குவன் காட்டில் பணிவிடை செய்தல், சீதை அணிகளை எறிந்து துவராடை கட்டிக்கொண்டு கல்லிலும் முள்ளிலும் நடத்தல், பரதன் அரசை வகிப்பதற்கு மாறாகப் பாதுகைகளைத் தலையில் சூட்டிக்கொள்ளுதல்— இவை போன்ற செயல்களைப் பிற நாடுகளில்

காண முடியுமா? வேடனுகிய குகனையும் குரங்குகளான சுக்கிரீவ அனுமான்களையும், அரக்கனுகிய வீடணனையும் தன் சொந்த உற வினர்களைப் போல நடத்துவது தற்கால வகுப்பு வாதத்திற்கு எத்தனை எதிரிடையானது! இராமன் வாலியைக் கொன்றது சரியா என் பதைப் பகுத்தறிவுள்ள ஒரு நீதிமானைப்போல உரையாடல் மூலம் கம்பன் வெளிப்படுத்தியது எத்தனை உணர்ச்சி தரும் செய்தி! அனுமான் தூது சென்றபோது சீதையைக் காணுது துயர் உற்றகாலை, 'இராவணனைக் கொன்று, சீதையை மீட்டுவேன்' என்று முதலில் எண்ணி ஞலும், பின்னர் 'அது தூதனின் குறிக்கோள் அன்று' என்று கூறி, 'ஒன்று ஊக்கி, ஒன்று இழைத்தல் உணர்வுடைமைக்கு உரித்து அன்று' என்று அனுமான் வாயில் கம்பன் வைத்தது பொன்னெழுத்தால் பொறிக்கக்கூடிய சொற்கள் அல்லவா? போரில் இராவணன் படைகளை இழந்து தனிமையில் நின்றபோது, இராமன் இரக்கம் கொண்டு, 'இன்று போய்ப்போர்க்கு நாளை வா' என்று கூறிய கம்பீரச் சொற்கள் எத்தனை சிறப்புவாய்ந்தன! இவைகளைப் போலக் கணக்கற்ற எடுத்துக்காட்டுகளால் கம்பன் மக்களின் உணர்ச்சிகளையெழுப்பி இருக்கிருன். தூங்கிக்கொண்டு இருந்த ஒரு நாட்டினரைக் கம்பன் தட்டி எழுப்பினன் அல்லவா? ஆகவே இந்த இரண்டு வகைகளிலும் கம்பன் கவிகள் நாயகம் என விளங்குகிருன்.

அவன் சுவைத்ததும் அவனைச் சுவைத்ததும்

இவ்வண்ணம் ஒப்பற்ற பெருமையில் திகழ்ந்த கம்பன் முந்தைய அறிஞர்களால் எவ் வாறு பயன் பெற்ருன், பிந்தியவர்கள் அவனை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார்கள் என்று ஆராய்வது ஒரு சிறந்த முறை. இந்த முறையையே எடுத்துக்கொண்டு இன்றைய கூட்டத்தில் நான்கு பெருமக்கள் பேசப் போகின்ருர்கள். கம்பனுக்கு முந்தியவர்கள் சிவனடியார்கள் ஆன நால்வர்களும் திருமால் அடியார்கள் ஆன ஆழ்வார்களும் ஆவார்கள். அவர்களிடமிருந்து கம்பன், அகப்பை அகப்பை யாகச் சொல்லையும் பொருளையும் சுவைத்துப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிருன். இந்த வகையில் முந்தைய எழுத்தாளர்களின் கருத்து களைத் தன் கவிதைகளில் எதிர்ஒளிப்பித்துப்படம் பிடித்திருக்கிருன். ஆகவே, ஒவியத் தன்மையை இந்த வகையில் அவனிடம் காண்கிருேம். இனிக் கம்பனுக்குப் பிந்தியவர்களான பாரதியாரும் வள்ளலாரும் கம்பனை நன்கு சுவைத்து, அவனிட மிருந்து உணர்ச்சிகளைப் பெற்றுத் தற்கால மக் களுக்கு அவன் கருத்துகளை ஊட்டியிருக் கிருர்கள். இந்த வகையில் கம்பனுடைய உணர்ச்சித் தத்துவத்தை இவ்விருவரும் பரப்பி மக்களை முன்னேற்றத்திற்கு வழிகாட்டி இருக் கிருர்கள். இவ்வண்ணம் கம்பனை இரண்டு வகையாகவும் நமக்குக் காட்ட இருக்கிருர்கள்.

IV. பின்னுரை

நால்வரும் கம்பரும்

முன்னுரையில் கூறியபடி, கம்பனில் எவ் வாறு இரண்டு வகைத் தத்துவங்கள் இருந்தன என்பதை இன்று பேசிய நால்வர்களும் ஒத்துக் காட்டி இருக்கின்ருர்கள் என்று கூற முடியும். கம்பனுக்கு முந்தி இருந்தவர்களான நால்வர் களிடம் கம்பன் எவ்வாறு கருத்துகளை எடுத் துக்கொண்டான் என்பதை ஒரு நண்பர் பேசி ஞர். தேவாரம், திருவாசகம்-இவைகளில் கண்ட ஐதீகங்களையும் கருத்துகளையும் கம்பன் எடுத் துக்கொண்டு தனது நூலில் எடுத்து உரைத் ததை அந்நண்பர் எடுத்துக்காட்டினுர். எடுத்துக் காட்டாகச் சிவபெருமான் நஞ்சுண்ட கதையை, உலகம் அழிந்து போகாமல் பாதுகாக்கும் பொருட்டுத் தானே நஞ்சை உண்டு தியாக உணர்ச்சி எதுவென்று காட்டினது ஒன்று ஆகும் இதனைக் கம்பனும் கூறி இருக்கிருன் என்ருர். இராவணன் ஆணவத்தினுல் கயிலையை எடுக்கச் சிவபெருமான் விரல் ஊன்றிய வகையில் அவன் நசுங்கிப் புலம்பி அழுது பெருமானை வழி பட, அவன் மன்னிக்கப்பட்டான். இது தேவா ரத்தில் பரந்து கிடக்கும் ஒரு செய்தி. கருணைத் திறமாகிய இதனைக் கம்பன் எடுத்தாண்டு இருக் கிருன் என்றும் கூறினுர். வாலி, சுக்கிரீவன், சம்பாதி முதலியோர்கள் இறைவனைப் பூசித்த செய்தி தேவாரத்தில் காண்கிருேம். மண் டோதரிக்குச் சிவபெருமான் அருளால் கற்பு சிறந்து விளங்கக் கணவன் உயிர் துறந்ததும் தான் உடனே உயிர் துறந்த செய்தி திருவாச கத்தில் கூறப்பட்டபடி கம்பன் எடுத்தாண்டு இருப்பது வியக்கத்தக்கதே. இது வான்மீகத் தில் இல்லை. இந்த வகையில் இராமன் கதை கூறவந்த கம்பன், அடிக்கடி சிவசரிதைகளைக் கூறி இருப்பது, அவனுடைய கல்வியின் பரவலை யும் சமரசப் பான்மையையும் காட்டுகிறது.

இனி, ஆழ்வாராதியரின் கருத்துகளைச் சொல் நயம், பொருள் நயம் உட்பட எடுத்துக்

கொண்டு எந்த வகையில் சம்பன் ஆண்டிருக்கின்றான் என்று மற்றொரு நண்பர் விளக்கினார்.

ஆழ்வார்களும் கம்பரும்

கம்பனுடைய ''இராமாவதாரம்'' ஒரு விரி நூல் என்று கூறினால், அதற்குத் தொகை நூலாகக் குலசேகர ஆழ்வாருடைய 'அங்கணெடு' என்ற சித்திரகூடப் பதிகம் அமைந்தது என அறியலாம். இது எவ்வாறு எனில், சுந்தரருடைய திருத்தொண்டத்தொகையிலிருந்து சேக்கிழார் பெரியபுராணம் பாடியதை ஒக்கும் என்க. குலசேகர ஆழ்வாருடைய சொல்லையும் பொருளையும் கம்பன் வெகு உருக்கமாக எடுத்துக் கொண்டு தன் நூலில் அமைத்திருக்கிறான். இனித் திருமங்கை மன்னனின் சொற்களையும் கருத்துகளையும் நன்றாகக் கம்பன் சுவைத்ததும் அன்றி, வான்மீகத்திலிருந்து கருத்துவேறுபாடு காட்டுகையில் அம்மன்னனுடைய கருத்துகளையே தழுவிக் கையாண்டு இருப்பது நோக்கத்தக்கது. பெருமானுடைய சிறப்புகளைக் கூறும்போதும், (படலத் துதிகள் காண்க) திருமகளின் ஏற்றத்தை விளக்கும்போதும், ஆழ்வார்களின் எண்ணங்களையே கம்பன் பிரதிபலிக்கிறான். இறைவனுடைய தத்துவங்களைக் கூறும் காலத்து வால்மீகியைவிட ஆழ்வார்களையே தனக்கு இயைந்த மூலமக்களாகக் கம்பன் எடுத்தாண்டு இருக்கிறான். அதுபோலவே, நம்மாழ்வாருடைய பாசுரங்கள் கொண்டிருக்கும் சொற்சிறப்பு, பொருட்சிறப்பு இவைகளை ஆங்காங்கு கம்பன் எடுத்தாண்டு இருப்பது ஒரு சிறந்த ஆராய்ச்சியாகும். இராமாவதாரம் ஒரு தனிச் சமய நூலாகக் காணப்படாமல் போனபோதிலும் ஆழ்வார்களின் ஆழ்ந்த கருத்துகள் இந்நூலில் எடுத்து ஆளப்படுவது கம்பன் கொண்ட ஒரு பெருமையாகும்.

பாரதியாரும் கம்பரும்

இனி, உணர்ச்சித் தத்துவத்தைக்கொண்டு மக்களைத் திருத்திய வகையில் நம் நாட்டில் பிற்காலத்தில் தோன்றியவர்கள் பாரதியாரும் வள்ளலாரும் ஆவார்கள். இவர்கள் எந்த வகையில் கம்பரைச் சுவைத்துக் கம்பனால் ஊக்கப்பெற்றார்கள் என்பதைப்பற்றி மற்ற இரண்டு பெரியார்கள் பேசி இருக்கின்றார்கள். இவர்களில் பாரதியார் கம்பரிடம் எடுத்துக் கொண்ட கருத்துகளை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார் என்பதை ஒரு நண்பர் பேசினார். அந்த வகையில் கம்பனை எந்த உயர்ந்த நிலையில் பாரதியார் வைத்திருந்தார் என்ற கொள்கைக்குச் சில மேற்கோள்களும் கூறினார்.

''யாம்அறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை,வெறும் புகழ்ச்சி யில்லை.''

என்று பாரதியார் கூறிய வகையில், மூன்று பெரும் புலவர்களில் கம்பனுக்கு முதல் இடம் தந்தது மிகத்தெளிவு எனப் பேசினார். மேலும், 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு, கல்வியில் சிறந்த தமிழ் நாடாகப்' பாரதியார் கொண்டு இருக்கிறார் என்றும் விளக்கினார். இனிக் கம்பன் கவிதையைச் சுவைத்ததும் அன்றி அவன் மானிட வர்க்கத்திற்கே ஓர் எடுத்துக் காட்டாகத் தோன்றி இருக்கிறான் என்பதை வெகு உருக்கமாக, 'கம்பன் என்று ஓர் மானுடன் வாழ்ந்ததும்,' என்ற ஒரு பாட்டில் நுழைத்து இருக்கிறார் என்றும் கூறினார். இவை முதலாகிய மேற்கோள்களில் கம்பனைப் பாரதியார் அனுபவித்த பெருமையை நமது பேச்சாளர் விரித்துரைத்தார். மேலும் நமது பேச்சாளர் பாரதியாரின் கொள்கைகளை விரித்துப் பேசினபோது 'இங்கே இந்தப் பிறப்பில், அமரத்துவம் அடையலாம்,'' என்ற கொள்கையைப் பல இடங்களில் வற்புறுத்திருக்கக் காட்டினார்கள். ஆதே கொள்கையைக் கம்பனிடமும் காணலாம் என்றும் கூறினார். இந்த வகையில் பாரதியார் கம்பனை உணர்ந்த செய்தி கூறப்பட்டது.

வள்ளலாரும் கம்பரும்

இனி, அடுத்தபடியாக இராமலிங்க வள்ளலார் எந்த வகையில் கம்பனை ஆண்டு இருக்கின்றார் என்று ஒரு நண்பர் பேசினார். மற்றப் புலவர்கள் கம்பனை ஆண்ட அளவு வள்ளலார் ஆளவில்லை என்பது வெளிப்படை. ஆனாலும் கம்பனுடைய சொல் நயம், பொருள் நயம் இரண்டும் வள்ளலாருடைய செய்யுட் போக்குக்கு அடிகோலி இருக்கின்றன என்று காட்டினார். ஓர் எடுத்துக்காட்டாக, அவர் 'தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே' என்ற கருத்தை வள்ளலார் பாடிய 'எப்பாரும் எப்பதமும் எங்கணும்யான் சென்றே இறைவ நினதுஅருட் புகழை இயம்பிடல் வேண்டும்' என்ற அடிகளில் காண்போம். மற்றும், இறைவனுடைய சோதித்தன்மையும், கருணைத் தன்மையும் வள்ளலார் கம்பனுடைய காவியத்தில் நன்கு

விளக்கி இருக்கக் கண்டு இருப்பார் என்றார். இந்த வகையில் கம்பனால் வள்ளலார் பயன் பெற்றதை நண்பர் எடுத்துக் கூறினார்.

உரைச்சுருக்கம்

இதுவரை கூறிய கருத்துகளைத் திரட்டிச் சுருக்கமாகக் கூறும் இடத்து, கம்பனைச் சுவைக்கும்போது இரண்டு பெரும் தன்மைகளை அவனிடம் காண்கின்றோம். அவைகளில் ஒன்று, அவன் காலத்து மக்களின் மனப்போக்கை உள்ளது உள்ளபடி உணர்ந்து உரைத்துப் படம் பிடித்தது. மற்றொன்று, மனிதனை மனிதனுக்குவதற்கு அவன்பால் அடங்கி இருந்த உணர்ச்சிகளை எழுப்பி அவனை முன்னேறச் செய்தது என்பவைகளே. முதல் தன்மைக்கு நால்வர்கள், ஆழ்வார்கள் — இவர்களின் கொள்கைகளை அறிந்து விரித்துரைத்தது. இரண்டாம் தன்மைக்குப் பாரதியாரும் வள்ளலாரும் கம்பனைச் சுவைத்து உணர்ச்சியைப் பெற்றுத் தாங்கள் அவ் உணர்ச்சியால் மக்களைச் சீர்திருத்த முயன்றதாகும். இவ்விரண்டு தன்மைகளையும் விரித்துரைக்க இரண்டு இரண்டு பெருமக்கள் தங்கள் பேச்சுகளால் உரைத்தது மிகப்பொருத்தமாகும். இந்த அமைப்பை ஏற்படுத்திக் கம்பன் கோயிலில் அக்கருத்துகளை பரப்பிய காரைக்குடிக் கம்பன் கழகம் செய்த உதவி கம்பன் புகழுக்கு மிகப் பொருத்தமாகும் அல்லவா?

நாட்டரசன் கோட்டை கம்பன் ஒடுக்கக் கோவிலில் நான்காம் நாள் பேரவையில் நிகழ்த்தியது.

கவிதா தீபம்

வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.

(1941-ல் கம்பன் திருநாளில் ஆற்றிய உரை)

கம்பர் ஒரு கவிதா தீபம். அவர் மகா கவிகளில் ஒருவர். அவர் கவி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவர் உண்மைக் கவிதையை உணர்ந்தவர். உண்மைக்கவிதை யாது ? அழகு தான் கவிதை ; உண்மைதான் கவிதை. வெறும் வார்த்தைகள் கவிதையல்ல. அழகையும் உண்மையையும் ஆராதிப்பவனே உண்மைக் கவி.

அழகுச்சுடர், ஒரு கவியின் சன்னதம் நிறைந்த அகக்கண்ணில், ஒளிபரப்பி ஒசை வடிவமாகின்றது. கவி ஹிருதயம் தனிப்பட்ட பண்புடையது. கவியின் கண்ணுக்குத் தோன்றும் காட்சியெல்லாம் அற்புதங்களாய் அமைகின்றன. ஒரு பறவையை எடுத்துக்கொள்ளுவோம். கவியினுடைய கண்ணுக்கு அது பல தோற்றங்களை அளிக்கிறது. அது ஜிவ்வென்று சிறகடித்து, விண்ணிற்பறக்கும்போது, சிறகற்ற மனிதனைக் கண்டு நகைப்பதுபோலத் தோன்றுகிறது. என்ன அழகு! அஸ்தமிக்கும் சூரியன் கொலைக்களமாக உலகத்தைச் சித்திரிக்கின்றான். சந்திரிகை, காதலைக் கிளறி, உணர்ச்சிக் கடலின் கொந்தளிப்பை வளர்க்கின்றது. இரவு, மௌன விழாவைக் கொண்டாடுகிறது. நட்சத்திரங்கள் ஒரு கவியின் உள்ளத்திற்புகுந்து ஜோதிச் சுடர் வீசி சொற்சித்திரங்களாக வந்து குவிகின்றன. கவி ஹிருதயம் இயற்கையைப் படமாகப் பிடிக்கிறது.

*　*　*

கம்பனிலிருந்து ஒரு கற்பனைச் சித்திரத்தை, இயற்கைக் காட்சியை எடுத்துக் கொள்ளுவோம். இராமன் முடி சூட்டு விழாவை அலங்கரிப்பதற்கு, ஆகாய வீதியில் நட்சத்திரக் கூட்டங்கள் அழகிய பந்தர்போல் அமைந்து மின்னிப் பொலிந்தன. ஆனால், கொடிய கைகேசியின் தடையால் விழா நின்றதும், விழாவுக்குப் போட்ட பந்தரைப் பிரித்தது போல் நட்சத்திரங்கள் வானில் மறைந்து ஒழிந்தன.

'விரித்த பந்தர் பிரித்த தாமென
மீனொ ளித்தன வானமே''

இது கம்பரின் அற்புத வாக்கு. என்ன கற்பனை! எவ்வளவு அழகிய சித்திரம்! எப்படி இன்பமும் துன்பமும் கலந்து காட்சியளிக்கின்றன? சிந்தியுங்கள்.

*　*　*

காதற்கனலால் உருகி வாடித் தயங்கி நிற்கும் சீதையின் உள்ளத்தில் அந்தி மாலை எழுப்பும் சிந்தனைக் கடலை ஆழ்ந்து நோக்குங்கள். அவள் மனக்குழப்பத்தைப் பாருங்கள். கவி எப்படி வருணிக்கிறார்? 'ஆஹா! என்ன இருட்டு! 'கருங்கும்' என்று இருக்கிறது. விஷம் தான் இப்படிக் கருமை நிறத்துடன் வந்திருக்கிறதோ? அல்லது நீலக்கடல்தான் இங்கு நீண்டு வந்ததோ? இராமன் நீல நிறமே இவ்விருளாய்ப் போந்ததோ? காலன் நிறந்தான் இதுவாய்ச் சமைந்ததோ? என்னே! என் மனத்தைத் துன்புறுத்தும் இவ்விருளை எப்படி வருணிப்பது? தொலையாத இவ்விருள் விடமாகவும் கூற்றாகவும் தோன்றி என் உயிரை மாய்க்கின்றதே! இராமன் நிறத்தை நினைவூட்டி வருத்துகின்றதே' என்று சோர்வுக் கடலில் மூழ்குகிறாள்:

'' ஆலம் உலகிற் பரந்ததுவோ?
ஆழி கிளர்ந்த தோ?அவர்தம்
நீல நிறத்தை எல்லாரும்
நினைக்க அதுவாய் நிரம்பியதோ?
காலன் நிறத்தை அஞ்சனத்திற்
கலந்து குழைத்து ஆகாயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ?
விளங்கும் இருளாய் விளைந்ததுவே!''

இந்தக் கவி ஒரு சித்திர ரூபமாகக் காட்சியளிக்கிறதல்லவா? படிக்கும்போது படம் எழுத வேண்டுமென்ற நினைப்பு வருகிறது. ஆனால் ஐயோ! என்று எழுதுகோல் சாய்கிறது! எந்த ஓவியக்காரனும் எழுத முடியாதென்பது தெரிகிறது.

*　*　*

பொங்கும் இருளும், பொலியும் சந்திர னும், சீதையின் காதல்தீ நிறைந்த உள்ளத்தை எப்படி வாட்டுகின்றன பாருங்கள்! கம்பன் பாஷையில் இருள் கருநெருப்பாகிறது; சந்திரிகை வெண்ணெருப்பாகிறது. என்ன மாற்றம்! என்ன உணர்ச்சி!

''ஓங்கா நின்ற இருளாய்வந்து
உலகை விழுங்கி மென்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி
னிடையே எழுந்த வெண்ணெருப்பே.''

இது ஓர் அபூர்வமான வாக்காகும். (Rare expression.)

* * *

கவியும் ஓசையும் இணைப்புடையவை; ஓசையுடைந்தால் கவி உடையும்; சொற்கள் சிதறும்போது எண்ணங்கள் சிதறும்; சொற் களின் ரீங்காரத்தின்போது எண்ணங்கள் பாடும்; இசை ததும்பும். யுத்த காண்டத்தில் மூல வதைப் படலத்திலுள்ள ஒரு கவியைப் பார்ப் போம்.

'' படுமத கரி,பரி சிந்தின;
பனிவரை இரதம விந்தன;
விடுதிசை செவிடு பிளந்தன;
விரிகடல் அளற தெழுந்தன;
அடுபுலி அவுணர்தம் மங்கையர்
அலர்விழி அருவிகள் சிந்தின ;
கடுமணி நெடிய எனும்சில
கண,கண, கண,க ணெனும்தொறும்''

இக்கவியில் இசை துள்ளிக் குதிக்கிறது; தாள அறுதி தெரிகிறது. யானை விழுகிறது; குதிரை சாய்கிறது; இரதம் ஒடிகிறது; யாவும் தவிடு பொடியாகின்றன! எங்கும் பேரொலி! எங்கும் இரத்தப் பெருக்கு! எதிரிகள் யாவரும் மடி கின்றனர். அவர்தம் மங்கையர் அழுது கண் ணீர் வடிக்கின்றனர். சில நாண் 'கண கண' என்ற சப்தத்தோடு சப்திக்கும். ஒவ்வொரு க்ஷணமும் எங்கும் துடிதுடிப்பு, பரபரப்பு, கூக் குரல், அழுகை, அழுகை! கம்பன் சொற்கள் எப்படி வேகமாய்ப் பாய்கின்றன, பாருங்கள்! இதுவல்லவா அமர்க்களம்! நல்ல சொற்போர்! இதற்கிணையாக எந்தக் கவியை ஒப்பிட முடியும்? இப்பாட்டில் கம்பர் மொழி உயருகின்றது; பாஷை இடிக்கின்றது, நகைக்கின்றது, மின்னு கின்றது; உலகத்தைச் சொல்லின் மின்சாரத் தில் நடுங்கச் செய்கின்றது. இவைதாம் மின் மொழிகள். இந்தக் 'கணகண' எனும் ஓசையைப்போல் ஷேக்ஸ்பியர் சொல் முழக்கம் ஒன்று நினைவுக்கு வருகிறது; 'மாக்பெத்' நாடகத்தில் மூன்று மந்திரவாதப் பெண்கள் பல ஜீவராசிகளைச் சோதித்துக் கொப்பரையில் காய்ச்சும்போது, ஒலிக்கும் ஓசையைப் பாருங்கள் :

''Double, double, toil and trouble;
Fire burn, and cauldron bubble.''

* * *

சீதையைக் காணாது இராமன் மனம் சுழன்ற நிலையைக் கவனியுங்கள்: இது ஒரு விசித்திரம்.

''மண்சுழன்றது; மால்வரை சுழன்றது; மதியோ(டு)
எண்சுழன்றது; சுழன்றது அவ்வெறி கடலேழும்
விண்சுழன்றது; வேதம் சுழன்றது; விரிஞ்சன்
கண்சுழன்றது; சுழன்றது கதிரொடு மதியும்''

எங்கும் சுழற்சி, எல்லாம் சுழற்சி!கவியே சுழல்கின்றது! நாமும் சுழல்கின்றோம், நம் மனமும் சுழல்கின்றது. ஒரு சன்னதக் கவியின் மின்னல் மொழி ''சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் போன்றது.'' கம்பர் இயற்கை யின் இதயத்தில் ஆழ்ந்து உறங்கி விழித்துக் கவிதை வருஷிக்கும் மன மோகன மின்னற்கவி. சொற்கள், இதயத்தின் தங்கக் குகையினின்று சுடர் வீசிக்கொண்டு பவனி வருகின்றன.

* * *

மகா கவிகளுடைய திறன்களெல்லாம் கம்பனில் பிரதிபலிக்கின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகச்சுவையும், மில்டனின் காம்பீரியமும், பைரனின் விறுவிறுப்பும், கீட்ஸின் சிற்பநடை யும், டெனிசனின் இசையோவியமும், ஷெல்லி யின் ஓடைநடையும், வோர்ட்ஸ்வொர்த்தின் சுடர் நடையும், ஹோமரின் வீரச்சுவையும், வர்ஜில் தாந்தேயின் அருளினிமையும் கம்பனில் கலந்து இலங்குகின்றன. கம்பன்பால் எல்லா ஆற்றலையும் ஒருங்கே காண்கின்றோம்.

* * *

ஷேக்ஸ்பியர் தமது நாடகப் பாத்திரங் களின் உள்ளத்தை நன்கு அளந்து உணர்ச்சி விந்தைகளை நன்றாய் வெளிப்படுத்தியிருக்கின் றார். "As You Like it" என்ற நாடகத்தில் காதற்பித்தேறிய ஆர்லண்டோ, தன் காதலி ரோசலிண்டின் பேரைக் காட்டு மரங்களின்

பச்சை முதுகில் பொறித்து வைக்கிறான்; அதே நினைவாயிருக்கிறான். பிரிவாற்றுமையாற் பாடிய காதற்பாக்களைச் செடிகளில் கட்டு கிறான். ஏன் என்பதை எண்ணவே இல்லை; இது காதல் மயக்கத்தின் முடிவு. செடியும் கொடியும் மரமும் இவனுக்கு என்ன துணை செய்யும் என்பதை இவன் கருதவேயில்லை. ஆனல், காதல் ஜெபம்தான் அவன் மனத்தில் ஊறித் ததும்புகிறது. ரோசலிண்டு காதற்பெருக்கிற் சிக்குண்ட உள்ளத்துடன் சொல்லுகின்றாள்:

"There is a man haunts the forest, that abuses our young plants with carving Rosalind on their barks; hangs odes upon hawthorns, and elegies on brambles; all, forsooth, deifying the name of Rosalind: if I could meet that fancy-monger, I would give him some good counsel, for he seems to have the quotidian of love upon him."

சீதையைத் தேடி ராமன் செல்லும்போது அவள் பிரிவாற்றுமை கருதி உருகிப்பேசும் ஒரு இடத்தை இங்கு ஒப்பு நோக்குவோம். ஒரு பொய்கையைப் பார்த்து, 'ஏ, பொய்கையே! சீதை முகம்போலும் தாமரையையும், கண் போலும் குவளையையும் காட்டி என் மன வருத்தத்தை ஓர் அளவு மாற்றும் நீ, ஏன் வடிவம் முழுதும் காட்டக்கூடாது?' என்று தன் பிரிவைப் பொய்கையின்பாற்புகுத்தி, மலர்களால் சிறிது மாற்றிக்கொள்ளுகிறான்:

''வண்ண நறுந்தா மரைமலரும்
வாசக் குவளை நாண்மலரும்
புண்ணி னெரியு மொருநெஞ்சம்
பொதியு மருந்திற் றரும்பொய்காய்
கண்ணு முகமுங் காட்டுவாய்
வடிவு மொருகாற் காட்டாயோ
ஒண்ணு மென்னின வீதுதவாது
லோவி னுரு முயர்ந்தாரோ.''

பிறகு மயிலோடு பேசுகிறான்: 'ஏ மயிலே, உன் ஓட்டத்தின் பொருளும் ஆட்டத்தின் அர்த்தமும் எனக்கு நன்றாகத் தெரியும். சீதையின் சாயலுக்குத் தோற்றுப்போன நீ, இப்பொழுது பழிக்குப்பழி வாங்கியது போல் அல்லவா, அவள் பரிதாபமான பிரிவைக் கண்டு சந்தோஷம் கொண்டாடுகின்றாய். ஆயிரங் கண்ணுடைய நீ, அதை ஒளிக்க முடியுமா? சொல். இப்பொழுதுதான் உனது உடல் குளிர்ந்தது போலும்! சீதை போன வழி தெரிந்துதான் என்னைப் பார்த்து மனமுவந்து ஆடுகிறாய்' எனத் தன் துயரத்தை மயிலோடு பொருத்தி மனமயங்குவது எவ்வளவு ருசியாயிருக்கிறது.

''ஓடா நின்ற, சனிமயிலே
சாயற் கொதுங்கி உள்ளழிந்து
கூடா தாரிற் றிரிகின்ற
நீயு மாகங் குளிர்ந்தாயோ
தேடா நின்ற வென்னுயிரைத்
தெரியக் கண்டாய் சிந்தையுவந்
தாடா நின்று யாயிரங்கண்
ணுடை யாய்க் கொளிக்கு மாறுண்டோ?''

* * *

ஷேக்ஸ்பியரின் ரோமியோ - ஜூலியட் (Romeo and Juliet) நாடகத்தில், ரோமியோ ஜூலியட்டைப் பார்க்கும்போது, 'ஆ, அந்த ஜன்னலின் வழியே வரும் ஒளி, என்னே, என்னே! கீழ்த்திசை, கீழ்த்திசை! ஆம், ஆம்; உதயசூரியன், உதயசூரியன்! ஓஹோ! ஜூலியட், ஜூலியட்!' என்று அப்பெண்ணின் வருகையை சூரியோதயத்திற்கு ஒப்பிடுகின்றார்.

"But soft, what light through yonder window breaks?
It is the East, and Juliet is the Sun."

கம்பன், 'சாளரந்தோறும் தோன்றும் சந்திர உதயங்கண்டார்,' என்று கூறுவது இதனுடன் ஒப்பு நோக்கற்பாலது; மாதர்களுடைய முகங்கள் ஜன்னல்களின் வழியே சந்திரன் போல் மலர்ந்தன என்பது ஒப்பு.

* * *

இயற்கை, அறிவூட்டும் ஆற்றலுடையது என்பதை ஷேக்ஸ்பியரும் கம்பரும் அடிக்கடி அனுபவித்து வற்புறுத்துகிறார்கள்.

ஷேக்ஸ்பியர், 'மரம் பேசுகிறது; கல் உபதேசிக்கிறது; ஓடையும் ஒரு நூல்,' என்று கூறுகிறார்.

"Finds tongues in trees, books in the running brooks,
Sermons in stones, and good in everything."
(As You Like it.) Act. 2, Sc. I

இயற்கையின் மொழியில், கவலை மாறி உண்மையின் ஒளியால் உள்ளம் பூரித்து உயர்கிறது.

கம்பர், சீதையின் அழகைக் கண்டு, 'கல் உருகுகிறது, புல் கரிகிறது, குன்றும் கனி

கிறது' என்று கூறி அவைகளுக்கு உயிரும் உணர்வும் ஊட்டிவிடுகிறார். கம்பரின் சரயு நதி, ஜீவநதியாகவும் நீதிச்சுரங்கமாகவும் தாய்ப்பாலாகவும் அமைகிறது.

* * *

அமுதிற்கோல் தோய்த்து அவயம் அமைக்குந் தன்மையறியாது திகைக்கும் மதனற்கும் எழுதவொண்ணுச் சித்திரத்தைக் கம்பன் புகழ்வது போல், ஷேக்ஸ்பியரும் 'ஒதெல்லோ' நாடகத்தில் டெஸ்டிமோனுவின் (Desdemona) அழகை அருமையாக அமைக்கின்றார் :

"........ .... a maid
That paragons description and wild fame;
One that excels the quirks of blazoning pens,
And in the essential vesture of creation
Does tire the ingener."

புகழ் மண்டிய நிகரற்ற டெஸ்டிமோனுவின் அழகைச் சிருஷ்டித்த சக்தியே, அழகு சமைக்கும் விந்தையில் ஈடுபட்டுச் சோர்வடைந்தது என்று ஷேக்ஸ்பியர் கூறுவது ஒப்பு. டெஸ்டிமோனுவின் பேரிலே, ஓர் ஓசையின்பம் உயிரைத் தழுவி ஓடுகின்றது.

ஒரு மகா கவி ஜீவநதி போன்றவன்; உலகத்தை உள்ளடக்கிய மாமுனி; அவனே தீர்க்கதரிசி; சௌந்தரிய ஞானி. கம்பன் கோதாவரி எனக் கிடந்த கவியாகிப் பிரகாசிக்கின்றான். கம்பன் தமிழுக்குச் செய்த உதவி மிகப் பெரிதாகும். மேல் நாட்டில் ஷேக்ஸ்பியர் பழைய கவிகளை நன்கு கற்று அவர்களுடைய காவிய இரத்தத்தில் ஊறி உறங்கி விழித்தார்; புதுக் கவி தோன்றிற்று. அதுபோல் கம்பனும் நம் நாட்டில் பழைய இலக்கியங்கள் பலவற்றையும் பருகிப் புது இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கினான். கம்பன் காவியம் ஓர் உணர்ச்சிக் கோபுரம்; அக்கோபுரத்தில் கவிதா தீபம் ஜ்வலிக்கிறது; சௌந்தரிய தேவதை தாண்டவமாடுகிறாள்.

கம்பனும் துளசியும்

(1941-ல் ஆற்றிய உரை)

கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார்

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்'— என்னும் பொருள் நிரம்பிய மங்கல மதுரத் திருவாக்குடன் கம்பனின் இராம கதை ஆரம்ப மாகிறது. பிரம்ம சூத்திர உரை ஆசிரியரான ஸ்ரீராமாநுஜாசார்யரின் ஸ்ரீபாஷ்ய மங்களா சரணம் சொல்லிலும் கருத்திலும் இச் செய்யுளை முற்றும் ஒத்திருக்கிறது. துளசி தாஸர் தமது ராம சரித மானஸத்தைப் பலவகைப் புராணங்கள், வேதங்கள், ஆக மங்கள் ஆகியவைகளுக்குச் சம்மதமானது என் கிறார். அவருடைய ராமாயணம் ஒரு பெரிய மத நூல். அதன் முன்னுரையைப் படிப்ப திலே நாம் பல பக்கங்களைத் தாண்டிவிடுகிறோம். பல கிளைக் கதைகளும், உலக தர்மங்களும், பரந்த நீதி வாக்கியங்களும், இயற்கை வருணனை களும், ஒழுக்க முறைகளைப்பற்றிய உபதேசங் களும், பக்தி வெள்ளமும் ஒன்றுகூடித் துளசி ராமாயணத்தை, ராமசரிதமானஸம் என்ற அதன் பெயருக்கேற்ப, ஒரு பெரிய அகன்ற நீர்ப்பரப்பாக்கிவிடுகின்றன. கம்பராமா யணமோ காம்பீர்யமான நடையில், ஓர் உயர்ந்த காவியத்துக்குரிய சகல லக்ஷணங்களும் அமைந்து, நாடகக் காட்சிகளைப் போலத் துரித மாகவும், மனிதனின் உள்ளத்தில் மாறி மாறி இயங்கும் உணர்ச்சிகளனைத்தையும் வர்ண ஓவி யங்களாலே உள்ளவாறு வர்ணித்துக்கொண் டும் செல்லுகிறது. துளசிதாஸர் தமது ஆரம்ப வணக்கத்தில் உலகம் முழுவதையும் ஸீதா ராம மயமாக அறிந்து எல்லோரையும் அன்புடன் வணங்குகிறார். ஆரம்பத்திலேயே கம்பனுக்கும் துளசிக்கும் உள்ள ஓர் ஒற் றுமையை நாம் காண்கிறோம். இறைவன் உல கத்தைப் படைத்து, அதில் உறைந்து நின்று காப்பதை இருவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருவரும் தம் காப்புச் செய்யுளில் உபநிஷத் தின் ஒரு தத்துவார்த்தத்தை விளக்கியிருக் கிறார்கள்.

குமரகுருபர சுவாமிகள் காசியில் கம்ப ராமாயணம் பிரசங்கம் செய்து வந்ததாகவும், அதைக் கேட்டுவந்த துளசிதாஸர் தம் ராமா யணத்தில் கம்பனின் சில கருத்துகளை அமைத்த தாகவும், நாட்டில் ஒரு கர்ணபரம்பரைச் செய்தி உலாவி வருகிறது.

கம்பனுக்கும் துளசிக்கும் உள்ள ஒற்றுமை களுக்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, இரு வருமே அகில இந்தியாவின் கலைப்பண்பை வளர்க்க உதித்தவர்கள். இராமனை வர்ணிக் கும்போது 'தென்சொற்கடந்தான், வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்கிறார் கம்பர். இரண்டாவது, இருவருமே வான்மீகியின் ஆதி காவியத்தைத் தம் முதல்நூலாகக்கொண்டு, இராம கதையைத் தம் கட்டுக்கோப்பிலே அமைத்தவர்கள். அவ்வாறு அமைக்கும்போது இருவரும் சில கட்டங்களில் வால்மீகியினின் றும் வேறுபட்டிருக்கிறார்கள். வால்மீகி பழைய உலக வழக்கை அனுசரித்து, இராமனும் சீதை யும் மணந்த பின்பே அவர்களின் காதலை வளர்க்கிறார். ஆனால், கம்பனும் துளசியும், திருமணத்துக்கு முன்னமே காதலர்களின் முதல் சந்திப்பை வருணித்துத் தமது கதைக்கு ஒரு காதல் நிறம் தீட்டுகிறார்கள்.

மிதிலை மாநகர் வீதியில் நடந்து சென்ற நம்பி, கன்னிமாடத்தின் மேடையிலே நின்ற சீதை யைக் கண்டு, மாளிகையடைந்த பின்பு,அவளே தன் கண்ணிலும் கருத்திலும் இலங்குவதைக் காண்கிறான். அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்; சீதையும் தன் கண்வழிப் புகுந்த காதல் நோய் பாலுறு பிரையெனப் பரவ, வீதியிலே கண்ட வீரத் திருக்கோலத் தைத் தன் உள்ளத்தில் வரைகிறாள். காலை யிலே கதிரவனின் கிரணங்களால் அலர்ந்த செந்தாமரையில், அவள் தன் காதலனின் கண் ணின் நிறத்தையும் மேனியின் நிறத்தையும் கண்டு, ஒருவாறு ஆறுதல் பெற்று, தன் வாட் டத்தைத் தீர்த்த கமலப்பொய்கையை நோக்கி,

"பெண்இவள் உற்ற தென்னும்
பெருமையால் அருமை யான
வண்ணமும் இலக ளாலே
காட்டலால் வாட்டத் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங் காள்!என்
தளிர்நிற முண்ட கண்ணன்
உண்ணிறங் காட்டி நீர்என்
உயிர்தர உலாவினீரே!"

என்கிருள். இது கம்பன் கண்ட காட்சி.

துளசியோ, ஜனகனின் பூஞ்சோலையில் சீதா ராமர்களின் காதல் உதயமாவதைக் காண்கிருர். ராமனும் சீதையும் ஒருவர் மற்ருெருவரின் இவ்வுலகிலேயே காணக்கிடைக்காத ஸௌந்தரியத்தைக் கண்டு உவகை கொள்ளுகின்றனர். துளசி தம் வர்ணனையில் ராம கதையின் தூய்மைக்கும் உலக மரியாதைக்கும் எவ்விதக் குறையும் நேராமல் பார்த்துக் கொள்ளுகிருர்.

இராமன் மண வில்லை இறுக்கும் கட்டம். இராமனுல் வில்லை ஒடிக்க முடியுமோ, முடியாதோ என்ற ஓர் ஐயம் எழுகின்றது, சீதையின் மனத்திலே. அவள் மனத்தில் நிகழும் இச்சந்தேகப் புயலை வெகு மனோஹரமாக வர்ணிக்கிருர் துளசி. ஆனுல் இந்தக் கட்டத்திலே, கம்பர் தம் முதனூலின் ஆசிரியரான வால்மீகியையும் வென்றவராகச் சொல்லப் பட்ட துளசியையும் ஒருங்கே தோற்கடித்து விடுகிருர். இராமனின் வடிவழகை முடியக் காண இயலுமா? அவனைக் கண்டவர்களின் நிலை என்ன?

"தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணுர் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கண்ட சமயத் தன்னு
னுருவுகண் டாரை யொத்தார்"

சபையில் கூடியிருந்த சீதையின் தோழிகள் ஞான முனியான விசுவாமித்திரனையும், ஜனக ராஜனையும் பழிக்கலாயினர்.

இத்தனை நிந்தைப் பேச்சுகளுக்கும் சந்தேகங்களுக்கும், இராமன் மாக மடங்கலும், மால் விடையும் பொன் நாகமும் நாண நடந்து வந்து, ஒரு நொடியிலே விடையிறுத்துவிடுகிருன். வில்லையிறுத்து, தடுத்திமையாமலிருந்தவர் தாளின் மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார் கடுப்பினை யாரும் அறிந்திலர். ஒரு கண்ணிமைப் பொழுதில் எல்லாம் நிகழ்ந்து விட்டது. கையால் எடுத்தது கண்டனர், இற்றது கேட்டனர். வால்மீகிக்கு இந்த ஓர் அடியைக் குறிப்பிடுவதற்கு நான்கு அடிகள் வேண்டியிருந்தன.

துளசி தாஸர், இராமன் வில்லிறுத்த பின்பு சீதையின் மனத்தில் தோன்றிய மன நிகழ்ச்சிகளை விவரிக்கத் தொடங்கிவிட்டாரேயொழிய வில்லிறுத்த தொழிலை அவர் பிரமாதமாக நினைக்கவில்லை. இராமனை அவர் ஒவ்வோரிடத்திலும் கடவுளாகப் போற்றி வருவது தான் இதற்குக் காரணம்.

துளசியும் பல இடங்களில் மனித உள்ளத்தில் தோன்றும் சூட்சும எழுச்சிகளைச் சித்திரித்துக் காட்டுகிருர். ஆனுல் அவர் முதலில் மிகப்பெரிய பக்தர், பின்புதான் கவி. அவர் ஒரு பக்த கனி. ஹிந்தியிலேயே புரந்தரதாஸர், கவி என்ற ஹோதாவில் துளசிக்கும் மேம் பட்டவர். ஆனுல் துளசிதாஸர் வேதங்கள், வேதாந்தங்கள், வேத அங்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளின் கருத்துகளை எல்லாம் சுருக்கி, அவைகளை விரஜபாடி அவதீ, போஜபுரி, புந்தேல்கண்டி, ராஜ்புதான் முதலிய கிளை மொழிகளின் சொற்கள் விரவிய ஒரு பொது பாஷையிலே அமைத்துத் தம் இராமாயணத்தை ஞானக்களஞ்சியமாக்கி விட்டார். ஆகவே பொது ஜனங்கள் அதைப் பெரிதும் ஆதரித்தார்கள். இன்றுவரையிலும் இந்நூல் ஹிந்து சமூகத்துக்கு இன்றியமையாத ஒரு கிரந்த ரத்தினமாக இருந்து வருகிறது.

வால்மீகியும் கம்பனும், திருமணமான பின்பு, அயோத்திக்குச் செல்லும் வழியில் பரசுராமனின் வருகையைக் குறிப்பிடுகிருர்கள். ஆனுல் துளசி, விவாகத்துக்கு முன்பே, வில்லொடித்த உடனேயே, அங்கே பரசுராமரைக் கொண்டுவந்து நிறுத்திவிடுகிருர். இராமனின் வில்லிறுத்த வீரம் ஏற்கனவே சீதையின் காதலுக்கு உரமாயிருந்தது. உடனே பரசுராமனின் வருகை, அவ்வீரத்தன்மையைப் பின்னும் விளக்கிக் காட்ட மற்றுமொரு சந்தர்ப்பத்தை அளித்தது. உலகத்தையே வென்ற

பரசுராமனின் ஒளி இராமனுக்கு முன்பு மங்கிப் போயிற்று. அப்போது சீதாராமர்களின் பரஸ் பர அன்பு எவ்வளவு உறுதி சான்றதாக இருந் திருக்கும். காதலும் வீரமும் இணைந்து நிற்பதைக் கற்பிக்கவே துளசிதாஸர், இங்கே வால்மீகியிலும் கம்பனிலும் இல்லாத ஒரு மாறுபாட்டை அமைத்திருக்கிறார் என்று சொல்லலாம்.

துளசி ராமாயணத்தில் அயோத்தியா காண் டம் மற்ற எல்லாக் காண்டங்களையும்விடச் சிறப்பானது. துளசியின் கவித்துவத்தைக் காண அதுதான் சிறந்த இடம். அவர் முதன் முதலில் ராமசரிதம் என்று பெயரிட்டு அயோத்தியா காண்டம்தான் எழுதினாரென் றும், பின்பு பாலகாண்டத்தின் கடைசிப் பகுதியை முடித்துவிட்டே அதன் முற்பகுதியை எழுதினாரென்றும் கருதுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கவிதைச் சுவை யும் பலவித அலங்காரங்களும் நிரம்பிய அயோத்தியா காண்டத்தைத் துளசிதாஸ ரின் கவிதைக்கு எல்லை நிலம் என்றே சொல்லி விடலாம். அதில்தான் அவர் தமது முழுத் திறமையையும் கொட்டியிருக்கிறார். பால காண்டத்தில் சீதாராமர்களின் சந்திப்பி லிருந்து தொடங்கி அக்காண்டத்தின் முடிவு வரையிலுமுள்ள பகுதியை அதற்கு அடுத்தபடி சிறந்ததாகக் கூறலாம். அயோத்தியா காண் டம் வரையில் கவியரசராக இருந்த துளசி அதற்குப் பின்பு பக்த ராஜனாகவும், உலக நன்மையைக் கருதிய உபதேசக சக்கரவர்த்தி யாகவும் மாறிவிடுகிறார்.

கம்பனின் இராமகாதையும் அயோத்தியா காண்டத்தில்தான் ஆரம்பிக்கிறது. இங்கே வ. வே. சு. அய்யரின் கம்பராமாயண ரசனையி லிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கூறுகிறேன். ராமாயணத்தின் வஸ்து, அதாவது பிரதான சம்பவம் ராவணவதம். அதற்கு நெருங்கிய காரணம் அரணியத்தில் நேரும் சீதா ராவண சந்திப்பாதலால், ராமன் சீதா ஸமேதனாய்க் காட்டுக்குச் செல்லுவதையே அந்த வஸ்துவுக்கு பீஜம், அதாவது விதை என்று கூறவேண்டும். அயோத்தியா காண்டத்தில்தான் இவ்விதை விதைக்கப்படுகிறது. ஆதலால் அதுவேதான் கதையின் உண்மையான தொடக்கம். அது முதற்கொண்டு கதையானது ஓர் அரண்மனைக் கட்டடம்போல அழகாயும் கம்பீரமாயும் கிளம்பி, வஸ்து பூர்த்தியாகிற வரையில் ஒரே வளர்ச்சியாக வளர்ந்து செல்கின்றது. அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்தகஜத்தின் நடையோடு, கங்கா பிரவாகத் தின் கமனத்தோடு ராவண வதம்வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காகவேனும் மந்திராலோசனைக்காகவேனும் கதை நிற் கிறதே என்றால், அது இயற்கையையொட்டியே அவ்வாறு நிற்கின்றது. வனராஜனான கஜேந் திரனும் அங்கங்கே ஆகாரத்திற்காக நிற்கிறான். அங்கே இளைப்பாறுகிறான். கங்கா நதியும் சம தடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உப நதிகளின் நீரை ஏற்றுக்கொள்ளு கையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண் டோர் வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளை யும் கால்வாய்களையும் நிரப்பிக்கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால், ஆலசியமெல் லாம் அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேக மாகச் செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனோடு கலப்பதற்கு முன் கங்கா தேவியின் அழகையும் காம்பீர்யத்தையும், வாயால் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத்தகும் காட்சி யன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம்! இத்தகைய வேகமும், ஓட்டமும், பொலிவும் இருக்கின்றன கம்பராமாயணத்தில்.

அயோத்தியா காண்டம், ராமாயண சரித் திரத்தின் வேர்; பரத சரித்திரத்தின் ஆரம்பம். பரதன், மாமன் வீடு சென்ற பின்புதான் இராமனுக்கு முடி சூட்டும் பிரஸ்தாபம் வரு கிறது. பிறகு மந்தரைச் சூழ்ச்சி. இந்தக் கட் டத்தில் கம்பனும் துளசியும் ஒருவருக்கொரு வர் தோற்றவரல்லர். இந்தச் சூழ்ச்சியின் பயன், ராமனுக்கு வனவாசம். தசரதன் இருதலைக் கொள்ளியினிடையே தாக்குண்டு வருந்துகிறான். ஒரு புறம், வரங்கள் இரண்டு; மறுபுறம், ராம வாஞ்சை. புதல்வனின் மணிமுடி அணிந்த கோலத்தைக் காணக்கருதிய சமயத்தில், அவன் வனம்புக நேர்ந்ததைக் கண்டும் கலங் காதவளாகிய கோசலை 'வடித்தாய் கூந்தல், கேகயன் மாதே' என்று இரங்கிக் கூறும் நிலை யிலே முடிகிறது அந்தத் தாக்குதல்.

பரத யாத்திரையை வால்மீகி, கம்பன், துளசி ஆகிய மூவருமே பரதனுடைய ராம பக்தியைச் சிறப்பித்துக் காட்டும் முறையிலே வர்ணித்திருக்கிறார்கள். பரதனும் குகனும் சந்திக்குமிடத்தில் சில வேறுபாடுகள் உள்ளன. பரதனின் பக்தியையே துளசி தமக்கு ஆதரிச

மாக வைத்துக்கொண்டார். வால்மீகியும் கம்பரும் பரதனுடைய சிருஷ்டியில் எத்துணை அன்பை, எத்துணை பக்தியை, எத்துணைத் தியாகத்தை, எத்துணை ஆத்ம கண்டனத்தைப் புகுத்தி, பரதனை அனன்னிய சதிருசமான, இணையற்ற ஆத்ம வீரனாக்கிவிட்டார்கள் என்கிறார் வ. வே. சு. ஐயர். இத்தகைய மகா புருஷனைத்தான் துளசி தம் பக்திக்கு ஆதரிச மாகக் கொண்டார். இராமனிடம் உத்தரவு பெற்றுப் பரதன் ராஜ்ய சாஸனத்தை மேற் கொண்டான். ஆனால், அதன் பொறுப்பை யெல்லாம் ராமனின் பாத பங்கயங்களிலே அர்ப்பணித்துத் தான் பற்றொழிந்தவனாகவே விளங்கினான். தான் நாட்டிலே வாழ்ந்திருந் தும் காட்டிலே வாழ்வதால் நேரும் துன்பங் களை எல்லாம் அனுபவித்தான்.

குகனை மகோன்னதமான ஒரு பாத்திரமாகச் சிருஷ்டித்திருப்பதில் கம்பன், மற்ற இருகவி களிடமிருந்தும் மாறுபட்டிருக்கிறார். வெளிப் பார்வைக்கு வேடனாயிருந்தும், கண்ணீரும் கம்பலையுமாக உள்ளமுருக நின்ற கம்பருடைய குகன் அழியாத ஓர் உயிர்ச்சித்திரமாகும். இராஜகுமாரனான இராமனுடைய அலங்கோல நிலையைக் கண்டு ''நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்'' என்று குகன் கூறுவதாகக் கம்பன் அமைத்திருக்கிறார். கங்கைக் கரையின் காட்டுப்புறத்து வேடனைக் கம்பர் இவ்வளவு உயர்த்தி வைத்திருப்பது கலைச்சூட்சமம் தெரிந்தவர் அனைவரும் ரசிக்கக் கூடியதாகும். குகனைக் குன்றுபோல் உயர்த்தி, பரதனை அக்குன்றின் மேலிட்ட தீபமாகச் செய்திருக்கிறார் கம்பன். தமிழ் மண்ணில் பிறந்த ஒரு கம்பன்தான் ஒருகுகனைப் படைக்க முடியும்.

அயோத்தியா காண்டத்திற்குப் பின்பு ஓர் அழகிய அரச குமாரியுடன் இரண்டு வீரர்கள் வெஞ்சிலையே துணையாய் அழகிய காடுகளையும், மலைகளையும் கடந்து செல்லும் காட்சியை நமக்குக் காட்டுகிறார் துளசிதாஸர். அதன் பின்பு சீதையை ராவணன் கவர்ந்து செல்வ தால் நேரும் பிரிவை நோக்கியவண்ணம், லங்கா தகனத்தின் அற்புதமும் பயங்கரமு மான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே நாம் ராமராவண ரணகளத்துக்குப் போய்ச் சேர்ந்து கடைசியில் ராமன் வெற்றி பெறுவதைக் காண்கிறோம். இடையிடையே சில கிளைக் கதைகளும் நம் மனத்தைக் கவராமல் இல்லை.

கம்பராமாயணத்திலோ, ராமாயணத்தின் மத்திய பாகமாகிய ஆரணிய காண்டம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங் களெல்லாம் ரஸக்ஞர்களுக்கு நல் விருந்தாக இருப்பதை வ. வெ. சு. ஐயரின் 'கம்பராமா யண ரசனை' என்ற கட்டுரையைப் படித்தோர் அறிந்தே இருப்பார்கள்.

கம்பன் சித்திரித்த மாரீச-ராவண சம்வாதம் ஹாஸ்ய ரஸத்துக்கு ஓர் இணையில்லா உதார ணம். அதற்கு ஏறக்குறைய சமமான ஹாஸ் யத்தை நாம் துளசியின் நாரத சரித்திரப் பிர சங்கத்தில் காண முடியும்.

சுந்தர காண்டத்தில் சென்று சீதா - ராம- விரஹம் உச்ச ஸ்தானத்தை அடைந்துவிடு கிறது. சீதையைக் கண்டு வந்த அநுமன், ''இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்'' என்று செய்தியை இராமனுக்கு அறிவிக்கிறான்.

யுத்த காண்டத்தில் துளசி தாஸர் புராணங் களிலிருந்து அஹிராவணன் என்ற மயில் ராவணனின் கதையையும் சேர்த்துக்கொள்ளு கிறார். அஹிராவணன் ராமலெக்ஷ்மணர்களை இலங்கையினின்றும் பாதாளத்துக்கு எடுத்துச் சென்றுவிட அநுமான் சென்று அவர்களை மீட்டு வருகிறார்.

லக்ஷ்மணன் சக்தியினால் அடிபட்டு மூர்ச்சை யாகிறார். அநுமான் சஞ்சீவினி மலையை எடுத்து வரும்போது வழியிலே நந்திக் கிராமத் தில் ஆகாயத்தில் நின்றவாறே பரதனைச் சந்திக்கிறார். ''அநுமான் மலையைத் தூக்கிக் கொண்டு ராமனிடம் வந்தார். கூடவே பரத னின் க்ஷேம சமாசாரத்தையும் எடுத்துக் கொண்டு'' என்கிறார் துளசி.

துளசிதாஸரின் பக்தி மார்க்கம் ஞானத்தை யும் யோகத்தையும் தன் உள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. சாதகப் பறவை, மழையைப் பொழிவித்து உலகத்துக்கு சுபிக்ஷத்தை தரும் மேக மண்டலத்தைக் காண நோற்பது போல, அவரும் ராமபிரானின் லோகரஞ்ஜக மான திருவுருவத்தைக் காண விரும்புகிறார். மனித வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் அவர் தமது மானஸத்திலே விளக்குகிறார். பால காண்டத்தில் ஆனந்தம் தன் எல்லை வரையிலும்

போய் நிற்கின்றது. அயோத்தியா காண்டத்தில் இல்லற வாழ்க்கையில் தோன்றும் சிக்கலான பிரச்சினைகள் விவரிக்கப்படுகின்றன. அதற்குப் பின் மூன்று காண்டங்களில் கர்மயோகம், உழைப்பு ஆகியவைகளும், யுத்த காண்டத்திலும் உத்தரகாண்டத்திலும் செய்கைகளின் கடைசிப்படி, வெற்றி, ஐஸ்வரியம் ஆகியவைகளும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. பக்தி செய்வதால் நற்பயன் எய்தலாம், நற்கதி கிடைக்கும் என்று நினைத்துப் பக்தி செய்வதே தவறு. பக்தியின் ஆனந்தம் ஒன்றுதான் பக்தனுவதற்குப் பயன். வாழ்நாள் முழுவதும், தான் விரும்பிய தெய்வத்தைப் பலனைக் கருதாது வழிபடுவதே பக்தனுடைய வேலை. துளசிதாஸர் உண்மையான அன்புக்கு உதாரணமாக அடிக்கடி சாதகப் பறவையைத்தான் எடுத்துக் காட்டுகிருர். ஜடாயு மற்ருேர் இணையற்ற உதாரணம்.

துளசிதாஸர் எப்போதும் ராமனை நாராயணனுகக் காண்கிருர்.

ஆதலால் அவர் தம் ராமாயணத்தைப் பக்தியைப் பரப்ப ஓர் உயர்ந்த சாதனமாகச் செய்துகொண்டார். அவர் வால்மீகி ராமாயணத்தைத் தவிர அத்தியாத்ம ராமாயணம், மகா ராமாயணம், பாகவதம், ஹநுமன் நாடகம், பிரசன்ன ராகவம், உத்தர ராமசரிதம் முதலிய பல நூல்களிலிருந்தும் கருத்துகளை எல்லாம் திரட்டித் தம் நூலிலே அவைகளுக்கு புதிய உருக்கொடுத்திருக்கிருர்.

துளசிதாஸர் பக்தரும் கவியும் மாத்திரமல்ல, அவருக்கு தாவர சாஸ்திரம் தெரியும். பிராணி சாஸ்திரத்திலே நிபுணர். கணக்கிலே தேர்ந்தவர். ஜோதிடமும் சங்கீதமும்கூட அவருக்குத் தெரியும். வர்ணனைகளில் அவர் கம்பனுக்குச் சளைத்தவரல்லர். ஜனகபுரி, அயோத்தி, இலங்கை முதலிய பட்டணங்களையும் யுத்த ஸந்நாகங்களையும், திருமணச் சடங்குகளையும் அவர் வெகு நேர்த்தியாக வருணித்திருக்கிருர். அவர் ராமாயணத்தைக்காட்டிலும் அதிகமாகத் தமது கீதாவலி என்ற நூலில் இராமனுடைய குழந்தைப் பருவத்தை மிகவும் ரசமாக வர்ணித்திருக்கிருர்.

கீதாவலியில் மற்ருேர் அழகான காட்சி.

ஜடாயு ராமனுடைய நிஷ்காம பக்தன். ஓர் உண்மையான அன்பனைப் போலவே, அவன் இராமனுக்கு எதிர்பாராமல் வந்த ஓர் ஆபத்தை விலக்க முயன்று உயிர் நீத்தான். சாகும் தருணத்திலும் அவனுக்கு ஒரே ஆவல்தானிருந்தது. ராமனுக்கு எவ்விதமேனும் சீதையின் சமாசாரத்தைச் சொல்லிவிட்டு இறக்கவேண்டும் என்பதே அந்த ஆவல். அப்போதும் அவன் தன் இனத்தாரைப்பற்றி நினைக்கவில்லை தன் படுகாயங்களைப்பற்றி நினைக்கவில்லை. தவ வேடம் புரிந்த ராமனை ஒரு முறை தரிசித்துச் சீதையின் செய்தியை அவனுக்குச் சொல்லிவிடவேண்டும் என்பதிலேதான் அவன் நினைப்பெல்லாம். ராமனுக்குத்தான் அவன்மீது என்ன அன்பு! ராமன் அவனைச் சந்தித்து அவன் பேச்சைக் கேட்கிருன். உடனே அவனைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு "பட்சிராஜனே, நான் தந்தையை இழந்தவன். தாங்கள் இன்னும் சில காலம் உயிருடன் இருந்து என் தொண்டை ஏற்றுக்கொண்டு எனக்குத் தந்தையின்பத்தைத் தரலாகாதா?" என்கிருன்.

இராமாயணத்தில் ஒருபுறம் சகோதரனுக்காக ராஜ்யத்தைத் துறக்கும் பரதனுடைய சித்திரமும், மறுபுறத்தில் இராஜ்யத்துக்காகச் சகோதரனைக் கொன்ற சுக்ரீவ விபீஷணர்களின் சித்திரங்களும் இருக்கின்றன. துளசிதாஸர் இந்த இரண்டு விதச் சித்திரங்களையும் ஒருங்கே சேர்த்து ஒரு காட்சியை ஸ்ருஷ்டித்திருக்கிருர், தமது தோஹாவலி என்ற நூலில். இலங்கையிலிருந்து திரும்பி வந்தவுடன் ராமன் பரதனைத் தன் தோழர்களுக்கு அறிமுகம் செய்விக்கிருன். பரதன் அவர்களைத் தழுவிக்கொள்ள முன் வருகிருன். ஆனல், சகோதரத் துரோகம் செய்த அவர்கள் பரதனின் தூய உடலுடன் தமது மாசு படிந்த உடல்களைத் தழுவ இடங் கொடுக்கவில்லை. அவர்களுடைய மனநிலையைத் துளசி எவ்வளவு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிருர், பாருங்கள்.

பணமும் மனச்சந்தோஷமும் பெற்றுத் திரும்பிய திருடன் ஒருவன், தான் வரும் வழியில் இடுப்பில் கை வைப்பதுபோல் பாசாங்கு செய்து லேசாகப் பணத்தைத் தொட்டுப் பார்த்துக்கொள்வதுபோல, சுக்ரீவனும் விபீஷணனும் பரதனைச் சந்தித்தார்கள். துளசிதாஸர் மனோ லோகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் ஆராய்ந்திருக்கிருர். மனத்தின் எந்த விஷயமும் எந்த அலையும் அவருக்குப் புறம்பானதல்ல. கம்பன் சுக்ரீவ விபீஷணர்களின் ராஜ்ய ஆசையைக் குறிப்பிட்டிருந்த

போதிலும், அவர்களை உன்னத சிருஷ்டிகளாக்கி யிருக்கிறார். இருவரிலும் விபீஷணரை உலகத் திற்கு வழிகாட்டியான ஒரு பெரிய சத்தியாக் ரஹியாக அமைத்திருக்கிறார். கூடப்பிறந்த இரு சகோதரரைக் கொல்ல உதவியதுடன், வீர மைந்தன் இந்திரஜித்தைக் கொல்லவும் அவர் உதவி செய்தார். இந்திரஜித்தின் வெட் டுண்ட தலையைக் கண்டதும் இராமன், "லெக்ஷ்மணா, இது உன் வெற்றியல்ல, அநுமன் வெற்றியல்ல, வேறு யார் வெற்றியுமல்ல— வீடணன் தந்த வெற்றி ஈது" என்று கூறினான் என்றால், அதர்மத்தைக் கண்டு அஞ்சி விலகி டாமல் தர்மத்திற்குச் சகல தியாகங்களையும் விபீஷணரைப் போலவே செய்ய வேண்டு மென்பதுதானே இராமன் கருத்து.

கம்பன் தம் காலத்துக்கு முன்பே ஆழ்வார் களும், நாயன்மார்களும் செப்பனிட்டு வைத்த வழியிலே சென்று, வடமொழிச் சொற்கள் பல வற்றையும் தமக்கு உரியனவாக்கிக்கொண்டு, வால்மீகியின் இராமகதையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு சொல்லோவியமாக, ஒரு கலைக்கோபுரமாக நிருமித்திருக்கிறார். கம்பனின் ராமசரிதையிலும் நீதி வாக்கியங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அவைகள் கதை களின் சந்தர்ப்பங்களுக்கு அழகு தருவனவாக வும் மிகச் சுருக்கமாகவும் பொருத்தப்பட் டிருக்கின்றன.

மாவலி வார்த்த நறும்புனல் கையில் தீண்டிய வுடனே, வாமனன் உயர்ந்தவர்க்குதவிய உதவி யொப்பவே ஓங்கி வளர்ந்து திரிவிக்கிரமனாகி விடுகிறான். வீடணனிடத்தில் முதலில் ஐயங் கொண்ட சுக்ரீவனையே, அவனைத் தன்னிடம் அழைத்துவரச் சொல்லுகிறான் இராமன். விபீடணன் சுக்கிரீவன் வரவையறிந்து அவனை எதிர்கொண்டு சொல்கிறான்.

கம்பனைப் பூரணமாக அறிவதற்கு வழி இது தான். ஆறுகளும், சுனைகளும், அருவிகளும், மலைகளும், வனங்களும், வனாந்தரங்களும் நிரம் பிய ஒரு நாட்டை ஆகாய விமானத்தின் மூலம் சுற்றுவதுபோல் நாம் நம் ஹ்ருதய விமானத் திலிருந்து வால்மீகியின் ராமாயண தேசத்திலே ஸஞ்சரித்துவிட்டு, துளசியின் ராமசரித மானஸமாகிய மானத வாவியிலே இறங்கி இளைப்புத்தீர நன்னீராடி அந்தக் குளிர்ச்சி பொருந்திய இன்பத்தை உணர்ந்த பின்பு, கம்பனின் கவிதைச் சோலையில் புகுந்தோமாயின் அப்போதுதான் அச்சோலையிலுள்ள பழங்களின் இனிமையையும் அருமையையும் நம்மால் பூரணமாய் அநுபவிக்க முடியும்.

——

வாலி வதை

கி. வா. ஜகந்நாதன்

இராமாயணத்தில் வாலி வதை ஒரு சிக்கலான நிகழ்ச்சி. வாலி வதை நியாயம் என்பாரும், அன்று என்பாருமாக இருவேறு கருத்து உடையவர்கள் இருக்கிறார்கள், மனிதனாக வந்த இராமன் தன்னைக் குறையுடையவனாகக் காட்டிக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இதைப்பற்றி ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

வாலி வதையில் மூன்று விதமான வினாக்கள் எழுகின்றன. அயோத்தி அரசனாகிய தசரதன் மகன் கிஷ்கிந்தையில் இந்தச் செயலைச் செய்வதற்கு உரிமை உண்டா என்பது ஒரு வினா; வாலியை மறைந்து கொன்றது முறையா என்பது இரண்டாவது வினா; இறுதியில் வாலி மனம் மாறி இராமன் செய்தது முறைதான் என்று சொல்வது இயல்பாக அமைந்திருக்கிறதா என்பது மூன்றாவது. இவற்றை இனி ஆராய்வோம்.

1. உரிமை

இராமன் வாலியைக் கிஷ்கிந்தைக்கு வந்து கொன்றான். அதற்கு அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

தசரதன் அரசாட்சிக்குள் உலகமெல்லாம் அடங்கி நின்றது என்றே **கம்பன்** சொல்கின்றான்.

'அம்மாண் நகருக்கு அரசன்; அரசர்க்கு அரசன்
செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினும் செல்ல
நின்றான்''
(அரசியல்; 1.)

என்று கூறுகிறான். அதனால் கிஷ்கிந்தை அவன் ஆட்சிக்குட்பட்டது என்பது தெரிய வரும். அந்த அந்த நாட்டுக்கு என்று தனி அரசர்கள் இருந்தாலும் அவன் எல்லா அரசர்களுக்கும் மேலான அரசன்; சக்கரவர்த்தி. இராமனைச் சக்கரவர்த்தித் திருமகன் என்பதில் அடையின்றிச் சொல்வதனால் தசரதன் தனியுரிமை பெற்ற சக்கரவர்த்தி என்பது தெரிய வரும். வாலி தாரையினிடம் பேசும்போது,

''ஏற்றபே ருலகெலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவலால் அவன்தன் மைந்தனுக்கு
ஆற்றரும் உவகையால் அளித்த ஐயனைப்
போற்றலை, இன்னன புகறற் பாலையோ?''
(வாலி வதை : 33)

என்று கேட்கிறான். இங்கே ''ஏற்றபே ருலகெலாம் எய்தி'' என்ற தொடர் தசரதன் ஆட்சி உலகமுழுவதும் விரிந்தது என்பதைக் காட்டுகிறது. வாலியே இராமனோடு பேசும் போது,

''வீரம் அன்று; விதிஅன்று; மெய்ம்மையின்
வாரம் அன்று; நின் மண்ணினுக்கு என்உடல்
பாரம் அன்று''
(வாலி வதை: 92)

என்கிறான், **''நின்மண்ணினுக்கு''** என்று அவன் கூறுவதில், அவன் இருந்த நிலமும் இராமனுக்கு உரியதே என்ற கருத்துப் புலனாகிறது. வாலியே அதை ஒப்புக்கொண்டு கூறுவதால் தன்னுடைய அரசுரிமை இல்லாத நாட்டில் இராமன் செய்தது இது என்று சொல்வதற்கு இல்லை.

2. மறைந்து கொன்றது

வாலியைத் தண்டிக்கும் உரிமை இராமனுக்கு இருந்தாலும் அதனை நேர் நின்று செய்யாமல் மறைந்து செய்தது ஏன்?

வாலியை நேர் நின்று எய்வதால் எதிர்ப்போனுடைய பலத்தில் பாதி அந்த வாலியைச் சேர்ந்துவிடும்.

''பேதையர் எதிர்குவர் எனினும்பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால்; பகைப்ப தெங்ஙனம்?
நீதுயர் ஒழிகென நின்று கூறினான்''
(வாலிவதை : 29)

என்று இதை வாலியே கூறுகிறான்.

அது மட்டும் அன்று. பிறன் மனை விழை யாமையே இராமனுடைய அருங்குணங்களில் தலையாயது.

''இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன் என்ற
செவ்வரம்''
(சூடாமணி : 34)

தந்தவன் அவன். அவன் பிறன்மனை விழைந்த வாலியைச் சாடுகிறான்.

''உருமை என்றவற் குரிய தாரமாம்
அரும ருந்தையும் அவன்வி ரும்பினன்
இருமை யுந்துறந் திவன்இ ருந்தனன்;
கருமம் இங்கிதெம் கடவுள் என்றனன்''
(நட்புக் கோள் : 67)

என்று வாலி தன் தம்பியின் மனைவியை வெளவிக்கொண்டதை அநுமன் சொல்கிறான்.

இராவணனைத் தன் வாலிற்சுற்றித் திரிந்த வன் வாலி. அவனுடைய துணையைப் பெற்றிருந்தால் இராமனுக்கு மிகுதியான துணை வலி கிடைத்திருக்கும். அப்படி இருக்க, அவனை நாடாமல் பலவீனனான சுக்கிரீவனோடு நட்புக் கொண்டான் இராமன். இது அரசியல் சூழ்ச்சிக்கு ஏற்றதா? துணைவலியை அறிந்து தக்க துணைவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலே அரச தர்மம். அவ்வாறாயின் வாலியை விட்டுச் சுக்கிரீவனைத் துணையாகச் சேர்த்துக்கொண்டதற்கு என்ன காரணம்?

சுக்கிரீவன், வாலி என்னும் இருவருள்ளும் சுக்கிரீவனையே வேறிடங்களிலுள்ளவர்கள் நல்லவனென்று எண்ணினார்கள். அதனால் அவர்கள் இராமனிடம், சுக்கிரீவனையே துணையாக்கிக்கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். கவந்தன் இதைச் சொல்கிறான் :

''கதிரவன் சிறுவ னானை
கனகவான் நிறத்தி னானை
எதிர்எதிர் தழுவி நட்பின்
இனிதமர்ந் தவனின் ஈண்ட
வெதிர்பொரும் தோளி னானை
நாடுதல் விழுமி தென்றான்;
அதிர்கழல் வீரர் தாமும்
அன்னதே அமைவ தென்றார்''
(கவந்தன் : 55)

இவ்வாறு சவரியும் சொல்கிறாள். அவளே சுக்கிரீவன் இருந்த குன்றத்துக்கு வழியைக் கூறுகிறாள் :

''அனகனும் இளைய கோவும்
அன்றவண் உறைந்த பின்றை
வினைஅறு நோன்பி னாளும்
மெய்ம்மையின் நோக்கி வெய்ய
துணைபரித் தேரோன் மைந்தன்
இருந்தஅத் துளக்கில் குன்றம்
நினைவரி தாயற் கொத்த
நெறியெலாம் நினைந்து சொன்னாள்''
(சவரி பிறப்பு நீங்கு : 6)

இவற்றால் வாலி கொடியவன் என்பதும், சுக்கிரீவன் நல்லவன் என்பதும், இராமனுடைய நட்புக்கு உரியவன் என்பதும் பலர் கொண்ட கருத்து என்பது தெளிவாகும்.

இராவணனோடு போர்புரிவதற்குத் தன் துணை இருந்தால் வெற்றி எளிதில் கைகூடும் என்றும், அந்தத் துணையைத் தேடாமல் பலவீனனான சுக்கிரீவன் துணையை நாடியது நல்ல முயற்சி அன்று என்றும் வாலியே சொல்கிறான் :

'' செயலைச் செற்ற பகைதெறு வான்தெரிந்து
அயலைப் பற்றித் துணைஅமைந் தாய்எனின்,
புயலைப் பற்றும்அப் பொங்குஅரி போக்கிஓர்
முயலைப் பற்றுவது என்ன முயற்சியோ?''
(வாலிவதை : 94)

என்று அவன் கேட்கிறான். 'தன் செயலையெல்லாம் இழக்கும்படியாகச் செய்த ஒரு பகைவனை அழிப்பதற்கு ஆராய்ந்து அயலவனாகிய துணைவன் ஒருவனோடு சேர்ந்தாய் என்றால், அந்தத் துணை வலியதாக இருக்க வேண்டாமோ? மேகத்தைத் தாவிப் பற்றிச் சினம் பொங்க நிற்கும் சிங்கம் போன்ற யான் இருக்க, சிறு முயல்போன்ற சுக்கிரீவனைத் துணையாகப் பற்றிக்கொண்டது எத்தகைய காரியமோ?' என்கிறான். தான் சிங்கம் போன்றவன் என்பதையும், சுக்கிரீவன் முயல் போன்றவன் என்பதையும் குறிப்பாகச் சொல்கிறான். ''தக்க துணைவரைத் தேடிச் சேர்த்துக்கொள்ளாமல் வலிமையற்ற ஒருவனைத் துணையாகக் கொண்டாயே!'' என்று எண்ணி நகையாடுவதுபோல இருக்கிறது இது.

வாலியின் வலிமை தெரிந்தும் அவனைத் துணையாகக் கொள்ளாததற்கு முக்கியமான காரணம், இராமன் தன் பகைவனாகக் கருதியவன் எந்தக் குற்றத்தைச் செய்தானோ அதே குற்றத்தை, அதாவது பிறன் மனை விழைதல் என்னும் குற்றத்தைச் செய்தான் வாலி ஆத

வின், அவனை ஒறுத்தான். இந்த இரண்டு குற்றவாளிகளிலும் ஒரு வேறுபாடு உண்டு. இராவணன் சீதையை வௌவிச் சென்று அசோக வனத்தில் சிறைப்படுத்தியிருந்தானே யன்றி, அந்தப் பிராட்டியின் கற்புக்கு மாசு உண்டாக்கவில்லை. இராமனுக்கு அவளை மீட்பதே நோக்கமன்றி இராவணனைக் கொல்ல வேண்டுமென்பதன்று. இராவணன் சீதையை விட்டிருந்தானானால் இராமனுடைய சீற்றம் தவிர்ந்திருக்கும். இராவண சங்காரமே நிகழ்ந்திராது.

''தையலை விட்டவன் சரணம் தாழ்ந்துநின்
ஐயறு தம்பியோடு அளவ ளாவுதல்
உய்திறன்'' (கும்பகருணன் : 88)

என்று கும்பகருணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான். இந்திரசித்தனும் தோற்று வந்த பின் இந்தக் கருத்தைச் சொல்கிறான் :

''ஆதலால் அஞ்சி னேன்என்று
அருளலை ; ஆசை தான்அச்
சீதைபால் விடுதி ஆயின்,
அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த
தீமையும் பொறுப்பர்;உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான்;
உலகெலாம் கலக்கி வென்றான்''
(இந்திரசித்து வதை : 6)

ஆகவே, இராவணன் சீதையை விட்டிருந்தால் இராமன் அவளை அழைத்துக்கொண்டு சென்றிருப்பான் என்பதும், இராவணனுடைய பிழையைப் பொறுத்து அவனைக் கொல்லாமல் விட்டிருப்பான் என்பதும் தெரிகின்றது. சீதையின் கற்புக்கு மாசின்றி இருந்தமையால், அவளை இராமனோடு சேரும்படி விடுவதே உய்வதற்கு வழி என்பதை இவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் வாலியின் திறத்தில் இவ்வாறு அமையவில்லை. அவன் தன் தம்பியின் மனைவியாகிய உருமையின் நலத்தை நுகர்ந்தான். ஆகவே அந்தக் குற்றம் மன்னிப்பதற்குரியதன்று, செய்துவிட்ட குற்றத்தினால் ஒரு பெண்ணே தன் நலனை இழந்தாள். அதனால் அந்தக் குற்றத்துக்குத் தண்டனை கொடுப்பது அவசியமாயிற்று.

''அந்தத் தண்டனையை நேரே நின்று செய்திருக்கலாமே; ஏன் மறைந்து நின்று கொல்ல வேண்டும்?'' என்பது அடுத்த கேள்வி.

தன்னோடு பொருவாரின் பலத்தில் பாதியை வாலி அடைவான் என்ற நியதி இருந்தாலும், அதை ஒரு பெரிய காரணமாக இராமன் கருதவில்லை. அவனுடைய கருத்தை இலக்குவன் எடுத்துச் சொல்கிறான். ''நின்தம்பி முன்பே வந்து சரணம் புகுந்தமையால் அவனுடைய பகைவனாகிய நின்னைக் கொல்லப்புக்கான். நேர்நின்று பொரப் புகும்போது நீயும் அவனைச் சரணென்று அடையவும் கூடும்; அவ்வாறு செய்தால் தர்மசங்கடம் உண்டாகும்'' என்கிறான். இரண்டு அறச்செயல்கள் ஒன்றனோடு ஒன்று மாறாக இருக்கும்பொழுது சிறந்ததாகிய ஒன்றை மேற்கொண்டு மற்றதை விடுவதே அறத்தின் ஆறு. ஆதலின் குற்றவாளியைத் தண்டிப்பது, சரணம் புகுந்தவனுக்கு அடைக்கலம் வழங்குவது என்ற இரண்டு தர்மங்களில் குற்றவாளியைத் தண்டிப்பதே இன்றியமையாததாதலின் அதனை இராமன் மேற்கொண்டான். இதை இலக்குவன் கூறுகிறான் :

''முன்புநின் தம்பி வந்து
சரண்புக, முறைஇ லோயைத்
தென்புலத்து உய்ப்பென் என்று
செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக்கு ஆகி,
அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி, அண்ணல்
மறைந்துநின்று எய்த தென்றான்''
(வாலிவதை : 125)

என்பதில் இந்தக் கருத்துத் தெளிவாக அமைந்திருக்கிறது.

எனவே, மறைந்து நின்று குற்றவாளிக்குரிய தண்டனையைக் கொடுப்பது முறையாயிற்று.

'மறைந்து கொல்வது வீரத்துக்கு மாசு அன்றோ?' என்ற கேள்வி இங்கே எழலாம்.

வாலியும் இராமனும் ஒருவரை ஒருவர் எதிர் நின்று செய்த போர் அன்று இது. போர் செய்வதாக இருந்தால் அவரவர் தம் படைக்கலங்களை ஏந்தி நின்று 'வஞ்சியாது எதிர் நின்று' பொருதல் முறை. ஆனால் இங்கே நிகழ்ந்தது போர் அன்று. தண்டனைக்குரிய குற்றவாளியை எந்த வகையில் தண்டித்தால் அது பலிக்கும் என்று தண்டம் செய்பவர் ஆராய்ந்து செய்வர்'. ஜம்புலிங்க நாடான் என்பவனை, அவன் தன் காமக்கிழத்தியின் வீட்டிலிருந்து வெளிப்பட்டபொழுது காவலர்

சுட்டுக் கொன்ருர்கள். இங்கே காவலர் செய்தது தண்ட முறையேயன்றிப் போர்முறை அன்று. ஒருவருக்கொருவர் ஓரளவு ஏற்றத் தாழ்வில்லாதவர்களாக நின்று போர் புரிதல் வழக்கு. இங்கே வாலியும் இராமனும் அத் தகைய நிலையில் இருப்பவர்கள் அல்லர். இராமன் தன்பால் சரணம் புகுந்த சுக்கிரீவனுடைய அல்லலைப் போக்குவதாக உறுதி மொழி பகர்ந்தான். தன் குறை முடிப்பதற்கு முன் தன் நண்பனின் குறையை முடிக்க முற்பட்டான். அவனுக்குத் தீங்கு இழைத்த வாலியைத் தண்டித்தான். தன் தம்பி தனக்குப் பிழை செய்தான் என்று எண்ணிய வாலி அவனை ஒறுக்கும்போது, சுக்கிரீவன் விரும்பி அது செய்யவில்லை என்றும், பலரும் வற்புறுத்தியதனுல் அவ்வாறு செய்தான் என்றும் அறிந்த பிறகும் அவனை விடாமல் துரத்தி அலைத்தான். நல்ல வேளையாகச் சுக்கிரீவனுக்கு இரலையங்குன்றம் அடைக்கலத் தானமாக உதவியது. அதனிடம் சென்ருல் வாலி அழிவான் என்பது சாபம். ஆதலால், அங்கே சென்ற சுக்கிரீவனை அவனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

எனவே, அரசியல் முறைப்படி குற்றவாளியை எந்த உபாயத்தால் தண்டிக்கலாம் என்று ஓர்ந்து அந்த முறையைக் கடைப்பிடித்து இராமன் வாலியைக் கொன்ருன். இந்த நிகழ்ச்சியில் போருக்குரிய முறையைக் கொண்டு வரக் கூடாது; தண்ட நீதியையே பார்க்க வேண்டும்.

3. மனமாற்றம்

வாலி முதலில் இராமனைக் குறை கூறுகிருன். இலக்குவன் பதில் சொல்கிருன். அதன் பின்பு வாலி, இராமன் செய்தது சரியென்று ஒப்புக் கொண்டு அவனைப் போற்றுகிருன். இஃது இயல்பாக அமைந்திருக்கிறதா? தன்னைக் கொல்லத் துணிந்த ஒருவனை ஏசியது மன இயல்புக்கு ஒத்த செயல். ஆனுல், பிறகு மனம் மாறிப் போற்றியது அதற்குப் பொருந்துமா? இது அடுத்த கேள்வி. இது சற்று விரிவாக ஆராய்வதற்கு உரியது.

வாலி பிறன்மனை விழையும் தவறு செய்தவனுனும் அவனிடம் நல்ல பண்புகளும் இருந்தன. சிவபக்தியும், நியாயத்தை எடுத்துரைத்தால் உணரும் இயல்பும், கழிந்ததற்கு இரங்கும் பண்பும், சிறியன சிந்தியாத தகைமையும் உடையவன் அவன். இராமனிடம் அவனுக்கு எல்லையில்லாத மதிப்பும் பக்தியும் இயல்பாகவே இருந்தன.

போர் செய்யப் புகும்போது தாரை விலக்குகிருள். அப்போது பேசும் பேச்சிலிருந்து அவன் எவ்வாறு இராமனை மதித்திருக்கிருன் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தாரை சொல்கிருள்: ''உன்னுடைய பலத்தின் முன் நில்லாமல் வலிமை இழந்துபோன சுக்கிரீவன், மீண்டும் போர் செய்வதற்கு வருகிருன் என்ருல் அவனுக்கு உயர்ந்த துணை கிடைத்திருக்க வேண்டும் என்பதுதான் காரணம். இராமபிரான் உன் உயிர் கொள்வதற்குச் சுக்கிரீவனுக்குத் துணையாக வந்திருக்கிருனென்று அன்புடையவர்கள் சொன்ஞர்கள்'' என்று அதைக் கேட்டவுடன் வாலிக்குக் கோபம் வருகிறது. ''நீ என்ன சொல்கிருய்? உலகத்துக்கெல்லாம் தரும நீதியைச் செய்பவனுக்கு இயல்பு அல்லாததைச் சொல்கிருயே, அடிபாவி! நீ பெண்ணுகையால் உயிர் பிழைத்தாய். இல்லாவிடின் இந்தத் தகாத சொல்லைச் சொன்னதற்காக உன்னை நான் கொன்றே இருப்பேன்'' என்கிருன்.

''உழைத்தவல் இருவினைக்கு ஊறு
காண்கிலாது
அழைத்துஅயல் உலகினுக்கு அறத்தின்
ஆறுஎலாம்
இழைத்தவற்கு இயல்புஅல இயம்பி
என்செய்தாய்!
பிழைத்தனை பாவி!உன் பெண்மை
யால்என்ருன்''
(வாலி வதை : 31)

அவன் பேசும் முறையும், பாவி என்று கூறுவதும், அவனுக்கு உண்டான சினத்தை நன்ருக வெளிப்படுத்துகின்றன. ''உன்னைக் கொன்று போட்டிருப்பேன்; நீ பெண் ஆகையால் உன் பேதைமையை அறிந்து அது செய்யாமல் விட்டுவிட்டேன்'' என்றல்லவா சொல்கிருன்? இராமனிடம் அவன் கொண்ட பெரும் மதிப்பு இதனுல் வெளியாகிறது.

''அவன் தருமமே வடிவானவன். உயிரெல்லாம் இரட்சிக்கும் கருணையாளன். இம்மை மறுமை என்னும் இரண்டையும் ஆராய்ந்தறியும் அறிஞன். இந்தக் காரியம் செய்வதால் அவனுக்கு வரும் நன்மை என்ன?'' என்று கேட்கிருன்.

''இருமையும் நோக்குறும் இயல்பினுற்கிது
பெருமையோ ? இங்குஇதில் பெறுவ
தென்கொலோ?
அருமையின் இன்னுயிர் அளிக்கு மாறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத்
தான்அரோ!''
(வாலி வதை : 32)

இராமனைத் தர்ம தேவதையாகவே எண்ணு கிறுன் வாலி. ''தர்மம் தன்னைத்தானே அழித்துக்கொள்ளுமோ ?'' என்று கேட்கிறுன். அது மட்டும் அன்று. ''அவனுடைய பெருமை என்ன ! குரங்கினுடைய சிறுமை என்ன ! கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் அவன்; அஸஹாய சூரன். இந்த உலகமெல்லாம் எதிர்த்து நின்ருலும், தன்னுடைய கோதண் டத்தால் வென்றுவிடும் ஆற்றல் அவனுக்கு உண்டு. தனக்குத் தானே துணையாக இருக்கும் அந்தப் பெருமானுக்குப் புன்மையான தொழிலே யுடைய குரங்கின் நட்பு வேண்டுமோ? அதை அவன் ஏற்பானே?'' என்றும் சொல்கிறுன்.

''நின்றபே ருலகெலாம் நெருக்கி நேரினும்
வென்றிவெஞ்சிலே அலால் பிறிது
வேண்டுமோ?
தன்துணே ஒருவரும் தன்னில் வேறுஇலான்
புன்தொழிற் குரங்கொடும் புணரும்
நட்பனே?''
(வாலி வதை : 34)

''அண்ணன் தம்பி உறவுக்கு இலக்கணமாக உள்ளவன் அல்லவா அவன்? தம்பிகளேயன்றித் தனக்கு வேறு உயிர் இல்லே என்று இருப்பவன். என் தம்பியும் நானும் செய்யும் போரில் இடையே வந்து அம்பைத் தொடுப்பானு? அவன் கருணேக் கடல் அல்லவா ?''

''தம்பியர் அல்லது தனக்கு வேறுஉயிர்
இம்பரின் இலதென எண்ணி ஏய்ந்தவன்,
எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்
அம்புஇடைத் தொடுக்குமோ, அருளின்
ஆழியான்?''
(வாலி வதை : 35)

இவ்வாறு அவன் சொல்லும் மாற்றங்களில் இராமபிரானிடத்தில் அவனுக்கு இருந்த எல்லேயற்ற பெருமதிப்புத் தெளிவாகத் தெரி கிறது. ஆகவே, அவன் தாரை சொன்ன சொல்லே ஏற்கவில்லே. போர் செய்யப் புகு கிருன். அவளும் அவனுடைய வேகத்தைக் கண்டு மேலே ஒன்றும் பேசாமல் இருந்து விடுகிருள்.

இத்தகைய கருத்தை உடையவன் இராம னுடைய அம்புக்கு இலக்காகிருன். இராம னுடைய அம்பு எந்தப் பொருளின் மேல் எய்தா லும் அதை உருவிச் செல்லும் ஆற்றலுடையது. தாடகையை எய்தபோதும், மராமரங்களே எய்தபோதும் இந்த ஆற்றலே நாம் கண்டோம். ஆனல் வாலியை எய்தபோது அது ஊடுருவிச் செல்லவில்லே. அவன் மார்பிலே புதைந்து நின்றது. அதிலிருந்து வாலியின் வலிமையைத் தெரிந்துகொள்ளலாம். அந்த அம்பும் வலிமை உடையதுதான். தன் மார்பில் பதிந்திருந்த அதை எடுப்பதற்கு வாலி பெருமுயற்சியைச் செய்கிருன். தன் கரத்தினுல் பற்றி இழுக்கிருன்; வரவில்லே. வாலினுலும் காலினுலும் வலிமை யோடு பறிக்கிருன். அப்பொழுதும் அது வர வில்லே. சோர்ந்து விழுந்து உருளுகிருன்.

''இந்த அம்பை எய்தவன் சாமானியமான வன் அல்லன். மும்மூர்த்திகளுக்கும் ஒப்பான ஒருவன் செய்த செயல்தான் இது'' என்கிருன். தன்னுடைய முழு வலிமையையும் கொண்டு காலினுலும் மார்பின் வலிமையாலும் அந்த வாளியைப் பறித்து எடுக்கிருன். அதைப் பறித்தவுடன் அங்கிருந்து குருதி வெள்ளம் பெருகி எழுகிறது. முன்னைத் தைத்துக் கொண்டபோது உள்ள வலியைவிட அதைப் பிடுங்கும்போது உண்டாகும் வலி மிகுதியாக இருக்கும். அம்பைப் பறித்த பிறகு வாலிக்கு மிக்க வலி உண்டாகிறது. அந்த அம்பைப் பார்க்கிருன். அதில் இராமனுடைய திரு நாமம் இருக்கிறது.

அதைக் கண்டவுடன் அவனுக்குச் சினம் மூள்கிறது; சிரிப்பும் தோன்றுகிறது. இராமன் செய்தது தவறு என்ற எண்ணத்தால் நகை உண்டாகிறது. ''சூரியன் மரபே நல்லறத்தைத் துறந்துவிட்டது'' என்று நாண் உட்கொள் கிருன்.

அப்போது அவன் முன் இராமபிரான் தோன்றுகிருன். அம்பினுல் உண்டான பெரும் வேதனையினுல் துன்பமும் சினமும் மூள, இருக்கிருன் வாலி. அந்த இரண்டும் காரண மாக அவன் பேசத் தொடங்குகிருன்; இராமனே ஏசுகிருன். அம்பு செய்த புண்ணின் வேதனேயே அவனே அப்படிப் பேசச் செய்கிறது. அவன் பலபல சொல்லி இராமனே ஏசுகிருன்.

அப்படி ஏசிக்கொண்டுவரும்போது மெல்ல மெல்லச் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. வலி குறைந்து வருகிறது. மும்மூர்த்திகளும் ஒருவ ராக வந்தவனென்று மதித்த இராமன் அவன் முன் வந்து நிற்கிறான். இதுகாறும் அவனை நேரே பார்த்தறியாதவன் வாலி. லட்சிய நாயகனாக எண்ணியிருந்த அந்தப் பரம்பொருள் அவன் முன்னே வந்து நிற்கிறது. அவனுடைய திருவுருவ எழில் அவன் உள்ளத்தைக் கவ்வு கிறது. அதே சமயத்தில் அம்பினால் உண்டான புண்ணின் வேதனையும் துன்புறுத்துகிறது.

''அரச நீதி என்பது உங்கள் குலத்தில் உதித்தவர்களுக்கெல்லாம் உரிய சொத்து ஆயிற்றே; அப்படி உள்ள நீ அந்தத் தருமத்தி னின்றும் பிறழலாமா! உன் தேவியைப் பிரிந்த வருத்தத்தால் இன்னது செய்வது என்று அறி யாமல் செய்கையில் திகைத்தாய் போலும்'' என்று கூறுகிறான் :

''கோஇயல் தருமம் உங்கள்
குலத்தினோர் தங்கட் கெல்லாம்;
ஓவியத் தெழுத ஒண்ணா
உருவத்தாய், உடைமை அன்றோ;
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை
திகைத்தனை போலும் செய்கை!''
(வாலி வதை : 86)

இவ்வாறு கூறும் போதே இராமபிரானுடைய உருவ எழில் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அதனால், "ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்!" என்று சொல்கிறான். ஒரு பக்கம் வேதனை; ஒரு பக்கம் இராமனைக் கண்கொண்டு காண்பதனால் உண்டான வியப்பு. இரண்டும் மாறாடுகின்றன. எத்தனை கால மாக இராமபிரானுடைய பெருமையை எண்ணி யிருக்கிறான்! தாரையிடம் சொல்லி விளக்கி யிருக்கிறான்! அவ்வாறு எண்ணத்திலே நின்ற பெருமான் இப்போது கண்முன்னே நிற்கிறான்.

அவன் வேதனை மெல்ல மெல்லக் குறைகிறது. இராமனுடைய திருவுருவக் காட்சியில் அவன் வரவர அதிகமாக ஈடுபடுகிறான். ஆனாலும் அவன் வாய் ஏசுகிறது. மனம் இராமனுடைய வடிவத்தில் ஈடுபடுகிறது. இந்த இரண்டாட்டம் சிறிது நேரம் நடைபெறுகிறது. அவன் என்ன என்னவோ சொல்லி இராமன் செயல் தகாதது என்று பேசிக்கொண்டு வருகிறான்.

பிறகு, இராமன் பேசத் தொடங்குகிறான். சுக்கிரீவன் குற்றம் இல்லாதவன் என்பதைக் காரணங்களுடன் விளக்குகிறான். ''நீ மலைக் குகைக்குள் நெடுங்காலம் இருந்தமையால் மீண்டும் வர மாட்டாய் என்ற எண்ணத்தால் படைத்தலைவர்களும் முதியவராகிய சாம் பவானும் மற்றத் தலைவர்களும் 'நீயே அரசனாக வேண்டும்' என்று வற்புறுத்தினதால்தான் சுக்கிரீவன் அரசனானான். நீ மறுபடியும் திரும்பி வந்த போது உன்னை வணங்கி, நம் அண்ணன் வந்துவிட்டான் என்று பெருமகிழ்ச்சியை அடைந்தான். 'இனத்தவர் கூறியதால் நான் அரசை ஏற்றேன்' என்று சொன்னான். நீ அவன் சொன்னவற்றை ஏற்காமல், அவன் சொன்ன வற்றின் உண்மையை ஆராயாமல், அவனைக் கொல்லப் புகுந்தாய். அவன் குற்றம் இல்லாத வன் என்பதை உணர்ந்தும் நீ இரக்கமில்லாமல் அவனைக் கொன்றுவிடத் துணிந்தாய். அவன் வேறு வழியில்லாமல், உனக்கிருந்த சாபத்தை உணர்ந்து, நீ வர முடியாத ருசிய மூக பர்வ தத்தை அடைந்தான். நீ அவனுடைய தாரத்தை வௌவி அவள் நலத்தை நுகர்ந்தாய். ஆதலாலும், சுக்கிரீவன் எனக்கு நண்பனாதலா லும் உன்னைத் தண்டித்தேன்'' என்கிறான்.

அதைக் கேட்ட வாலி, ''மனிதர்களுக்குள்ள அறத்தை எங்களுக்குச் சார்த்துவது முறை யன்று. ஆகவே எங்கள் விலங்குத் தொழிற்கு ஏற்றதே இது'' என்கிறான்.

''உன்னுடைய பேச்சும் அறிவும் விலங்கிற் குரியவை போல இல்லையே! இத்தகைய அறி வுடைய நீ இது பிழை என்று உணராமல் இருப் பாயோ? உணர்ந்தும் இதைச் செய்தாய். ஆதலின் உன்னை ஒறுத்தேன்'' என்று இராமன் சொல்கிறான்.

''அப்படியானால் விலங்கை வேட்டையாடு வது போல என்னை **மறைந்து கொன்றாயே !** அவ்வாறு செய்தது ஏன்?'' என்று கேட்கிறான் வாலி.

அதற்கு இலக்குவன் மறுமொழி கூறுகிறான். அதை முன்பே பார்த்தோம். ''நீயும் சரணாகதி அடைந்தால் என் செய்வது என்றெண்ணியே மறைந்து எய்தான்'' என்கிறான்.

இப்படி நீண்ட நேரம் வாலிக்கும் இராம னுக்கும் உரையாடல் நிகழ்கிறது. இறுதியில் இலக்குவனும் பேசுகிறான்.

புண்ணினல் உண்டான வேதனை துன்புறுத்த இராமனை நேரிலே கண்ட வியப்பு உள்ளத்தே மெல்ல மெல்ல அழுந்த, இரண்டாட்டத்துக்கு உள்ளாகியிருந்த அவன் மனம் மாற வழி பிறக்கிறது. புண்ணின் வேதனை மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. இராமனுடைய காட்சியும் அவன் கூறிய காரணங்களும் அவன் அறிவிலே பதிகின்றன. அந்தக் கூற்றிலுள்ள உண்மையை உணரத் தலைப்படுகிறுன். 'பெரு வீரன் ஒருவன் தன் மார்பில் பட்ட வேலினுல் வேதனை உருமல் அதனையே பறித்து எய்ய விரும்பினுன்'' என்று திருக்குறளில் ஒரு காட்சி வருகிறது.

''கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.''

ஆகவே மார்பிலே ஏற்ற புண்ணுல் பெரிதும் வேதனை உறும் இயல்பு வீரர்களுக்கு இராது. இங்கே வாலியின் மார்பில் தைத்த அம்பு மிகவும் வலிமையுடையதாகையால் அதைப் பறித்தபொழுது அவன் வேதனைமிகுதி ஆயிற்று. அதனுல், அவன் இராமனை ஏசினுன்.

ஆனுல், இராமனுடன் உரையாடி அவன் உருவ அழகிலே கண்ணையும் கருத்தையும் பறி கொடுத்துக்கொண்டே வரும்போது, வேதனையும் குறைகிறது; நல்லறிவும் தலைப்படுகிறது. அப்போது அவன் இராமன்பால் கொண்ட பழைய மதிப்பும் பக்தியும் மேலெழுந்து வருகின்றன. 'இவன் தர்மம் அழியும்படி செய்ய மாட்டான்'' என்ற உணர்வு மட்டும் உண்டாகிறது. எனவே, இராமனை வணங்கிப் பேசத் தொடங்குகிறுன்:

''அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல் என்பது
எண்ணினன், பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
சென்னியின் இறைஞ்சிச் சொன்னுன்''

(வாலி வதை : 126)

இயல்பான வாலி இராமனை மும்மூர்த்தியே வடிவெடுத்தவன் என்று உணர்ந்தவன், அவன் பெருமையைக் கேள்வியினுல் உணர்ந்த செல்வன். இடையே, இராமன் அம்பின் வலிமையால் உண்டான புண் வேதனையைத் தர, அதனுல் தன் இயல்பான உணர்வு நீங்கி, இராமனைக் குறை கூறலானுன். பிறகு அவன் கூறிய காரணங்களும், மார்பிற்பட்ட புண்ணின் வேதனை குறைவதும் சேரவே தன் பழைய நிலைக்கு வருகிறுன்; அதாவது, இராமன் அறத்தை நிலைநிறுத்த வந்தவன்; மூவரும் ஒருவனுய மூர்த்தி என்ற மதிப்பும் பக்தியும் மீண்டும் அவன் உள்ளத்தில் மலர்ந்துவிடுகின்றன. பாசியின் மேல் ஒரு கல்லை வீசினுல் சிறிது இடைவிட்டு விலகி மீண்டும் பழையபடி சேர்வது போன்ற நிலை இது. இராமனிடம் கொண்ட பெருமதிப்பும் பக்தியும் வாலிக்கு இயல்பாகவே உள்ளவை. அவை சிறிது நேரம் விலகும்படி இராமனுடைய அம்பினுல் உண்டான புண்ணின் வேதனை செய்தது. ஆனுலும் பெருவீரனுதலாலும்; இராமனுடைய பெருமையை உணர்ந்தவனுதலாலும், இராமனை நேரிலே கண்ட காட்சி அவன் உள்ளத்தைக் கவ்வியதாலும்; அவன் கூறிய காரணங்களை நியாயமென்று உணர்ந்தமையாலும் அவன் தன்னுடைய பழைய நிலையையே அடைகிறுன். அவனுடைய மனமாற்றம் இடையிலே வந்தது. இப்போது அது நீங்கிவிட்டது. ஆகவே, வாலி இராமனைப் புகழத் தொடங்குகிறுன். ஏதும் நடக்காமல் இராமன் தன் காட்சியைத் தந்தால் எவ்வாறு மகிழ்வானே அவ்வாறு மகிழ்கிறுன். அவனைத் தான் ஏசியது தவறு என்ற உணர்வும் இருத்தலால் இராமனைப் புகழ்ந்து மகிழ்கிறுன்.

''எம்பெருமானே! நாயேன் அறியாமல் கூறி ஏசியவற்றைத் திருவுள்ளத்திற் கொள்ளாதே. பிறவி நோய்க்கு அருமருந்தனைய பெருமானே! நீ ஏவிய கூரிய அம்பினுல் என் உயிர் போகும் தருணத்தில் நல்லறிவைத் தந்தருளினுய். மூவருமாக இருப்பவன் நீ. அவர்களுக்குள் முதல்வன் நீ. எல்லாம் நீதான். பாவமும் நீயே; தருமமும் நீயே; பகையும் நீயே, உறவும் நீயே! உன் அம்பே தருமம். அதைவிடத் தருமம் வேறு என்ன இருக்கிறது? தருமமே உருவமாக உடைய நின்னைத் தரிசிக்கப் பெற்றேன். இனி நான் காண வேண்டியது என்ன இருக்கிறது?'' என்றெல்லாம் மனம் உருகிப் புகன்ற வாலி, சுக்கிரீவனுக்கு அறிவுரைசொல்லி, அங்கதனை இராமபிரானிடம் அடைக்கலப் படுத்தி, மோட்சத்தை அடைகிறுன்.

''இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு
அப்புறத்து உலகன் ஆனுன்''

(வாலி வதை : 159)

''வானோர்க்குயர்ந்த உலகம்'' என்று வள்ளுவர் கூறும் முத்திப் பேற்றை அவன் அடைகிறான். அதனால் இந்தக் கதைப்பகுதிக்கு ''வாலி மோட்சம்'' என்ற பெயரும் வழங்குகிறது.

இதுகாறும் கூறியவற்றால், இராமன் வாலியைத் தண்டிப்பதற்கு உரிமையுடையவன் என்பதும், அவனை மறைந்து கொன்றது தண்ட நீதியின்பாற்படும் என்பதும், வாலி இயல்பாகவே இராமனிடம் கொண்ட பக்தியும் மதிப்பும் உள்ளத்தே ஆழ்ந்திருந்தமையால், இடையே இராமன் அம்பினால் உண்டான வேதனை காரணமாக அவன் சிறிது ஏசினாலும், இறுதியில் அவனுடைய இயல்பான பண்பே மிதூர்ந்து நின்று இராமன் செய்த செய்கை அறத்தாறென்று உணர்ந்து வாழ்த்தினான் என்பதும் விளங்கும்.

இது பொருந்துமா?

புலவர் மணி — சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்

''இராமன், வாலிமீது போர் செய்யச் செல்லவில்லை; போர் செய்யச் சென்றால்தான் ஒளிந்தது குற்றமாகும்; குற்றவாளியாகிய வாலியைத் தண்டிக்கவே அவன் சென்றான்; குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம்; உத்தரப்பிரதேசத்தில் ஒரு பகற்கொள்ளைக்காரனைக் காவல் பிரிவு அதிகாரி மறைந்து நின்றே சுட்டுக் கொன்றார்; அவர் செய்தது குற்றமென அரசு சொல்லவில்லை; எனவே, தண்டிக்கச் சென்ற இராமன் ஒளிந்தது குற்றமாகாது.''

மேற்கண்டவாறு தமிழ்ப்பேரறிஞர் ஒருவர் என்னிடம் கூறினார்.

நான், ''வாலி வதம் சரியா?'' என்று ஒரு நூல் எழுதியுள்ளேன். கம்பன் அடிப்பொடி அவர்கள் அந்நூலை வெளியிட்டுப் பேசும் பொழுது, ''நாற்பதாண்டு காலமாகக் கம்பன் விழாக்களில் எந்த அறிஞரும் சொல்லாத புதிய கருத்துகள் இந்நூலில் உள்ளன'' என்று குறிப்பிட்டார்கள்.

கம்பன் அடிப்பொடி அவர்களிடத்தே பாராட்டுப் பெறுதல் எளிதன்று. வசிட்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் பெற்றதுபோல அப்பாராட்டு இருந்தது. அந்நூல் கருத்தை ஓரளவு மறுத்தல் வேண்டும் எனக் கருதி அத் தமிழ்ப்பேரறிஞர் மேற்கண்டவாறு கூறினார் என எனக்குத் தோன்றியது. ''இக்கருத்துப் பொருந்துமா?'' என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

''குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்பது ''இடி அமீன்'' கோட்பாடாகும். எந்த நல்லரசும் இக்கோட்பாட்டை ஏற்றுச் சட்டம் இயற்றவில்லை. 'நாயைக் கொல்வதானாலும் விசாரித்தே கொல்ல வேண்டும்' என்னும் ஆங்கிலப் பழமொழி நாடறிந்ததாகும்.

குற்றவாளியைக் கூண்டில் நிறுத்தி, வழக்கறிஞரை நியமித்து, அவனை வாதாடும்படி செய்து குற்றம் மெய்ப்பிக்கப்பட்ட பின்னரே, சட்டத்திலுள்ள நியாயமான தண்டனையை இன்றைய அரசாங்கம் வழங்குகிறது. குற்றவாளிக்கு வசதி இல்லாவிட்டால் அரசாங்கமே தன் செலவில் அவனுக்காக ஒரு வழக்கறிஞரை நியமித்து வாதாடச்செய்யும். இவ்வளவு நாகரிகமான இன்றைய நிலையை நோக்கும் போது, ''குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம்'' என்னும் கோட்பாடு அருவருக்கத்தக்கதென்பது தானே புலனாகும்.

உத்தரப்பிரதேசக்கதை முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலையில் நிகழ்ந்ததாகும். பகற்கொள்ளைக்காரனைப் பலமுறை சரணடையும்படி அரசாங்கம் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தது. சரணடைந்திருந்தால் அவனை விசாரித்தே அரசாங்கம் தண்டனை வழங்கியிருக்கும். அவன் சரணடையாமல் பல கொடுமைகளைச் செய்துகொண்டிருந்ததால், ஒரு தேதியை நிர்ணயித்து, அதற்குள் அவன் சரணடையாவிட்டால் கண்ட இடத்தில் சுடப்படுவான் என அரசாங்கம் இறுதி எச்சரிக்கை விடுத்தது. அதற்கும் அவன் சரணடையவில்லை. இதற்குப் பின்னரே கண்ட இடத்தில் அவனைச் சுடலாம் என அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவின் அடிப்படையில்தான் காவற்பிரிவு அதிகாரி மறைந்துநின்று சுட்டுக் கொன்றார். ''குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம்'' என்றால் அரசு பன்முறை எச்சரிக்கை விடுக்க வேண்டிய அவசியமில்லை. 'சரணடையாவிட்டால் நீ சுடப்படுவாய்' என்று அவனுக்குப் பத்திரிகை வாயிலாக அறிவித்த பின்னரே அரசாங்கம் சுடும் உத்தரவைப் பிறப்பித்தது. குற்றவாளியைத் தண்டிக்கச் சில முறைகள் உண்டு. அவற்றைக் கடைப்பிடிக்காவிட்டால் அரசுமீது வழக்குத் தொடரக்

குற்றவாளிக்கு உரிமை உண்டு. உலகில் உள்ள நியாயமான அரசாங்கங்கள் அனைத்தும் இவ்வாறே சட்டங்கள் செய்திருக்கின்றன. ''குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம்'' என்னும் கொள்கை காட்டுமிராண்டிக் காலத்தில் இருந்திருக்கிறது. பண்பும் நாகரிகமும் வளர்ந்த பின்னர் இவ்வழக்கம் பெரிதும் ஒழிக்கப்பட்டுவிட்டது.

இராமன் நாகரிக உணர்ச்சியும் பண்பாடும் இல்லாதவனாய் இருந்திருந்தால் காட்டுமிராண்டித்தனமான இந்தக் கொள்கையைப் பின்பற்றி இருக்கலாம். வான்மீகத்தில், ''பரதன் ஆட்சிக்குட்பட்ட உன்னை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம்'' என இராமன் சொல்வதாக ஒரு குறிப்பு வருகிறது. வாலி வதைக்குப் பின் தாரையைச் சுக்கிரீவன் மனைவியாக்கிக்கொண்டான் என்றும் வான்மீகம் சொல்கிறது. இது அருவருப்பாக இருக்கிறதெனக் கருதியே கம்பன் தாரையைக் கற்புக்கரசியாக உருவாக்கியிருக்கிறான். இதுபோலவே, ''உன்னை எப்படி வேண்டுமானாலும் சிட்சை செய்யலாம்'' என இராமன் வாலி இடம் சொன்னதாக வரும் குறிப்பையும் நாகரிகமற்றதெனக் கருதிக் கம்பன் சொல்லாது விடுத்திருக்கிறான்.

வாலி, இராமனைப் பார்த்து, ''என்னை நீ ஏன் ஒளிந்து நின்று கொன்றாய்?'' என வினவிய போது, இலக்குவன் பின்வருமாறு விடை இறுத்ததாகக் கம்பன் பாடுகிறான் :

''முன்புநின் தம்பி வந்து
சரண்புக, ''முறைஇலோயைத்
தென்புலத்து உய்ப்பன்'' என்று,
செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக் காக்கி
அடைக்கலம் யானும் ஒன்றி
என்பது கருதி அண்ணல்
மறைந்துநின்று எய்தது என்றான்''

''சுக்கிரீவனிடம் உன்னைக் கொல்வதாக அண்ணன் முன்னமே வாக்களித்திருக்கிறார். போர்க்களத்தில் அண்ணன் நேரே உன் முன் வந்தால் நீ சரணாகதி என்று சொல்லிவிட்டால் உன்னைக் கொல்ல முடியாமற்போகும். இதனால் உன் தம்பிக்கு அளித்த வாக்குப் பொய்த்துப் போகுமே எனக் கருதி அண்ணன் மறைந்து நின்று அம்பு தொடுத்தார்'' என்பது இலக்குவன் விடையாகும். இதில், ''முறைஇலோயை'' என இலக்குவன் சுட்டுவதால் பிறனில் விழைந்தவனுக்கு மன்னிப்பு இல்லை எனக் கருதியே இராமன் அவ்வாறு சுக்கிரீவனுக்கு வாக்களித்திருக்கிறான் என்பது தெளிவாகப் புலனாகிறது.

வாலி முன் சென்றால் பாதிப் பலம் போய்விடும் எனக் கருதி இராமன் ஒளிந்தான் எனப் பலர் ஒரு தவறான எண்ணத்தைத் தம்முள் புகுத்திக்கொண்டிருப்பதால், இலக்குவன் விடையைப் பொய்யானதெனத் தள்ளித் தாமே புதிதாக வேறு பல சமாதானங்களைக் கண்டு பிடித்துச் சொல்லத் தொடங்கியிருக்கின்றனர்.

இலக்குவன், ''வாய்மை யாதும் சோர்வு இலன்'' எனக் கம்பனால் பாராட்டப்படுபவன்; அவன் சொன்ன சமாதானம் ஒன்றுதான் கம்பனால் சொல்லப்பெற்றதாகும். அதனைத் தள்ளுவது கம்பனுக்கு நியாயம் செய்வதாகாது.

''கிட்டுவார் பொரக் கிடைக்கின் அன்னவர்
பட்டநல்வலம் பாகம் எய்துவான்''

என்பது அநுமன் வாக்கு. ''கிட்டுவார் பொர'' என்றால் ''போர் செய்ய நெருங்குபவர்'' என்று பொருள். போர் செய்ய நெருங்கினாலே அவர்கள் அவனுக்குக் கிடைத்துவிடுகிறார்கள் என்பது தானே பெறப்படும். அப்புறம் ''கிடைக்கின்'' என்று சொல்லத் தேவை இல்லை. இதனால் ''கிடைக்கின்'' என்பது வேறு பொருளில் தான் இங்கே வரவேண்டும். ''பொர வருபவர்கள் வாலியின் கைக்குள்ளோ, காலுக்குள்ளோ, வாலுக்குள்ளோ அகப்பட்டுக்கொண்டால்'' என்று இதற்குப் பொருள் செய்வதுதான் பொருத்தமாகும். எதிரிகள் வாலியின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டால் அவர்களின் பாதிப்பலத்தை அவன் பெறுவான் என்பதே அநுமன் வாக்குக்குரிய நேர் பொருளாகும்.

''பேதையர் எதிர்குவர் எனின்'' என வாலி சொல்வது, தன்னை வந்து எதிர்ப்போரைக் குறிக்குமே அன்றி எதிரே வருவோரைக் குறிக்காது. இராவணன், ''ஊன வில்லிறுத்து'' என உண்மையைத் திரித்துச் சொல்வதால், அவன் வரபலம் பற்றிப் பேசுவதும் உண்மையைத் திரித்துக் கூறுவதாகவே கொள்ளப்படும். அநுமன் வாக்கு ஒன்றுதான் இதற்குச் சரியான பிரமாணமாகும். அநுமன் வாக்கிற்கு நாம் கொள்ளும் பொருள் பொருத்தமானது தானா என்னும் ஐயத்தை வேறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டு எளிதில் நீக்கிக் கொள்ளலாம்.

சுக்கிரீவனும் வாலியும் போர் செய்யும் போது, ஒருவருக்கொருவர் தோற்காது போரிட்டனர் எனக் கம்பன் கூறுகிறுன் :

''வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர்;
வேறு என்னே விளம்பல் ?
ஒருவர்க்கு ஆண்டுஅமர் ஒருவரும்
தோற்றிலர்''

என்பது கம்பன் வாக்கு.

வாலி முன் சென்றதும் பாதிப்பலம் போவது உண்மையாக இருக்குமானுல் சுக்கிரீவன் தோற்காமல் நெடுநேரம் எவ்வாறு போர் செய்ய முடியும் ?

''கிட்டுவார் பொரக் கிடைக்கின்'' என்னும் பாட்டையும் இந்தப் பாட்டையும் சேர்த்துப் பார்த்தால் நியாய உணர்ச்சி உள்ள யாரும் கீழ்க்கண்டவாறுதான் பொருள் கொள்ள இயலும்.

''வாலியின் பிடியில் அகப்பட்டால் பாதிப் பலம் போகும் என்றுலும் அவன் அந்த வர பலத்தை விரும்பிப் பயன்படுத்தினுல்தான் பாதிப்பலம் போகும். சுக்கிரீவனேத் தன் சொந்த பலத்தால் கொன்றுவிடலாம் என வாலி கருதியதால் அந்த வரபலத்தை அவன் பயன்படுத்தவில்லே. இதனுலேயே ஒருவருக்கொருவர் தோற்காமல் போரிட்டுள்ளனர்.''

இவ்வாறு பொருள் செய்யாவிட்டால் பாடல்கள் இடிக்கும். ''கிடைக்கின்'' என்பதற்கு வேறு பொருள் கொண்டாலும், வாலி முன் சென்றுல் பாதிப்பலம் போகும் என்னும் கூற்று முற்றிலும் தவறுனதென்பதைச் சுக்கிரீவன் தோற்காமல் போர் செய்த நிலே இனிது புலப்படுத்தும்.

சுக்கிரீவன் மராமரச் சோதனேயை நடத்தும் போது அவனுக்கு, இராமன் மறைந்து நின்று அம்பெய்வான் என்னும் செய்தி தெரியாது. வாலி இடத்தே செல்லும்போதுதான் இராமன் திடீரென இதனே அறிவிக்கிறுன். எனவே, மராமரச் சோதனே செய்யும்போது இராமன் நேர் நின்று அம்பெய்வான் என்றுதான் அவன் கருதியிருக்க வேண்டும். நேர் நின்றுல் பாதிப் பலம் போகும் என்பது உண்மையாக இருக்குமானுல் மராமரச் சோதனே அர்த்தமற்றதாகி விடும். இதனுலும் வாலி முன் சென்றுல் பாதிப்பலம் போகும்' என்பது உண்மை அன்று என நாம் அறிய முடிகிறது.

பாதிப்பலம் போகாதென்றுல் இராமன் ஒளிந்து நின்று அம்பெய்ய வேண்டிய அவசியமே இல்லே. பின் ஏன் மறைந்து நின்றுன்? இலக்குவன் வாக்கு உண்மையே எனக் கொண்டால் தான் இதற்கு விடை கிடைக்கும்.

பிறனில் விழைந்தானுக்கு மன்னிப்பு இல்லே என்பது இராமாவதாரத்தின் முக்கிய கோட்பாடாகும். ஒரு மராமரத்தைத் தொளேத்தாலே வாலியின் பலத்திற்கு மேற்பட்ட பலம் இராமனுக்கு உண்டு என்பது பெறப்படும். இராமனே ஏழு மராமரங்களேத் தொளேத்திருக்கிறுன். வாலி இருக்கும் இடத்தே நடந்த இந்த நிகழ்ச்சியை அவன் நிச்சயம் அறிந்தே இருக்க வேண்டும். தன்னேவிடப் பன்மடங்கு வலிமை வாய்ந்த ஒருவன் தன்னேக் கொல்ல வந்திருக்கிறுன் என வாலி அறிந்தால் வேதம் கற்ற அவன் தன் பிழையை உணர்ந்து தன்னிடம் சரணடையக்கூடும் என இராமன் எதிர்பார்த்திருக்கிறுன். எனவே, நேரே சென்றுல் மன்னிப்பு வழங்க வேண்டிய நிலே ஏற்படும். பிறனில் விழைந்தானுக்கு மன்னிப்பு இல்லே என்னும் கருத்தை நிலேநாட்ட வேண்டும் என்றுல் மறைந்து நிற்பதைத் தவிர வேறு வழியில்லே. ஒளிந்து நிற்பது தவறு என்பதை இராமன் உணர்ந்தே இருக்கிறுன். விசாரிக்காமலும், முன் அறிவிப்புச் செய்யாமலும், நேரே செல்லாமலும் அம்பெய்வது குற்றமே ஆகும். ஆனுல், ''பிறனில் விழையாமை'' என்னும் அறத்தை நிலேநாட்டுவதற்காக இத்தனே பழிகளேயும் மேற்கொள்ள இராமன் துணிந்திருக்கிறுன். ஒரு பேரறத்தை நிலேநாட்ட இத்தகைய பழிகளே இராமன் ஏற்றுக்கொண்டிருக்கிறுன் எனக் கூறுவதன்மூலம் கம்பன் பிறனில் விழையாமை என்னும் அறத்தின் சிறப்பை உணர வைக்கிறுன். ஒளிந்தது குற்றம் என்பதை உணர்த்தவே ''போரில் வில்லறம் துறந்து'' என இராமனேச் சுக்கிரீவனிடம் பேச வைக்கிறுன். அங்கதனிடம் ''இதனே நீ பொறுத்தி'' எனச் சொல்ல வைக்கிறுன். ஆனுல், ஒரு பேரறத்தை நிலே நாட்டாது இராமன் இவ்வாறு செய்தான் என்பதை நோக்கும்போது, இக்குற்றங்கள் அனேத்தும் அடிபட்டுப் போகின்றன. இலக்குவன் விடை இதனேயே தெளிவுபடுத்துகிறது. இவ்வாறு சொல்லாமல் குற்ற

வாளியை எப்படியும் தண்டிக்கலாம் என்பதற்காக இராமன் ஒளிந்தான் என்பது நாகரிகமாகவும் இல்லை; பண்பாடாகவும் இல்லை; கம்பன் கருத்தாகவும் இல்லை.

வாலி வதம் முடிந்த பின்னர் இராமன் சுக்கிரீவனுக்கு அறிவுரை சொல்லும்போது, ''பூண்டபேர் அரசுக்கு ஏற்ற யாவையும் புரிந்து, போரில் மாண்டவன் மைந்தனோடும் வாழ்தி நல்திரு வின்வைகி'' என்று கூறுகிறான். இதில் இராமன் வாலியைப் போரில் மாண்டவன் என்று சொல்வதால் அவன்மீது அம்பெய்து கொன்றதைப் போராகத்தான் அவன் கொள்கிறான் என்பது தெளிவாகிறது. அவனே அதனைப் ''போர்'' எனச் சொல்லும்போது, நாம் அவன் போர் செய்யச் செல்லவில்லை என்பது பொருத்தமாகுமா? போர் வாயிலாக வாலியைத் தண்டிக்க இராமன் சென்றிருக்கிறான் என்று கூறுவதுதான் பொருத்தமாகும்.

''முன்புநின் தம்பி வந்து சரண்புக'' என்னும் பாடல் வாயிலாகச் சொல்லும் சமாதானம் ஒன்றுதான் கம்பனால் சொல்லப்பட்டதாகும். ''சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வெல்லலாம்''— ''கொடியோனை எப்படியும் தண்டிக்கலாம்''— ''குற்றவாளியை முகமூடி போட்டுத் தூக்கில் இடுவதுபோல ஒளிந்து நின்று கொல்லலாம்'' என்பன போன்ற சமாதானங்களை அவன் சொல்லவில்லை. இச்சமாதானங்கள் பொருத்தமானவையாக இருந்தால் கம்பன் இலக்குவன் வாயிலாக இவற்றை மிக எளிதில் சொல்லியிருப்பான். எனவே, இவை அனைத்தும் பொருத்தமற்றவை எனக் கம்பன் கருதியிருக்கிறான் என்பது தெளிவாகிறது. கம்பனுக்கு நியாயம் செய்யக் கருதும் அறிஞர்கள் அவன் சொல்லியிருக்கும் சமாதானத்திற்கு விளக்கம் சொல்ல வேண்டுமே அன்றித் தாமாக புதிய நியாயங்கள் கற்பிக்கக்கூடாது. வாலி கதையை நிறைவு செய்வதற்காகக் குற்றவாளியை எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்னும் பண்பற்ற ஒரு கருத்தை நாட்டில் பரப்புவது நல்லதன்று; குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு அரசு பல தந்திரங்களைக் கையாளும்; ஆனால், தண்டிக்கும்போது முறைப்படி விசாரணை செய்து, குற்றவாளிக்கும் வாதாடச் சந்தர்ப்பம் கொடுத்து, அதன்பின்னரே தண்டிக்கும். ஏதாவது புதிதாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக நாகரிகமும் பண்பும் நியாயமும் அற்ற கருத்துகளைக் கூறுவது அழகாகாது. அறிஞர்கள் சிந்திப்பார்களாக!

கம்பன் காட்டும் இறைநெறி

கோவை அ. கிருஷ்ணசாமி

கடவுள் தத்துவத்தைப்பற்றிப் பல சமயங்களில் பலபடியாகக் கூறப்பட்டுள்ளன. சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய மதங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரத தேசம் முழுவதும் பரவியிருந்தன. கம்பன் வாழ்ந்த ஒன்பதாம் நூற்றாண்டு, சைவ சமயம் தழைத்தோங்கிய காலம். குறிப்பாக, சோழ மன்னர்கள் தேவாரத் திருமுறைகளிலே தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள். பராந்தகச் சோழன் தில்லையம்பலத்துத் திருமுகட்டைப் பொன்னால் பொதிந்து, அதனைப் பொன்னம்பலமாக்கினான். திருநீற்றுச்சோழன் தாராசுரத்தில் ஒரு பெரிய சைவக் கோயிலை எடுப்பித்தான். இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழீஸ்வரம் என்னும் சிவன் கோயிலை நிர்மாணம் செய்தான். இவன் தந்தை இராஜராஜ சோழனும் தஞ்சாவூரில் மாபெரும் பெருவுடையார் ஆலயத்தைக் கட்டி முடித்தான். ஆகவே, இராஜ பரம்பரையினர் வைணவப் பெருமானை நினைத்துப் பார்த்தார்களா என்றால், திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

புத்தமதம் நாகை போன்ற கடலோரங்களில் தோன்றினாலும், அதில் மன்னர்கள் ஈடுபாடு கொள்ளவில்லை. அதே சமயம், அதற்கு ஊறு விளைவிக்கவும் இல்லை. சைவம் வளர்ந்த அக்காலத்தும் வைணவ சம்பிரதாயத்தின் தமிழ் வேதம் என்று போற்றப்பட்ட நாலாயிர திவ்விய பிரபந்தமும் மக்கள் மனத்தில் ஊன்றி நின்றது. ''பழமறைகள் **முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே''** என்று சொன்னவண்ணம் செய்த கச்சி வரதராஜப் பெருமாளைப் பாடி மகிழ்ந்தவர்கள் அடியார்கள். திருவேங்கடமுடையானையும் சிவபெருமானையும் ஒன்றாகப் பார்த்துப் போற்றினவர்களுள் முதல் மூவருள் ஒருவரான பேயாழ்வார் பாடினார்:

''தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும்
சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால்
—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல்
எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இயைந்து''

இப்படி அவர் பாடி, ஏகோபித்த ஒரு முடிவு கட்டி, சைவ வைணவ ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தினார். ஆகவே, தேவாரத்தையும் திவ்விய பிரபந்தத்தையும், வாழ வழிவகுத்த நூல்கள் என்று மக்கள் எடுத்துக்கொண்டனர். இருப்பினும், சில இடங்களில் சமயக் காழ்ப்புணர்ச்சி தோன்றத்தான் செய்தது.

கம்பனுக்கு முன்தோன்றிய கவிஞர்கள் தங்களது இலக்கியப் படைப்புகளில் பலப்பல தனிப்பட்ட தெய்வங்களுக்குக் காப்புச் செய்யுள்கள் இயற்றினர். இதனால் வாதமும் பிரதிவாதமும் தோன்ற ஆரம்பித்தன. இதை நன்கு புரிந்துகொண்டவன் கவிச்சக்கரவர்த்தி. கற்பனையாம் தேரேறி, கனவுலகில் சஞ்சரித்து, அற்புதமாய்க் கண்டவற்றை அமுதொழுகும் இசை நிறைந்த சொற்களிலேதான் படைத்துச் சொல்லும் திறம் படைத்த மாபெருங் கவிஞன் மட்டுமல்ல கம்பன், உயர்ந்த தத்துவஞானியுங்கூட. இவற்றிற்கெல்லாம் மேலாகச் சிறந்த பக்தனாகவும் விளங்கினான். திருமாலின் அவதாரத்தைக் கூறவந்தவன்தான் வைணவன் என்பதை எந்த இடத்திலும் காட்டிக்கொள்ளவில்லை. அதே சமயத்தில் தான் பின்பற்றுவது சைவம் என்று பறைசாற்றிக்கொள்ளவுமில்லை. இறைவனைப்பற்றிச் சித்தர்கள், ஞானியர்கள் போன்று சூக்கும மொழியில் பேசாமல்,

''எல்லையொன் றின்மை எனும்பொருள்
அதனைக் குறிகளால் காட்டும் வல்லவன்''

என்னும் வாக்கிற்கிணங்கச் சாதாரண மக்களுக்கும் புரியும்படியாக, உணரக்கூடிய வகையில், பக்தியுள்ளத்தோடு இறைவனை நெருங்கி, எளிய சொல்லால் விழுமிய பொருளைக் காட்டிச் சென்றவன் கம்பன்.

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்னும் தமிழர் மரபுக்கேற்ப நாமரூப பேதமற்ற பரம்பொருளை முதன் முதலில் பாட ஆரம்பிக்கிறான். கடவுளுக்கு இதுதான் இலக்கணம் என்று சுட்டிக் காட்டுகிறான். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முப்பெருஞ் செயல்களை இறைவன், குழந்தை விளையாட்டாக, அதே சமயத்தில், திட்டமிட்ட ஒழுங்கு முறையில், அற்புதமாக நிகழ்த்துகிறான். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு காப்புச்செய்யுளைச் சிறந்த சொற்களாலே வடிக்கின்றான்:

''உலகம் யாவையும் தாமஉள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே''

கம்பன் தோன்றிய இடம், சோழ நாட்டில் காவிரிக்கரையில் அமைந்த திருவழுந்தூர் ஆகும். இத்தலத்தை 'மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கைமன்னன்' என்று அழைக்கப்படும் திருமங்கை ஆழ்வாரும், சைவச்சமயச் செம்மலான ஆளுடைபிள்ளை எனப்படும் திருஞானசம்பந்தப் பெருந்தகையாரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவ்விருவரது வாக்கிலிருந்தும் அந்தக் காலத்திலும் இவ்வூர் இயற்கை வளமும் கலைவளமும் கொண்டதென்றும், இங்கே சைவமும் வைணவமும் சிறந்து விளங்கினவென்றும் தெரிகிறது. இவ்வூரில் குடிகொண்டுள்ளவர், செங்கமல வல்லி சமேத ஆமருவியப்பர். எதிர்ப்புறக் கோயிலில் இருப்பவர், வேதபுரீஸ்வரர். நாள்தோறும் ஒருவர் முகத்தில் மற்றவர் விழிக்க வேண்டும் என்கின்ற நிலை. ஆண்டுதோறும் பல்குனி மாதம், புனர்வசு நட்சத்திரத்தில் ஆமருவியப்பனை இராமனுகக் கோலம் செய்து, வேதபுரீஸ்வரர் சந்நிதியில் இருத்தி, வழிபாடு செய்து, மக்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் விநியோகம் செய்வார்கள். அதே மாதிரி, மார்கழி மாதத்தில் திருவாதிரைப் பௌணர்மியன்று அருணோதயத்தில், வேதபுரீஸ்வரர் நடராஜ தாண்டவக்கோலத்தில் ஆமருவியப்பன் சந்நிதி முன்பாக ஆருத்ரா தரிசனக் காட்சி தருகிறார். இப்பழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆகவே, இராமாவதாரக் கலைக்கோயிலைச் சிறப்புறச் செய்வதற்கு ஓர் உயர்ந்த சமரச பக்தி சூழ்நிலை அமைந்தது கவிஞனுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றுதான் கொள்ள வேண்டும்.

முனிவர்கள், தேவர்கள், அநுமன், வீடணன் முதலான நற்குணப் பாத்திரங்கள் மட்டுமல்லாமல் விராதன் போன்ற அவுணர்களும் இராமபிரானைப் போற்றிப் பாடுகிறார்கள். பக்தி ரசம் பருகவேண்டுமெனில் கம்பனின் விராதன் வதைப்படலத்தை மட்டுமே படித்தால் போதும். அத்துணை உயர்ந்த கவிகள்!

''தாயான பசுவைக் கன்று அறியும். அதே போல், தாய்ப்பசுவும் கன்றை அறியும். உலகின் தாய் ஆகி நீ எல்லாப் பொருள்களையும் அறிவாய். ஆனால், அவைகள் உன்னை அறிவதில்லை. எல்லா இதயத்துள்ளிருந்தும் நீ, ஞானமுண்டானபோது ஞானியர்களுக்குத் தென்படுகிறாய். அதனால் ஞானிகளின் இதயத்தில் மட்டும் நீ வந்தாய் என்று சொல்ல முடியுமா, என்ன? இந்த உண்மையை நினைக்கும் போதுதான் வாராதே வரவல்லவன் நீ என்று சொல்ல வேண்டியுள்ளது.''

கிருஷ்ணவதாரத்தில் ஆனிரை மேய்த்து ஆருயிர்களைக் காத்ததால் பசுவையையும் கன்றையும் இணைத்துக் கவிஞன் பாடியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. இனிக் கம்பன் பாடலைப் பார்ப்போம் :

''தாய்தன்னை அறியாத கன்றில்லை,
தன்கன்றை
ஆயும்அறியும்; உலகின்தாய் ஆகிஐய!
நீஅறிதி எப்பொருளும்; அவையுன்னை
நிலையறியா ;
மாயைஇது என்கொலோ? வாராதே
வரவல்லாய்!''

ஆமருவியப்பனைப் பாடிய பிறகு வேதபுரீஸ்வரர் ஞாபகம் வருகிறது கவிஞனுக்கு.

''உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் பொதிந்துகொண்டிருக்கின்ற உனது திருவடிகளை வேதங்கள் பாடுகின்றன. திருவடிகளிலே அண்டசராசரங்கள் அடங்கிவிட்டபடியால், உனது முழு உருவம் எப்

பேர்க்கொத்ததாய் இருக்கும் என்று கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லையே. இன்னொர் அதிசயம். கடலில் நீ நிறைந் திருக்கின்றாய். அது மட்டுமா! பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றிலும் நிறைந் திருக்கிறாய் அடடா! எப்படி அவை உன்னைத் தாங்குகின்றன? வியப்பிலும் வியப்பே!

''வேதங்கள் அறைகின்ற உலகெங்கும்
விரிந்தன, உன்
பாதங்கள் இவைஎன்னில் படிவங்கள்
எப்படியோ!
ஓதங்கொள் கடலன்றி ஒன்றினெடு
ஒன்றுெவ்வாப்
பூதங்கள் தொறும்உறைந்தால்
அவையுன்னைப் பொறுக்குமோ!''

ஆகவே, ஆமருவியப்பனுக்கும் வேதபுரீஸ் வரர்க்கும் சமரசமான பக்தியை விராதன் வாலாக வெளிப்படுத்துகின்றான் கவிச் சக்கரவர்த்தி.

இந்து மதத்திலே முப்பெரும் பிரிவுகள் அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்பன. இவை ஒன்றுக்கொன்று முரணு னவை அல்ல. ஒன்றை மற்றையது பூரண மாக்கும் வகையில் அமைந்தது. எத்தகைய கருத்திற்கும் உடன்பட்டவன் இறைவன்.

''ஒருவனாக இறைவன் உள்ளான். ஆனாலும் பலவகைப்பட்ட தனித்த இயக்கங்கள் போலவும் தோற்றமளிக்கிறான். இறைவன் ஒரு பொருள் இடத்து இருக்கிறான் என்றும் சொல்லலாம், இல்லையென்றும் சொல்ல லாம். பெருங்கடல், சமுத்திரம் என்று சொல்லப்படுகிறது. அதில் உள்ள வலை குடாவும் நெடுங்கழியும் அதைச் சார்ந் தவையே. கடவுள் தத்துவமானது, அநாதி யாய், இறுதியில்லாத காலத்தையே எட்டுவ தாய், எங்கும் ஊடுருவி நிற்பதாய் உள்ள ஒரு நியதி தத்துவம்தான்.

இக்கருத்தை யுத்த காண்டக் கடவுளின் வாழ்த் துப் பாடலாகச் சின்னஞ்சிறு சொற்களாலே மிக அழகாகப் பாடுகின்றான் :

'' 'ஒன்றே' என்னின், ஒன்றேஆம்;
'பல'என்று உரைக்கின், பலவேஆம்;
'அன்றே' என்னின், அன்றேஆம்;
'ஆம்'என்று உரைக்கின், ஆமேஆம்;
'இன்றே' என்னின், இன்றேஆம்;
'உளது'என்று உரைக்கின், உளதேஆம்;
நன்றே நம்பிக் குடிவாழ்க்கை!
நமக்குஇங்கு என்னே பிழைப்புஅம்மா!''

இதற்கு மேலாகவும் வியாக்கியானம் செய் கின்றான்.

''பரம்பொருள் ஒன்றாய் இருப்பவன். சந்திர சூரியர்களாய் இரண்டாய் இருப்பவன். மும் மூர்த்திகளாய் இருப்பவன். நான்கு வேத மாய் இருப்பவன். பஞ்ச பூதங்களாய் இருப்பவன். அவன் ஒருவனே தெய்வம். அவனை நெஞ்சில் வைப்போமாக.''

''ஒன்றுஆய், இரண்டு சுடர்ஆய்,
ஒருமூன்றும் ஆகி,
பொன்றாத வேதம்ஒரு நான்கொடு,
ஐம்பூதம் ஆகி,
அன்றுஆகி, அண்டத்து அகத்துஆகி
புறத்தும் ஆகி
நின்றான் ஒருவன் நீள்கழல் நெஞ்சில்
வைப்பாம்.''

பஞ்சபூதங்களின் விருத்தியை ஒரே பாட்டில் அமைத்து ஆஞ்சநேயப் பெருமானை வாழ்த்தி வணங்குகின்றான் :

''அஞ்சிலே ஒன்று பெற்றான்,
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றுஆறு ஆக,
ஆர்உயிர் காக்க ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்,
அவன்எம்மை அளித்துக் காப்பான்''

இப்பாடல் சில விஷ்ணு தலங்களிலே நாள் தோறும் பாராயணம் செய்யப்பட்டு வருவதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

''அருவமாகவும், உருவமாகவும், அருவுருவ மாகவும் இறைவன் இருக்கின்றான். சரா சரங்களில் உள்ள உயிர்தோறும் உறைகின் றான். நன்மையும் நல்லறிவும் அவனே ஆகித் தீமையை அழிப்பவனும் தீயோரைக் கடிபவனும் நல்லோரைக் காப்பவனும் ஆகிப் பல நிலைகளிலும் இறைவனை உணரும் போது அவன் எல்லாமும் ஆகின்றான். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்னும் கொள்கையில், தன்னால் தன்னுள் உறையும் இறைவனால் நிகழ்கின்றது.''

இக்கருத்தை இந்திரன் இராமனைத் துதிக்குமிடத்து அவன் வாயிலாகக் கவிஞன் வெளிப்படுத்துகிறான்:

''ஒன்றுஆகி, மூலத்து உருவம்பல ஆகி,
உணர்வும்உயிரும் பிறிதுஆகி, ஊழி சென்று
சென்று ஆசறும் காலத்து அந்நிலையது ஆகி,
திறத்துஉலகம் தான்ஆகி, செஞ்சவே நின்ற
நன்றுஆய ஞானத் தனிக்கொழுந்தே! எங்கள்
நவைதீர்க்கும் நாயகமே! நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி; அயல்-பேரைக் காய்தி!
நிலைஇல்லாத் தீவினையும் நீதந்தது அன்றே?''

நாலு வேதத்திற்கும் வேலி போன்றவன் வாலி. அளப்பரிய வரபலம் பெற்றவன். கடலைக் கடைந்து தேவர்க்கு அமுதம் ஈந்தவன். அப்பேர்க்கொத்த வலிமையையும் பெருமையினையும் உடைய வாலி, இராமனது அம்பால் அடியுண்டு வீழ்ந்தவன். இறையுணர்வு பெற்றவுடன் அவனது வாக்கால், அத்வைத சித்தாந்தத்தை கவிஞன் கோடியிட்டு காட்டுகிறான்:

''ஏவுகூர் வாளியால் எய்துநாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவுதந்து
அருளினாய்
மூவர்நீ! முதல்வன்நீ! முற்றும்நீ! மற்றும்நீ!
பாவம்நீ! தருமம்நீ! பகையும்நீ! உறவும்நீ!''

சமயங்களின் உண்மை நிலையை நோக்கும் போது அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவை அல்ல என்பது தெளிவாகும். எல்லா நதிகளும் கடலையே நோக்கி ஓடுகின்றன. அதுபோல, எல்லாச் சமயங்களும் இறைவனையே நோக்கிச் செல்கின்றன.

ஒரே பொருளுக்கு வெவ்வேறு மொழியில் வெவ்வேறு பெயர்கள் இருப்பது போலவும், ஒரே பொருளின் தனித்தனிப் பகுதிகளை மட்டும் கண்டு அதுதான் முழுப்பொருள் என்று கருதிப் பெயரிடுவது போலவும்தான் உலகத்தில் பற்பல சமயங்கள் உள்ளன. கவிஞன் பாடுகின்றான்:

''கல்லிடைப் பிறந்து, போந்து,
கடலிடைக் கலந்த நீத்தம்,
'எல்லையில் மறைக ளாலும்
இயம்பஅரும் பொருள்ஈது' என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி,
துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே.''

''தோள்கண்டார், தோளே கண்டார்,
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும், அஃதே,
வாள்கொண்ட கண்ணார் யாரே,
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.''

இராவணனது மந்திராலோசனை சபையிலே, வீடணன் வாயிலாக, இரணியன் வதைப் படலம் என்கின்ற அற்புதமான ஒரு தனிக் காவியத்தையே படைத்துவிட்டான். கம்பனின் மேதாவிலாசத்திற்கு இந்த ஒரு படலம் மட்டுமே போதுமானது என்பார்கள், அறிஞர்கள். இக்கதை முதனூலாகிய வால்மீகத்தில் இல்லை. எவ்வாறு இக்கருத்து கவிஞனுக்கு உதயமாயிற்று என்று எண்ணிப் பார்க்கலாம் அல்லவா? கம்பன் வாழ்ந்த பிரதேசம் கும்பகோணத்தைச் சுற்றியிருந்த பகுதிதானே. அங்கு நாச்சியார் கோவில், சிறப்பான தலம். பன்னிருவர் வரிசையில் வைக்கப்படாத ஆழ்வார்களில் கருடாழ்வாரும், பிரகலாத ஆழ்வாரும் இங்கு இடம் பெற்றுள்ளனர். கலைச்செல்வங்களோடுகூடிய ஏராளமான செப்புப் படிமங்களில் இங்கு சிறந்து விளங்குவது, யோக நரசிம்மமூர்த்தியும் ஒன்று. மூல ஸ்தானத்தில் பெருமாளுடன் பிரகலாதன் கருடனுக்குத் தனி இருக்கை. உற்சவ மூர்த்தியாகிய இக் கல் கருடன் மிகப் பிரபல்யமானவன். வாகான வடிவம், நீள் சிறகு, நீள்முடி, அகன்ற மார்பு, கம்பீரமான தோற்றமும் உடையவன். உற்சவ காலத்தில் அவனைக் கருவறையில் இருந்து வெளியே கொண்டுவர முதலில் நான்கு பேர்கள் தூக்கலாம். வாசல் வழியாகப் படிகளில் இறங்கும்போது கருடாழ்வானுக்குப் பலம் கூடுகிறது. அப்போது அவனைத் தாங்க எட்டுப் பேர் வேண்டும். மஹா மண்டபத்திற்கு வரும் போது எட்டு, பதினாறு ஆகி, ஸ்ரீபாதம் தூக்குவோர் எண்ணிக்கை 32 பேராக உயர்ந்துவிடும். இந்தக் கம்பீரமாக கல்கருடனை மனத்தில் கொண்டுதான் கம்பன், நாகபாசப் படலத்தில் பாடியிருக்க வேண்டும் என்பதைப் அப் பாடல்களைப் படித்தாலே நமக்குத் தெரியும்.

பெருமாளையும் பிரகலாதனையும் ஒன்று சேர சேவித்தவனுக்கு நரசிம்மாவதாரம்பற்றி என்ன இடம் இருக்கலாம் என்ற நினைவு நம் முள் எழலாம் அல்லவா? மேலும், ஆழ்வார்களை

முழுக்க முழுக்கப் படித்தவன். குருகூர்ச் சட கோபனைப்பற்றிப் பாடினாலும், திருமங்கை மன்னனிடமும் எல்லையில்லாத காதல் கொண்டவன் என்று சொல்லுவதற்குக்கூட இடம் உண்டு. பெரிய திருமொழியில் அஷ்டாக்ஷரத்தின் மகிமையைப்பற்றிப் பரகாலன் பாடுகின்றார் :

''நாடினேன் நாடிநான் கண்டுகொண்டேன்
நாராயணா எனும்நாமம்!
நலம்தருஞ் சொல்லை நான்கண்டு
கொண்டேன்
நாராயணா எனும்நாமம்!
நாவினா லுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா எனும்நாமம்.''

மேலும், திருவழுந்தூர்ப் பெருமாளைப்பற்றிப் பாடும்போது இரணிய வதமும் நரசிம்மாவதாரக் காட்சியும் நினைவுக்கு வருகின்றன; பாடுகிறார்:

''விண்டோன் விண்புக வெஞ்சமத்(து)
அரியாய்ப்
பரியோன் மார்பகம் பற்றிப் பிளந்து
பண்டான் உய்யவோர் மால்வரை யேந்தும்
பண்பாளா! பரனே! பவித்திரனே!''

தமிழனின் ஆதிகாப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அஷ்டாக்ஷரத்தின் பெருமையைப்பற்றிப் பாடுகிறார்:

''. . . . . . . பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?
நாராயணா என்னா நாவென்ன நாவே?''

''கோஅரனும் போர்மடியத்
தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே?
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே''

அடிகளின் வாக்கினில் ஓர் ஏக்கம். நாராயணன் நாமம் மக்கள் மத்தியில் வாயார, மனதாரப் புகழப்பட வேண்டும் என்பதுதான். இக் கருத்தையும் கம்பன் அக உணர்வோடு கவனித்திருக்க வேண்டும்.

மங்கை மன்னன் வாக்கையும் இளங்கோவடிகளின் எண்ணத்தையும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்கின்ற ஆர்வம் எழுகிறது, கவிஞன் உள்ளத்தில். ''ஆசைபற்றி அறையலுற்றேன்' என்று தொடக்கத்திலேயே சொன்னவன் அல்லவா? அதுபோலவே, இராவணனது சபையிலே இரணியன் கதையைச் சொல்லி மனநிறைவு பெறுகிறான்.

''நாராயணா எனும் நாமம்'' என்று மங்கை மன்னன் சொன்னதைப் பிரகலாதன் வாயிலாக,

"'ஓம்' நமோ நாராயணாய!"

என்று திருமாலின் பெருமையைப் பேச ஆரம்பிக்கிறான். இந்த அஷ்டாக்ஷரம் மிகமிகப் பிடித்தமான மந்திரச் சொல்லாகிவிடுகிறது, கவிச்சக்கரவர்த்திக்கு :

''நாராயணாய நம'என்னும் நல்நெஞ்சர்
பாராளும் பதம்பணிந் தேத்துமாறு
அறியேன்
கார்ஆரும் மேனிக் கருணாகர மூர்த்திக்கு
ஆராதனைஎன் அறியாமை ஒன்றுமே''

என்று மேலும் பாடி மகிழ்கிறான்.

உபநிடதக் கருத்துகளை உன்னிப்பாகப் பயின்றவன் கம்பன். ஈசாவாஸ்ய உபநிடதம் தொடங்குகிறது:

''ஓம்! ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்!
தேன த்யக்தேன புஞ்ஜீதா
மா க்ருத: கஸ்ய ஸ்வித்தனம்!''

(இதன் பொருள் :— உயிர்கள் அனைத்தும் ஈசுவரன் இருப்பு. ஆகையால், அவனுக்கு எல்லாம் அர்ப்பணித்துவிட்டுத் தியாகமயமான வாழ்க்கை நடத்து. பிற-பிறர் பொருள்களில் நாட்டம் கொள்ளாதே.)

இதை அப்படியே தமிழில் கவியாக்குகின்றான்:

''ஓம்எனும் ஓர்எழுத்து அதனின் உள்உயிர்
ஆம்அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்
தாம மூவுலகும் தழுவிச் சார்தலால்
தூமமும் கனலும்போல் தொடர்ந்த
தோற்றத்தான்''

ஆங்காரத்தின் உச்சியில், நரசிம்மம் தூணிலிருந்து தோன்றி, இரணிய வதம் நடைபெறுகிறது. நரசிம்மத்தின் சீற்றமும் கோபமும் அடங்கவில்லை. சிங்கப்பெருமானின் விஸ்வரூபத்தின் பேராற்றலைக் கண்டு வியப்பதுடன்

நடுங்கவும் செய்கிறார்கள். பிரம்மதேவன் தாள் பணிந்து வணக்கம் செலுத்திப் பேசுகின்றான்:

''உன்னுடைய, எங்கும் நிறைந்த பரிபூரண மான தத்துவத்திலிருந்து, பல்லாயிரக் கணக்கான அண்டங்கள் உற்பத்தியாகின் றன. அவற்றின் தன்மை, கடலில் எண் ணிறைந்தனவாகத் தோன்றி மறையும் நீர்க் குமிழிகள் போல. அளப்பரிய ஆற்றலைக் கொண்டவனாகிய நீ, இச்சிறு குழந்தைக்காக இந்த அவதாரம் எடுத்தாயே! அதனால் வரம்பில்லாத உனக்கு ஒரு வரம்பு ஏற் பட்டது ஒரு பெரிய குறையல்லவா?''

''பல்ஆயிரங் கோடி அண்டம்-பனிக்கடலுள்
நில்லாத மொக்குள்ளனத் தோன்றுமால்
நின்உழையே!
எல்லா உருவமுமாய் நின்றாய்க்கு,
இவ்வுருவம்
வல்லே படைத்தால், வரம்புண்மை
ஆகாதோ?''

பிரம்ம தேவனுக்குச் சத்தியலோகத்தில் தன் நிலை தெரியவில்லை. இப்பொழுதுதான் உணர ஆரம்பிக்கிறான்.

'இறைவனே! பேரண்டத்தில் நீதான் ஒரு வஸ்துவாய் நிறைந்திருக்கிறாய். அநாதி யாய் அல்லாமல் எங்கும் எக்காலத்தும் நிறைந்திருக்கிறாய். யார் எது செய்தாலும் அது உன் செயல்தான். உண்மை இப்படி யிருக்க, 'இது என் சிருஷ்டி' என்று குறித்துச் சொல்ல என்ன இருக்கிறது? நீ பொன் மயம். அதற்குள்ளே ஒரு பொற்கொல்லனை அந்தப் பொன்னே சிருஷ்டி செய்துகொண் டால், அந்தப் பொற்கொல்லனுக்கு ஏது பெருமை? அது போன்றுதான் என் படைப்பும்.'

''நின்னுளே என்னை நிருமித்தாய்,
நீயல்லா(து)
என்னுளே எப்பொருளை யாவரையே
யானீன்றேன்
பின்இலேன் முன்இலேன் எந்தை பெருமானே
பொன்னுளே தோன்றியதோர்
பொற்கொல்லன் போல்கின்றேன்''

இரணியன் வதைப்படலம் முழுதுமே அற்புத மான சொல்லாக்கம் நிறைந்த ரத்தினக்கவிகள். ஒன்றை மட்டும் சொல்லி இதை நிறைவாக்க லாம். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் பாரதத் தின் புண்ணிய புருஷன் என்று கருதப்படும் ஸ்ரீ வினோபா பாவே அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அமரர் கல்கியின் ஏ பாட்டில் அமரர் ரஸிகமணி டி.கே.சி. அவரைச் சந்தித்தார். அது சமயம் திரு. கம்பன் அடிப்பொடி போன்ற அறிஞர்கள் சூழ்ந்திருந்தார்கள். இந்தச் சந்திப்பு இரு சாதாரண மனிதர்கள் சந்திப்பது போன்ற தன்று. சத்தியமும் ரஸிகஜோதியும் ஒன்று சேர்ந்தது போன்றதொரு எண்ணம், அங்கு கூடியிருந்த எல்லோர் மனத்திலும் உதித்தது. ஆன்மிகமும் பக்தி இலக்கியமும் பற்றிய கருத்துப் பரிமாறல். கம்பராமாயணத்தைப் பற்றிப் பேச்சு எழுந்தபோது வினோபா பாவே கேட்டார்: ''கம்பனது பாடலில் மிகமிகச் சிறந்த பாடல் எது?'' கடினமான கேள்வி. கற்கண்டு மலையில் எந்தப் பக்கம் இனிக்கும் என்று கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும். வால்மீகி மகரிஷியின் காப்பியத்திலே எந்த ஸ்லோகம் சிறந்தது என்கின்ற கேள்விக்கு 'மாம்வித்தி ஸ்லோகம்' தான் சிறந்தது என் கின்ற விடை தெய்விகப் பறவைகள் மூலம் கிடைத்தது என்பதுபற்றிச் சுவையான கதை யொன்று உண்டு. ஆனால், அந்த மாதிரி கோடு காட்டும் நிகழ்ச்சி பாவேயின் கேள்விக்கு ஏதும் அமையவில்லை. காரணம், இது கலியுகம். இருப்பினும், ரஸிகமணி அவர்கள் கம்பன் கவி களின் சௌந்தர்யத்தை முற்றும் உணர்ந்தவர். 'சாணிலும் உளன்' என்ற பாடலை எடுத்து, ஒரு மணி நேரம் சரளமான ஆங்கிலத்தில், அழகாக விளக்கினார்கள். 'கடவுள் இல்லை' என்று சொன்ன இரணியனைப் பார்த்து, மகன் பிரக லாதன் பேசும் கட்டம் :

'இறைவன் சாணில் உளன்; அணுவின் நூற்றில் ஒரு பங்கான கோணில் உளன். மேருமலையில் உளன்; பக்கத்தில் உள்ள இத் தூணிலும் உளன். இல்லையென்று நீ சொன்ன சொல்லிலும் உளன். இப்படிச் சுட்டிக் காட்டிய பொருள்களில் எல்லாம் இறைவன் இருக்கின்றான்.'

இனிக் கம்பன் பாடலைப் பார்ப்போம்:

''சாணிலும் உளன்ஓர் தன்மை
அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன், மாமேருக்
குன்றினும் உளன்; இந்நின்ற

தூணினும் உளன்,நீ சொன்ன
சொல்லினும் உளன்;இத் தன்மை
காணுதி விரைவின் என்றான்!
நன்றெனக் கனகன் நக்கான்''

இந்தப் பாடலை டி.கே.சி. அவர்கள் தமக்கே உரித்தான காம்பீர்யத்திலே பாடி விளக்கம் கொடுத்ததைக் கேட்டு, வினோபா அவர்கள் உருகிப் போனார். சிறிது நேர மௌனத்திற்குப் பின் மகான் வினோபாஜி அவர்கள் சொன்னார்கள் :

''எல்லா இந்திய மொழிகளிலும் இரணிய வதத்தைப்பற்றிப் பல கவிஞர்கள் பாடினதைக் கேட்டுள்ளேன். ஆனால், இது போன்று 'நீ சொன்ன சொல்லிலும் உளன்' என்ற அதிநுட்பமானவிளக்கத்தைக் கம்பனைத் தவிர இதர பாஷைக் கவிஞன் எவனும் சொன்னது கிடையாது. கம்பன் கவிஞரிலே மகா கவிஞன்; தீர்க்கதரிசிகளிலே பெரிய தீர்க்கதரிசி!''

இக்கருத்தை ஆச்சார்யா அவர்கள் பல இடங்களில் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் கூடச் சொல்லிச் சொல்லிக் காட்டுவாராம். ஆகவே, இரணியன் வதைப்படலம் இலக்கிய வாதிகளுக்கு மட்டுமல்ல, தத்துவ ஞானிகட்கும் பக்தர்களுக்கும் ஓர் தங்கச் சுரங்கமாக அமைந்தது எனலாம்.

ஆயிரம் ஆயிரம் நாமரூப பேதங்கள் இருந்தாலும் பரம்பொருள் ஒன்றுதான் என்பதைக் கதைப்போக்கில் அடிக்கடி சுட்டிக் காட்டத் தவறவில்லை. அயோத்தி வள்ளல் யாரென்பதை இராவணனுக்கு அநுமன் வாயிலாக உணர்த்துகிறான்:

'எங்கும் எப்பொழுதும் நிறைந்தவன் இறைவன். அதனால் அவனுடைய உருவத்தில் முடியென்றும், நடு என்றும், அடி என்றும் கிடையாது. அவன் அனாதியாய் உள்ளவன். எந்தத் தத்துவம் கொண்டும் அளக்க முடியாதவன். சிந்தையாலும் தொடமுடியாதவன். வைகுண்டம், சத்தியலோகம், கைலயங்கிரி இவைகளை யெல்லாம் விட்டு, மும்மூர்த்திகளும் தம் சின்னங்களைத் துறந்து, ஒருமூர்த்தியாகக் கோதண்டம் தரித்து வந்தவன் இராமன்.'

''மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன், கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும்
கரகமுந் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்(டு) அயோத்தி
வந்தான்''

இக்கருத்தை நம்ப மறுத்த இராவணேஸ்வரன் இறுதி நாட்போரில் இராமன் யாரென உணர்ந்து சொல்கின்றான் :

'' 'சிவனோ' அல்லன், நான்முகன் அல்லன்;
திருமாலாம்
அவனோ? அல்லன், மெய்வரம் எல்லாம்
அடுகின்றான்
தவனோ என்னின் செய்துமுடிக்கும்
தரனல்லன்;
இவனோ தான்அவ் வேதமுதற் காரணன்
என்றான்''

கம்பன் காலத்திற்கு முன்னால் இராமனுக்குத் தனியாகக் கோயில்கள் இருந்தனவா என்று கேட்டால், தெளிவாகச் சொல்ல முடியாது. ஆனால், அவனது இராமாயணக் காவியப் படைப்பிற்குபின் பல இடங்களில் தமிழ்நாட்டில் சிறந்த கோயில்கள் உருவாகியுள்ளன. காரணம், இராமனை வெறும் காப்பியத் தலைவனாக மட்டும் மக்கள் கொள்ளவில்லை, பெருந் தெய்வம் என்றே கொண்டாடினார்கள். கம்ப ராமாயணப் பிரசங்கிகள் என்னும் கதை சொல்லுகிற பரம்பரையே உருவாயிற்று. இராமபக்தி இயக்கம் சமுதாயத்தில் நன்கு பரவலாயிற்று. இதன் காரணமாகவே, கும்பகோணத்தின் மையத்தில் 15-ஆம் நூற்றாண்டில் அற்புதமான இராமசுவாமி கோயில் உருவாகியது. அங்கு சீதாராமன் தம்பிமாரோடும் ஆஞ்சநேய மூர்த்தியோடும் பட்டாபிஷேக கோலத்தில் எழுந்தருளியுள்ளான். பக்திக் கோயிலாக மட்டுமல்லாமல் கலைக்கோயிலாகவும் காட்சியளிக்கிறது இது. இதோடு மட்டுமல்லாமல், பொன்னிவள நாட்டில் நீடாமங்கலம், முடிகொண்டான், தில்லைவிளாக்கம், அடம்பர், வடுவூர், தலைஞாயிறு ஆகிய இந்த

ஊர்களில் எல்லாம் இராமனுக்குத் தனிப் பெரும் ஆலயங்கள் உருவாகியுள்ளன. இதைக் கருதிதான்,

''காவேரிதீர ரஸிகாயா நம: ஓம்''

என்று அருச்சனை செய்து வாழ்த்துகிறார்கள். கங்கைக் கரையில் பிறந்து வளர்ந்தவனைக் காவிரிக் கரைகளில் எல்லாம் நிலைத்து நிற்கச் செய்ததோடு மட்டுமல்லாமல், இராமனை ஒரு பொதுவுடைமைத் தெய்வம் என்று ஆக்கி, வடக்கையும் தெற்கையும் இணைத்துப் பாரதத்தின் கலாச்சாரத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தச் செய்தவன் கம்பன் என்று கூடச் சொல்லலாம்.

இராமபிரானது வள்ளல் தன்மையைத் தமிழினத்திற்கு வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டியவன் கம்பநாடுடைய வள்ளல். சிரஞ்சீவி வரம்பெற்ற இருபெரும் வைணவ நம்பிகளாகிய ஆஞ்சநேயனின் தாஸ்ய பக்தியையும், விபீஷண ஆழ்வாரின் சரணாகதி பக்தியையும் விஸ்தாரம் செய்தவனும் அவனே.

பெருமாளின் பெருமையைத் தங்களது அருளிச் செயல்களால் உலகத்திற்கு உணர்த்தியவர்கள் ஆழ்வார்கள். அவர்களின் அப்பணியைத் தொடர்ந்து செய்து, இராமபக்தி இயக்கம் தழைத்தோங்கச் செய்தவன் கவிச் சக்கரவர்த்தி கம்பன் என்று துணிந்து சொல்லலாம். வால்மீகி மகரிஷி, ஆழ்வார்கள், அவர்கள் வழிவந்த குரு பரம்பரையினர் ஆகியோரின் பக்திநெறி கூட்டு மேதாவிலாசத்திற்குக் கம்பன் சரி நிகர் சமானமாக நிற்கின்றான் என்று சொன்னால் அது வெறும் புகழ்ச்சியில்லை, முற்றிலும் உண்மை.

இத்தகைய ஆன்மிக ஒருமைப்பாட்டை மக்கள் சமுதாயத்தில் பரவச்செய்த கம்பனுக்குத் தமிழர்களாகிய நாம் என்ன கைம்மாறு செய்கிறோம், எவ்விதத்தில் நன்றி செலுத்துகின்றோம்? எண்ணிப் பார்க்கலாம் அல்லவா?

ஆண்டுதோறும் நாட்டரசன் கோட்டையில் உள்ள அருட்கோயிலில், தன்னையும் தன் வாழ்க்கையையும் முழுக்க முழுக்கக் கம்பனுக்கே அர்ப்பணித்துக்கொண்ட உயர்திரு. கம்பன் அடிப்பொடி அவர்கள், கம்பனுக்கு விழா வெடுத்து வழிபாடு செய்கிறார்கள். காரைக்குடியில் நடப்பது அறிவாற்றல் விழா. நாட்டரசன் கோட்டையில் நடப்பது பக்தி விழா. இந்த அமைப்பு ஒரு தனிமனிதன் செயல் என்றாலும், அவ்வாறு மட்டும் எண்ணாமல், ஒரு மாபெரும் இயக்கம் என்று எண்ணி, வியக்க வேண்டும் என்று அங்குச் சென்றவர்களுக்குத் தெரியும்.

அருட்கோயில் தூய்மையான, புனிதமான ஓர் இடம். ஓங்கார ரூப புஷ்பாஞ்சலியில் நம்மையறியாமலேயே கண்மூடி நின்று கை கூப்பித் தொழுகிறோம். கம்பனில் தீரர்களாக இருந்தவர்கள் அருட்கோவிலுக்கு வந்தபின் கம்பனில் தீர்க்கதரிசிகள் ஆனார்கள்.

பூலோகத்தில் வந்து பிறந்த நம்மாழ்வாருக்கு ஒரு மகிழ்ச்சி. வாமனாவதாரத்தில் வாமநம்பியின் திருவடிகள் பட்ட மண்ணில் பிறந்துளேன் என்கின்ற பெருமிதத்தில்

''மண்ணைஇருந்து துழாவி,
வாமநன் மண்இது''

என்பார். அதுபோல, அருட்கோயிலுக்கு உள்ளன்போடு போவார்க்கு, ஞான அநுபூதிச் செம்மல் கம்பன் அருட்புனலில் கலந்துதிருநாடு அடைந்த மண்ணில் நாமும் இருக்கின்றோம் என்னும் எண்ணம் தோன்றத்தான் செய்யும். அந்த மண்ணுற்குப் போவதே, யாத்திரை. அந்த மண்ணில் இருப்பதே, தவம். அங்கு அடியார்களோடு சேர்ந்து வழிபாடு செய்வதே, சாதனை. ஆகவே, நாம் ஆண்டுதோறும் பங்குனி அத்தத் திருநாளில் நடக்கும் கம்பன் குருபூஜை விழாவில் கலந்துகொண்டு, எம் பெருமானையும் கம்பனையும் வந்தித்து வாழ்த்தி வழிபாடு செய்வதே நாம் அவனுக்குச் செய்யும் சிறந்த கைம்மாறாகும்.

கம்பன் வாழ்க!
கம்பன் புகழ் வாழ்க!
கன்னித் தமிழ் வாழ்க!

கம்பநாடனும் கொங்குநாடனும்

கம்பராமன்

தமிழகம் உய்யத் தோன்றிய பெரியோர் களில் தலைசிறந்தவர்கள் ஆழ்வார்கள். ஆழ் வார்களால் தமிழ்மொழி உயர்வற உயர்ந்தது. தமிழ் மொழியால் ஆழ்வார்களும் பெறற்கரும் பேறு பெற்றனர்.

தமிழ்மொழியிலும், ஆழ்வார்களாலும் எம் பெருமான் பரதத்துவம் ஆனான். அதனால் தான் பெருமாள் ''பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண் டல்'' ஆனான்.

ஆழ்வார்களில் முதலாழ்வார் மூவரும் பரத்துவத்திலே மண்டியிருப்பர். திருமழிசை யாழ்வார் அந்தர்யாமித்வத்தில் ஈடுபட்டிருப் பார். திருமங்கையாழ்வார் அர்ச்சையில் தம்மைக் கரைத்துக்கொண்டார். அவதாரத் தில் ஆழங்கால் பட்டவர்கள் பெரியாழ்வா ரும் குலசேகரப்பெருமாளும் ஆவார்கள்.

குலசேகரர் இராமபிரானிடத்து ஆராத பெருங்காதல் கொண்டவர். இவர் வரலாற் றில் இவர் இராமாயணங் கேட்டபோது பெற்ற மெய்ப்பாட்டை முன்னோர்கள் உள்ளங்கரைந்து வரைந்துள்ளனர்.

குலசேகரர் தம்மை, 'அங்கை ஆழி அரங்கன் அடியிணை தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்த னாய்-கொங்கர்கோன் குலசேகரன்' (சொன்ன சொல் - இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன் றில்லையே) என்று கூறிக்கொள்கிறார். ஆகை யால், கொங்குநாடன் என்பது இங்குக் குல சேகரரையே குறிக்கும்.

பெரியபுராணத்திற்கும், நம்பியாண்டார் நம்பிகள் வழங்கிய அந்தாதிக்கும் மூலம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகை. அதுபோல், கம்ப நாடன் சுவைக் கடலாகப் புனைந்த இராமாவ தாரத்துக்கு மூலம், கொங்கு நாடன் வழங்கிய இராமசரிதமே! ஆழ்வார் இராமாயணத் தொடர்பாக மூன்று பதிகங்கள் பாடியுள்ளார்:

(1) இராம சரிதம், (2) தாலாட்டு, (3) தசரதன் புலம்பல். இப்பதிகங்களை நன்கு மாந்திய கவிச்சக்கரவர்த்தி, உணர்வுப் பிழம் பாக மாறித் தன்னுடைய காவியத்தை மகோன்னதமான உலக நூலாக மாற்றி விட்டான்.

கவிச்சக்கரவர்த்தி அவை அடக்கத்தில், 'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்- பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?' என்கிறான். இதற்கு மூலம், பெருமாள் திரு மொழியில் காணலாம்.

குலசேகரர், 'மெய்யில் வாழ்க்கை' எனத் தொடங்கும் பதிகத்தில், 'நாயகன் நரகாந் தகன் பித்தனே' என்றும் 'மணவாளன்தன் பித்தனே' என்றும், 'எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே' என்றும், 'பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே' என்றும், ''தங்குசிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்' என்றும் திருவாய் மலர்ந்த சொற்கள் கம்பநாடனின் இதயத்தே தங்கியதால் - 'பித்தர் சொன்னவும்' என்ற தொடர் அவதாரம் ஆயிற்று.

ஆழ்வார், 'ஆதி ஆயன் அரங்கன் அம் தாமரைப் பேதை' என்று கூறிய தொடரி லிருந்து 'பேதையர் சொன்னவும்' என்னும் மணிவாசகம் உதித்தது.

கொங்குநாடன் 'கொன்னவிலும் வேல் வலவன் குடைக்குலசேகரன் சொன்ன—பன் னிய நூல் பத்தும் வல்லார் பாங்காய பத்தர் களே' என்னும் அடிகளிலிருந்து 'பத்தர் சொன் னவும்' என்னும் தொடர் பிறந்தது.

குலசேகரர் வழங்கிய 'இராம சரிதம்' சுவைமிக்கது, எளிமையானது, ஆழமானது, தெளிவானது, கம்பீரமானது, நயமான தொடர்களால் ஆக்கப்பட்டது.

இப்பதிகத்தை அனுசந்தித்த கவிச்சக்கர வர்த்தி, கம்பநாட்டாழ்வான் ஆனுன். ஆழ்வார் 'நெடுமதில்' என்ருர். அத்தொடருக்கு விளக்க மாகவே [(1) நால்வகைச் சதுரம், (2) மேவரும் உணர்வு, (3) பஞ்சிவான் மதியை, (4) கோவிடை உலகம், (5) சினத்தயில், (6) பூணினும்] ஆறு பாடல்கள் அமைத்துள்ளான். 'நெடுமை' என்னும் [சிறுவிதையை ஆலமர மாக்கியது கம்பநாடனின் கவித்துவப்புனலே.

ஆழ்வார், 'வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி' என்ருர் கவிச்சக்கர வர்த்தி, 'கருமுகிற் கொழுந்து எழில்காட்டும் சோதியைத் திருவுறப் பயந்தனன் திறங்கொள் கோசலை' என்று நயமுறப் பேசினுன். ஆழ்வார் 'விளக்கு' என்ருர். கவியரசன் (வேதம் உணர்ந்தபடியால்) 'சோதி' என்று மாற்றி நயத்தை வளர்த்தான்.

வான்மீகத்தில் இராமபிரான் வில் முரித்தது சீதைக்காக அன்று; முனிவர் கூறுகிருரே என்று வில் வளைத்தான். பிராட்டி தன் வரலாற்றை அநுசூயை இடம் கூறுகிற பகுதியைக் கீழே காணுங்கள் :

''பிறகு விஸ்வாமித்திரர் என் தகப்பனைப் பார்த்து, 'இதோ இருக்கும் ராமலட்சு மணர்கள் தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள். உம்மிடத்திலிருக்கும் சிரேஷ்டமான வில்லைப் பார்க்க வந்திருக்கிருர்கள். தேவதைகளால் உமக்குக் கொடுக்கப்பட்ட அந்தத் தனுஸை இராமனுக்குக் காட்ட வேண்டும்' என்று சொல்ல, அந்த வில் ராஜசபைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த மஹாவீரன் அதை ஒரு நிமிஷத்தில் எடுத்து வளைத்து நாணேற்றி இழுத்தார். அந்த வேகத்தால் அது நடுவில் ஒடிந்து, இடி விழுந்தாற்போல் சப்தம் உண் டாயிற்று. பிறகு, என் பிதா தாம் செய்த பிரதிக்ஞைப்படி கடத்தில் ஜலத்தை எடுத்து, ராமனுக்கு என்னைப் பார்யையாகக் கொடுக்கப் போனுர். அப்பொழுது ராமன் அயோத்தி யாதிபதியான தன் பிதாவிற்குத் தெரிவித்து, அவருடைய அநுமதி பெறும் வரையில் அதற்கு உடன்படவில்லை. உடனே ஜனகர் தசரதச் சக்ரவர்த்திக்கு ஸமாசாரம் தெரிவித்து, அவரை வருவித்து, மஹாக் ஞானியான ராம னுக்கு என்னை விவாகம் செய்து கொடுத்தார்'' (அயோத்தி - ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் மொழிபெயர்ப்பு).

இப்பகுதியில் இராமபிரானின் சிறந்த பண் பாடு வெளிப்படுகிறதே தவிர, 'செஞ்சொற் கவியின்பம்' போன்ற பிராட்டி பக்கல் காதல் கொண்டதாகத் தெரியவில்லை.

கவிச்சக்கரவர்த்தி கம்பனே, பெருமானின் காதலையும் பிராட்டியின் காதலையும் சங்க இலக்கிய நெறி நின்று அமுதப் பாகாக மாற்றி உள்ளான்.

''பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினுர்''

என்று தொடங்கிய காதல் பூத்துக் காய்த்துக் கனிந்து அமுதச் சுவையாகப் பெருகுகிறது. இங்குக் கம்பன் பாடிய காதல், பிரபந்த சாரம் என்ருல் மிகையாகாது. இங்ஙனம் கம்பநாடன் பாடக் காரணமாக இருந்தது,

'' செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் வில்லிறுத்து''

என்று குலசேகராழ்வார் பாடிய இராம சரிதப் பாடற்பகுதியே.

ஆழ்வார் 'செவ்வரி நெடுங்கண்' என்ருர். கம்பன்,

''வள்ளல் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற்கடல் போல்மிளிர்
கண்ணினுள்''

என்றும் அத்தொடருக்கு விளக்கம் கூறுகிருன். செவ்வரி நெடுங்கண் என்பதுதான் நேரான பொருள். கம்பன், 'செவ் அரி நெடுங்கண்' என்று பிரித்துத் 'திருமால் போன்ற கண்' என் ருன். ஈண்டுச் 'செவ்' என்றது செம்மை என் னும் பண்பைக் குறிப்பதாகக் கொள்க. சிந்தா மணியில் தேவர், 'கருமணியம் பாலகத்துப்

பதித்தன்ன படியவாய்' என்று பாசுரம்இட்டார். நச்சினார்க்கினியர் அங்கு 'மாயோனையும் பாற் கடலையும் முகத்தேவைத்தாற்போன்றதன்மைய வாய்' என்று விளக்கங் கூறினர். மேலும், (மணி என்றால், மாணிக்கம் என்று கூறக் கூடாதோ என்று ஐயங்கொள்வார் பொருட் டாக) 'கருமணியைப் பாலிற் பதித்தால் பால் நிறம் கெடும் என்று உணர்க' என்றார்.

கவிச்சக்கரவர்த்தி சீதையின் கண்களைப் பாற்கடல் என்றது மிகமிகப் பொருத்தமாய் அமைந்துவிட்டது. திருமால் பாற்கடலில் தங்குவான். அநுமன் பெருமாளை நோக்கிக் 'கண்ணினும் உனைநீ! தையல் கருத்தினும் உனை' என்பான். இராமன் இருக்கும் இடம், அயோத்தி. அதுபோல் திருமால் இருக்கும் இடம் பாற்கடல்தானே.

வான்மீகத்தில் குகனும் இராமபிரானும் சந் திப்பது முன்னமே பழகிய இரண்டு மன்னர் களின் சந்திப்புப் போல உள்ளது. படித்து முடிந்தபின் குகன் நம் உள்ளத்தில் தங்காமல் மறைந்துவிடுகின்றான். வான்மீகத்தைப் பார்ப்போம்:

''அந்த ப்ரதேசத்திற்கு அரசனான குகன் என்றவன் ராமனுக்குப் பிராண சிநேஹிதன். நிஷாத ஜாதியிற் பிறந்தவன். மஹாபலசாலி. ராமமூர்த்தி தன் தேசத்திற்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டு மந்திரிகளுடனும் பந்துக்களுட னும் வந்தான். அவன் வருவதைத் தூரத்திலே கண்டு ராமலட்சுமணர்கள் எழுந்திருந்து எதிர் கொண்டு உபசரித்தார்கள்.''

இங்கேயும் குகன் அன்பைக் கொட்டுகிறான். ஆனால், கவிச்சக்கரவர்த்தி இவர்களின் சந் திப்பைத் தவக்குடிலில் அமைத்து மகாகாவியத் திற்கு மணிமுடிசூட்டிவிடுகிறான். இராமன் நம் மனத்தை விட்டு நீங்கினாலும், 'அல்லை யாண்டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச வில்லை ஊன்றிய கையோடு இலக்குவன் இருந்த காட்சியைக் கண்ட குகன் கூறிய சொற்கள் நம் மனத்தில் எதனாலும் அழியாத உயிரோவிய மாய்ப் படிந்துவிடுகின்றன. குகனும் இராம னும் சந்திக்கும்போது கம்பன்தான் குகனை வருகிறான்.

குகனைக் குகப்பெருமாள் ஆக்கியது கவிச் சக்கரவர்த்தியே. கம்பன் நோக்கம் பட்டது; வேடன், பெருமாள் ஆனான். கம்பனைப் பயின்ற வைணவப் பெரியார்களே குகனுக்குப் பெரு மாள் பட்டம் வழங்கினர்.

இவ்வண்ணம் கவிச்சக்கரவர்த்தி திருவாய் மலர்ந்தருளக் காரணமாக இருந்தது, "துறைக் கங்கை தன்னைப் பத்தியுடைக் குகன் கடத்த, வனம்போய்ப் புக்கு" என்று குலசேகரர் வழங் கிய மாணிக்கத் தொடரே. இத்தொடர், கவிச்சக்கரவர்த்தியின் பேருணர்வு வெள்ளமாக மாறி நாம் உயர்வற 'உயர்நலம்' எய்தக்காரண மாய் உள்ளது.

வான்மீகத்தில் சூர்ப்பணகை அரக்கி யாகவே வருகிறாள். பார்ப்பவர்களுக்கு அவள் தோற்றம் வெறுப்பையும் அச்சத்தையும் தோற்றுவிக்கும். இத்தகையவளைக் கண்டால் (குற்றாலத் தலபுராணத்தில் மந்தமாருதச் சருக்கத்தில் வருகின்ற) ஆத்திரேயனுக்குக்கூடக் காதல் தோன்றாது. வான்மீகி பின்வருமாறு கூறுகிறார்:

''ராமன் ஸகல உத்தம லட்சணங்களும் பொருந்தின முகத்தை உடையவர். சூர்ப் பணகை பார்க்க விகாரமான முகத்தைஉடைய வள். ராமன் ஸிம்ஹத்தைப் போன்ற சிறுத்த இடையை உடையவர். சூர்ப்பணகை பேரியைப் போல் பருத்த வயிறுடையவள். ராமன் தாமரை இதழ்களைப் போல் விஸ்தாரமாய்ச் செவ்வரி பரந்த நேத்திரங்களை உடையவர். சூர்ப்பணகை பார்க்க பயங்கரமான நேத்ரங் களை உடையவள். ராமன் கறுத்து அடர்ந்து சுருண்ட மயிரை உடையவர். சூர்ப்பணகை நெருப்புக் கொழுந்தைப் போல் சிவந்து விரித்த குறுகிய தலைமயிரை உடையவள்.'' (நீட்ட வேண்டாம் போலும்)

இப்படிப்பட்ட பெண்மணியைக் கண்டால் யார்தாம் வெறுக்க மாட்டார்கள்? கவிச் சக்கரவர்த்தி கம்பன் சூர்ப்பணகையைச் சௌந்தர்ய ஓவியமாகத் தீட்டுகிறான். கம்பன் காட்டுகிற சூர்ப்பணகையைக் கண்டால் யார் தாம் மயங்கார். மாதவியின் மகளை,

''ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?
பேடியர் அன்றோ பெற்றியில் நின்றிடின்''

என்று மணிமேகலை வருணிக்கிறது. அஃது ஈண்டும் பொருந்தும். கம்பன் காட்டும் சூர்ப் பணகை பங்கயச் செல்வியை மனத்துப் பாவித் தாள். மந்திரத்தை ஆய்ந்தாள். உடனே அவளுடைய மேனி ஒளி விசும்பில் நிரம்பி உலகையே அழகுமயமாக ஆக்கிற்று.

''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம்
அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென
மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''

''தேனின்மொழி உற்றுஇனிய செவ்விநனி
பெற்றஓர்
மானின் விழி பெற்றுமயில் வந்ததென
வந்தாள்''

இது கம்பநாடகத்தில் நம்மை மயங்க வைக் கும் காட்சி. இராமபிரானும் ''ஆருமை அடங் கும் அழகிற்கு அவதி உண்டோ?'' என்று வியக்கிறான். இத்தகைய கோலம் கண்டும் நிலை குலையாத பெருமானின் உள்ளமே பேராண்மை படைத்தவுள்ளம். இங்ஙனம் கம்பநாடகம் அமையக் காரணமாய் இருந்தவர் குலசேகரரே.

'கலைவணக்கு நோக்கு அரக்கி மூக்கை நீக்கி' என்னும் குலசேகரரின் தொடர் சிருங்கார காவியமாக மாறி, மாயவித்தை காட்டுகிறது.

ஆழ்வார் 'கலைவணக்கும்நோக்கு அரக்கி' என் றார். (கலை-மான்) கவிச்சக்கரவர்த்தி 'மானின் விழிபெற்று மயில்வந்த தெனவந்தாள்' என் றான். 'கலைகளையெல்லாம் வசப்படுத்திய' எனப் பொருள் கொண்டு-தன் கோர வடி வத்தை ஒப்பனையால் மாற்றிக்கொண்டாள் என்றும் விளக்கலாம். கலை என்னும் சொல் வித்தையைக் குறிக்கும். வித்தைகளை வசப் படுத்தியவள். ஆகையால் ஸ்ரீவித்தையால் தன் வடிவத்தை மாற்றிக்கொண்டாள் என்றும் கூறலாம்.

இராமகாதையில் சடாயு உத்தமமான பாத் திரம். சடாயுவைப் போல் தலைசிறந்த தியாகி உலகிலும் இலக்கியங்களிலும் இல்லை. சடாயுவை இராமபிரான் தந்தைபோலப் பாவிப்பதாக வால்மீகி கூறுகிறார்.

''சீதையை இழந்ததால் உண்டான துக்க மும் இதற்கீடல்ல. நமது பிதா எப்படிப் பூஜிக் கத் தகுந்தவரோ மரியாதை செய்யத் தகுந்த வரோ இந்தப் பக்ஷிராஜனும் அப்படியே.''

இது வான்மீகத்திற் கண்டது. இப்பகுதியில் கம்பன் தன்னையே வென்றுவிடுகின்றான். 'தனம் மருவு வைதேகி பிரியல் உற்றுத் தளர்வு எய்திச் சடாயுவை வைகுந்தத் தேற்றி' என்று குலசேகரர் பாசுரம் இடுகிறார்.

குலசேகரரின் பாசுரத்தை முதலாகக் கொண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பன் இப் பகுதியைச் சோகரசம் ததும்பச் செய்துள்ளான்.

ஆழ்வார், 'வைகுந்தத் தேற்றி' என்றார். வைகுந்தம் என்னும் சொல், அழிவற்றது என் னும் பொருள்தரும். இதனைக் கவிச்சக்கர வர்த்தி

''சிதங்கொள் மலரு ளோனும்
தேவரும் என்ப தென்னே!
வேதங்கள் காண்கி லாமை
வெளிநின்றே மறையும் வீரன்,
பாதங்கள் கண்ணிற் பார்த்தான்.
படிவங்கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியும் நாளும்
போக்கிலா வுலகம் புக்கான்''

என்னும் பாசுரத்தால் பத்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடுகிறான்.

நம்பிள்ளை, திருவாய்மொழிக்கு உரை வழங்கும்போது சிறுசெஞ்சொல்லைப் பன்னிப் பன்னி விவரிப்பார் : ''இடிசேர்முரசங்கள் முற்றத்து இயம்ப இருந்தவர்'' என்று நம் மாழ்வார் பாசுரம் இட்டார். (திருவாய்மொழி 4.1.3). இதற்கு நம்பிள்ளை, 'நாட்டில் மரங் களை அடையத் தொளைத்துத் தோலைமேவி அதனை இடியைப்போல முழங்கச் செய்து அநாதரித்திருப்பான். இன்னான் வந்து காலில் விழுந்து கிடந்தான் அவன். இவனை அநா தரித்துக் கூத்துக் காண்பது பாட்டுக் கேட்பான் ஆனான் என்று உலகத்திலேயே பிரசித்தமாக வேணும் என்று ஆயிற்று இவன் இருப்பது. அங்கு நிற்கிற தூணைக்காட்டிலும் ஒருவாக் இல்லைகாணும் இவருடைய நினைவால் ஆதலின் இருந்தவர்'' என்றார்.

இங்ஙனம் பாடலுக்குத் தனக்கு முன்னோர் உரை கூறுவதைக் கவிச்சக்கரவர்த்தி கேட்டுள்ளான். அதனை வேறொரு பகுதியில் விளக்குகின்றான். பாலகாண்டத்தில் இராமபிரானின் திருமணம் காணவந்த காதலர்களில் இருவரைப் படம் பிடிக்கிறான். காதலி பேசிய மொழிக்குத் தலைவன் நினைந்து நினைந்து நுட்பப் பொருள் காண்கிறான். இதனைக் கவிச்சக்கரவர்த்தி,

''செய்யிற் கொள்ளும் தெள்ளமு
தச்செஞ் சிலையொன்று
கையிற் பெய்யும் காமனும்
நாணும் கவினர்தம்
மையர் பேதை மாதர்
மிழற்றும் மழலைச்சொல்
தெய்வப் பாடல் சொற்கலை
என்னத் தெரிவாரும்''

என்று நயமுறப் பாடுகிறான்.

குலசேகரரின் ஒரு சொல்லை வைத்துக் கம்பன் அற்புதமான ஒரு பாடலைப் படைக்கிறான். ஆலமரத்தை நோக்கும் ஒருவன், இவ்வளவு பெரிய மரம் எப்படி ஒரு சிறு விதையில் அடங்கி இருந்ததென்று வியப்பான். அந்த வியப்பை நமக்கு வழங்கவே ஒரு சொல்லை இமயமாக வளர்த்துக் காட்டுகிறான். பார்ப்போம்.

''இலங்கைநகர் அரக்கர் கோமான்
சினம்அடங்க மாருதியாற் சுடுவித்தானைத்
தில்லைநகர்ச் சித்ர கூடந்தன்னுள்
இனிதுஅமர்ந்த அம்மான் தன்னை
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே''

என்பது குலசேகரரின் பாசுரம். இதில் கவிச்சக்கரவர்த்தி ''**சினம் அடங்க**'' என்னும் சொல்லை ஆராய்கிறான். சினம் அடங்க வேண்டும் என்றால் அதற்கு முன் பலவும் அடங்க வேண்டும் என்று சிந்திக்கிறான். சினம் இருக்கும் இடம், மனம். அம்மனம் முன்பு அடங்க வேண்டும். மனம் அடங்க வேண்டும் என்றால் வினையம் (வஞ்சகம்) மாய வேண்டும். வினையம் மாய வேண்டும் என்றால் அதற்குமுன் செயல் அடங்க வேண்டும். செயல் அடங்க வேண்டும் என்றால் மயல் அடங்க வேண்டும். மயல்அடங்க வேண்டும் என்றால் ஆற்றல் தேய வேண்டும்.

இவற்றையெல்லாம் கவிச்சக்கரவர்த்தி சிந்தித்து, ஒப்பற்ற உலகப் பாடல் ஒன்றைச் சிருஷ்டித்து, வான்மீகி முதலான கவிகளின் இதயத்தில் பேருணர்வு வெள்ளம்படச் செய்கிறான். குலசேகரர் பாசுரத்தில் ஒரு சொல் கம்பனை உலக மகாகவியாக ஆக்கிற்று என்றால், ஆழ்வாரின் சிறப்பை விவரிக்கப் பரந்தாமனே வர வேண்டும். ஆழ்வார் இத்தொடரைச் சுந்தரகாண்டத்திற் பேசினர். கவிச்சக்கரவர்த்தி அதை யுத்த காண்டத்திற் பதித்தான். எதுவும் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் சிறப்புறும். 'சினம் அடங்க' என்ற ஒரு சிறு தொடர்

''வெம்மடங்கல் வெகுண்டனைய **சினம்
அடங்க**,
மனம்அடங்க, வினையம் வீய,
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயல்
அடங்க,
மயல்அடங்க, ஆற்றல் தேய,
தம்அடங்கு முனிவரையும் தலைஅடங்க,
நிலையடங்க, சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தனஅம்
முறை துறந்தான்
உயிர்துறந்த முகங்கள் அம்மா!''

என்று வளர்ந்து வளம் சுரந்து சிறந்தது.

'பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து' என்று தசரதன் புலம்புவதாகக் குலசேகரர் பகர்ந்தார். கவிச்சக்கரவர்த்தி 'நறுங்குஞ்சி' என்னும் தொடருக்கு நீண்ட விளக்கம் தருகிறான். தசரதன் எண்ணம் அனுமன் மூலமாக வெளிப்படுகிறது. பிராட்டியிடம் அனுமன் இராமபிரான் அழகை வருணிக்கும்போது,

''நீண்டு குழன்று நெய்த்திருண்டு
நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை
சுருண்டு புகையும் நறும்பூவும்
வேண்டும் அல்ல எனத்தெய்வ
வெறியே கமழும் **நறுங்குஞ்சி**
ஈண்டு சடையா யின என்றால்
மழைஎன் றுரைத்தல் இழிபன்றோ?''

என்று விளக்கம் தருகிறான் கம்பன். ஆழ்வார் தந்த முதல் உயர்ந்தவர்க்கு உதவிய உதவி

யொப்ப வளர்ந்ததை நினைந்தால் நமக்கு வியப்பின் மேல் வியப்பே வளர்கிறது.

''உன்குலம் உன்ன தாக்கி,
உயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலம் தன்ன தாக்கி
தன்னைத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்து,
வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள்;
என்இனிச் செய்வ தெம்மோய்?''

இப்பாடல் அனுமன் திருமொழியாக வருகிறது. 'எம்மோய்' என்னும் தொடரைத் தேவகியின் மொழியாகக் குலசேகரர் பாடுகிறார். கண்ணனைப் பெற்றும் வளர்க்கும் பாக்கியத்தை இழந்ததை நினைந்து வருந்தும் தேவகி

''வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன், ஒகொடு வினையேன்
என்னை என்செயப் பெற்றதெம்மோயே?''

என்று கூறிப் புலம்புகிறாள். தசரதனும் "உன்னையும் உன் அருமையையும் உன்மோயின் வருத்தமும் ஒன்றாகக் கொள்ளாது, என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக் கொண்டு வனம் புக்க எந்தாய்'' என்ற இடத்தில் இருக்கும் 'மோய்' என்னும் சொல்லைக் கம்பன் எடுத்து ஆள்கிறான்.

குலசேகரரின் ஒவ்வொரு சொல்லையும் கம்பநாடன் தன் மனத்தில் விக்ரகம்போலப் பதிய வைத்துள்ளான். இதனை நன்கு ஆராய்ந்தால் இன்னும் விளக்கமாகத் தெரியும்.

இராமபிரானைக் கைகேசி வளர்த்ததாகக் கவிச்சக்கரவர்த்தி பல இடங்களில் குறிப்பிடுகிறான். கைகேசியோ இன்னும் ஒருபடி உயர்ந்து இராமபிரானைத் தன்னுடைய மகனாகவும், பரதனைக் கோசலையின் மகனாகவும் குறிப்பாள்.

கைகேசி கூனியிடம் 'விராவரும்புவிக்கெலாம் வேதமே நிகர் - இராமனைப் பயந்தஎற்கு இடருண்டோ' என்று கூறுகிறாள். மக்கள் இராமபிரானை, ''தாய்கையில் வளர்ந்திலன்; வளர்த்தது தவத்தால் கேகயன்மடந்தை'' என்று கூறுகின்றனர். இக்காட்சி வான்மீகத்தில் பேசப்படவில்லை. இதற்கு மூலம் வழங்கியவர், குலசேகரரே. தசரதன் புலம்பும்போது, ''எம் இராமாவோ! உனைப் பயந்த கைகேசி தன் சொல் கேட்டு நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன். நன்மகனே உன்னை நானே'' என்று வருந்தி வருந்தி அழுகின்றான். இராமபிரானும் ''என்னை ஈன்ற எம்பிராட்டிதான் பிழைத்ததுண்டோ!'' என்று கைகேசியைத் தன்னைப் பெற்ற தாயாகவே கூறுகிறான். இங்குக் குலசேகரர் கூறிய கருத்தைக் கவிச்சக்கரவர்த்தி மறவாமல் தம் காவியக் கோவிலுக்கு மணி பதித்த கலசமாக மாற்றுகிறான்.

'அரியணையில் அமர்க' என்று சுக்கிரீவன் வேண்ட, இலக்குவன் மறுத்துப் பேசிய பேச்சு உணர்ச்சிமயமானது. அப்பாடலைக் காண்போம்:

''கல்லணை மனத்தினை உடைக்கை கேசியால்
எல்அணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய்பூத்
தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமோ''என்றான்.

இப்பாடலைப் படிக்கும் நம் உள்ளத்தில் 'மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப் போய் வியன்கான மரத்தின் நீழல்-கல்லணைமேல் கண்துயிலாக் கற்றனையோ காகுத்தா கரிய கோவே' என்று தசரதனாக மாறிக் குலசேகரர் கதறிய கதறல் நம் மனக்கண்ணில் தோன்றாமல் போகாது.

கொங்குநாடனும் குலசேகரப்பெருமாள் நம் கவிச்சக்கரவர்த்தியின் ஞானபிதாவாக இருப்பதை அறிஞர் உணர்வர். கம்பன், கவிச்சக்கரவர்த்தியாக வளர்ந்து கம்பநாட்டாழ்வாராக உயரக் காரணமாய் இருந்த ஆழ்வார்களுள் கொங்கு நாட்டாழ்வார் முன்னிடம் வகிக்கிறார். 'கொங்கனுல் கம்பநாடன் குன்றமாய் உயர்ந்தான் அம்மா!'

வில்லும் சொல்லும்

(டாக்டர் சரசுவதி இராமநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.)

'ஒருசொல், ஒருஇல், ஒருவில்' என்று வாழ்ந்து காட்டிய உத்தமன் இராமன். 'ஒக மாட ஒகபாண ஒகபத்னிவ்ருதுடே மனஸா' என்று இராமபக்தி வெள்ளத்தில் திளைத்த ஸ்ரீதியாகராஜரும் பாடினார். இராமன் எத்தனை இராமன் ஆனால் என்ன, 'கோதண்ட' ராமன் தானே 'ஜய' ராமன் ஆக முடிந்தது! அந்தக் கோதண்ட வில்லை, அதன் ஆற்றலைப் புகழா தார் யார்? காகுத்தனின் கைவண்ணத்தைக் கம்பனின் கவி வண்ணம் அழகுறக் காட்டுகிறது.

வேடனின் வில்லும் முனிவனின் சொல்லும்

வால்மீகி முனிவர், இராம காவியத்தைத் தொடங்குவதே வில்லும் சொல்லும் சேர்ந்த இடத்தில்தான்! வேடன் ஒருவன் வில் எடுத்தான். கணை தொடுத்தான். மோகமாயிருந்த இணை அன்றிலில் ஒன்றைத் தன் அம்பால் அடித்து வீழ்த்தினான். முனிவர் கண்டார்; கோபம் கொண்டார்.

''மாநிஷாத ப்ரதிஷ்டாந்த்வம் அகம்ஸ்
ஸாஸ்வதீஸ் ஸமா
ய: க்ரௌஞ்ச மிதுனாத் ஏகம்
அவதீ காம மோஹிதம்''

என்று வசை பாடிவிட்டார். வில்லின் கணை எப்படிக்குறி நோக்கிச் சென்று, விரைந்து, பறவையை வீழ்த்திற்றோ, அதுபோலச் சுடு சரமாகச் சாபச் சொல் விரைந்து வந்தது. 'முன் இணையாகிய அன்றிலில் மோகம் கொள் ஆணினைக் கொன்றனை. பன்னாள் நீ இனி வாழ்கலை வேடனே!' என்று முனி மொழிந்த சாபச் சொல் நாமகள் அருளால் நன்மொழியாக, மங்களா சாசனமாக மாறி, இராம காதை மலர்ந்தது என்று வரலாறு. வில்லுக்கும் சொல்லுக்கும் தொடர்புண்டு என்பதற்கே இந்தப் பீடிகை !

வில் உழவரும் சொல் உழவரும்

அறிவை உழுபவர் (புலன் உழுதுண்மார்), வயலை ஏர்கொண்டு உழுபவர், போர்க்களத்தே உழுபவர் என்று உழவர்கள் பலர்! அறிவுப் புலத்தை அருஞ்சொற்களால் உழுது, ஞானப் பயிர் விளைவிப்பவர், சொல்லேர் உழவர். கலப்பையால் வயலை உழுது பயிர் விளைவிப்பவர், மூலமான உழவர். வாள், வில், வேல் ஆகிய வற்றால் பகைவர்மார்பாம் களங்களை உழுது, வெற்றிப் பயிரை அறுவடை செய்யும் வீரர் வாள்உழவர், வில்வேர் உழவர், அயில் உழவர் எனப்பட்டனர்.

"வில்லேர் உழவர்பகை கொள்ளினும்
கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை."

''வில்லம்பு பட்டபுண் வேதனை தராது
—என்றும்
சொல்லம்பு சுட்ட துன்பம் மாறாது.''

'தீயினால் சுட்ட புண்கூட ஆறிவிடலாம். நாவினால் சுட்ட வடு ஆறுவது ஏது?' என்னும் வார்த்தைகள் வில்லின் ஆற்றலைவிடச் சொல்லுக்கு மகத்துவம் அதிகம் என்று காட்டுகின்றன. கம்பனோ, வில்லையும் சொல்லையும் இணைத்துக் காட்டும் அற்புதச் சித்தன்.

சொல் ஒக்கும் சுடுசரம்

அறம் தலை நிறுத்த வந்த ஆதிபிரான் அறை கழல் இராமன் ஆகி மந்திரம்கொள் மறைமுனிவன் வேள்வி காக்க நடக்கிறான். அல்லொக்கும் நிறத்தினளான தாடகை மார்பில் அண்ணலின் கணை பாய்கிறது. அவ்வரக்கி மார்பைத் துளைத்து, அப்புறத்தே கழன்று விழுந்தது என்பதைக் கவிஞன் காட்டும் அழகே அழகு!

''சொல்ஒக்கும் கடியவேகச்
சுடுசரம் கரிய செம்மல்!
அல்ஒக்கும் நிறத்தி னுள்மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்கா
தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே!''

கணையும் சொல்லும் ஒப்புமையுடையன. சொல்லும் தைக்கும். சரமும் தைக்கும். தாடகை மார்பில் பட்ட அம்பு தங்காது புறத்தே போயிற்று. எது போல? கல்லாத புல்லர்க்கு நல்லோர் சொல்லும் பொருள் போல! கற்றவன் அற்பனுயிருந்தால், அடுத்தவன் என்ன பிழை சொல்கிறுன் என்று கண்டு பிடிக்கவாவது போய்க் கேட்பான். கல்லாதவன் நல்லவன் என்றுல் 'நமக்குத் தான் கற்றறிவு இல்லை. அடுத்தவர் வாய்ச் சொல்லையாவது கேட்போம் என்று கேட்பான். 'கல்லாத புல்லன்' கேட்கவும் மாட்டான். கேட்டாலும் அவன் நெஞ்சில் அது தங்காது; என்று கூறுகிறுர் கம்பர்.

வில் விழுந்ததும், சொல் எழுந்தது

பாரதப் போர் தொடங்கியதும், வீர அருச்சுனன் மாயையால் மதிமயங்கி பாசத்தால் நிலை கலங்கி, எதிரேயிருந்த உற்றூர் உறவினரைக் கொல்வதா என்று தயங்கிய போது அவன் கையிலிருந்த காண்டீப வில் நழுவியது. அப்போது கண்ணனின் சொல்லான கீதை எழுந்தது. அதுபோல், போர்க்களத்தில் தசமுகனின் வில் விழுந்ததும் இராமனின் கருணைச் சொல் பிறந்தது. முதல்நாள் போரில் ஆயுதம் அனைத்தையும் இழந்து ஆலம் விழுது போல் இருபது கைகளும் தொங்கிட, அவமானத்தால் தரை நோக்கி நின்ற இராவணனைப் பார்த்துக் காகுத்தனின் சொற்கள் பண்பாட்டுடன் கருணை மொழியாக மலர்கின்றன.

''ஆள்ஐயா! உனக்கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை''

ஆதலால்,—

''இன்றுபோய் போர்க்கு நாளை வா''

என உயிர்ப்பிச்சை நல்குகிறுன், கார்முகில் வண்ணன். வில் விழுந்ததும் சொல் எழுந்த அற்புதத்தைவிட இந்த வில்லாற்றலைச் சொல்லாற்றலுடன் தசமுகன் ஒப்பிடும் அற்புதம் பெருஞ் சிறப்புடையது.

அம்பு செய்த அற்புதம்

வயக்களிற்றின் கோடு உழுத மார்பும், கொலையுழுத வடிவேலின் கொற்றம் அஞ்சித் தாள் கொழுத பகை வேந்தர் முடி உழுத தழும்பிருந்த சரணமும் உடைய இலங்கை வேந்தன், தோற்றிலா விறலோன், முதல் போரிலேயே இராமனிடம் தோற்று வருகிறுன். பாட்டன் மாலியவான், 'என்ன நேர்ந்தது?' என்று கேட்கிறுன். அருஞ்சுவைத்தான வெல்லப்பாகு என்ன, அமுதமே நாவில் பட்டாலும் சுவை தெரியாத அளவுக்கு நாவறண்டு கிடக்கிற தசகண்டன் பதில் பேசுகிறுன்.

''நவையறு பாகை யன்றி
அமுதினை நக்கினுலும்
சுவைறப் புலர்ந்த வாயான்
இனையனசொல்லலுற்றுன்''

பதினேழு பாடல்களில் இராமனின் போர்த் திறத்தைப் பாராட்டுகிறுன். இலக்குவனின் வில்லாற்றலையும் புகழ்கிறுன்.

''அரக்கர் குழுவை அழித்து அழித்து இராமன் பகழி என் இருபது தோளிலும் அவமானத்தைப் பொறித்து விட்டது. அந்தப் பகழிகளை அவன் மிக்க பிரயாசையுடன் ஏவவில்லை. கூனி முதுகில் விளையாட்டாக மண்ணுருண்டை போட்டது போலவே, சினமின்றி எளிதாக ஏவுகிறுன். அந்தப் பாணத்தின் வெப்பம் அது குறித்துப் பேசும் என் நாவையும் என்னும் மனத்தையும் கூடத் தீய்த்து விடும்'' (அதனுல்தான் நாவறண்டு நிற்கிறுன் போலும்!)

''இராம பாணத்தை ஒரு கவியின் பல் அலங்காரப் பண்பிற்கு ஒப்பிடலாம். கவிஞனுக்கு நல்ல உள்ளம் வேண்டும். அவனது நல்ல சொற்கள் குறித்த பொருளைக் குறித்த வண்ணம் தருவனவாகவும் புகழ் விளங்க நிற்பனவாகவும், ஓசையும், தொடர்ச்சியும் உடையனவாகவும், எல்லையற்ற புகழ் தருவனவாகவும் இருக்கும். அதுபோல, இராகவன் பகழியும் குறித்த இலக்கில் சென்று குறித்தபொருளை எய்கிறது. வில்லிலிருந்து ஓசையும் தொடர்ச்சியும் கொண்டு வருகின்றது. நெடுங்காலம்

புகழ் விளங்க நிற்கிறது. மாற்றுனை கவிஞனை யும் இரசிக்க வைக்கும் நல்லியற் கவிஞனின் சொல்போல, மற்றுனை என்னையும் இரசிக்க வும், பிரமிக்கவும் வைப்பது இராமனின் வில் எழுப்பும் கணே! கவிஞனின் கருத்தை நிறை வேற்றித் தருவதில் சொல் வெற்றி பெறுவது போல, காகுத்தன் கருத்தை நிறை வேற்று வதில் வில் வெற்றி பெறுகிறது'' என்றெல்லாம் விவரிக்கிறான்.

''நல்லியற் கவிஞர் நாவில்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்எனச் செய்யுள் கொண்ட
தொடைஎனத் தொடையை நீக்கி
எல்லையில் செல்வம் தீரா
இசைஎனப் பழுதி லாத
பல்அலங் காரப் பண்பே
காகுத்தன் பகழி!''

என்று வீரனை வீரன் போற்றும் அருமை இது!

தேவியின் சொல்லும்
தேவனின் வில்லும்

சீதாப் பிராட்டி சிறையிருந்த ஏற்றத்தால் தான் சீராமனின் வீரம் புகழப் பெற்றது. தேவி சொற் காத்து நின்ற திறத்தால்தான் தேவனின் வில்லாற்றல் வெளிப்பட முடிந்தது. தவம் செய்த தவமாம் தையலாக எம்பெரு மாட்டியிருந்த பெருமையால்தான் கோதண்ட ராமன் 'ஜய' ராமனாக முடிந்தது.

சானகி யன்றி வேறு எந்தப் பெண் அங்கி ருந்தாலும் இப்படிப் பொறுமைத் தவம் செய் திருக்க முடியுமா? அப்பிராட்டிக்கு உலகையே தன் கற்பால் சுட்டெரிக்கும் சக்தி உள்ளது. ஏன், சுடும் நெருப்பையே குளிரச் செய்யுமாற்ற லும்கூட உண்டு!, இருப்பினும், அது செய் யாது பொறுத்திருந்தாளே! அதுதான் பெருமை! அவனது விற்பெருமை காக்க இவள் சொற்காத்து நின்றாளே!

ஆஞ்சனேயர், எம்பெருமாட்டியின் துயர் கண்டு, ''ஆறு துயர்; அஞ் சொல் இள வஞ்சி! அடியேன் தோள் ஏறு கடிது'' என்று அடி பணிகிறார். அவன் தோளில் ஏறிவர இயலா மையை அன்போடு பக்குவமாக எடுத்துரைத்த தேவி, 'அனுமனே! இந்த ஓர் உலகை மட்டு மென்ன, எல்லை நீத்த உலகங்களையும் ஒரு சொல்லால் சுடும் ஆற்றல் (கற்பு) எனக்குண்டு. ஆயினும் நான் அது செய்ய மாட்டேன். என் சொல் வெற்றி பெற்றால் காகுத்தனின் வில் மாசு படுமே. ஆதலால், அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன்' என்கிறாள்:

''அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ ?
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னால்சுடு வேன்அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்''

அப்படி, வீரவெஞ்சிலை மாசுணக்கூடாது என்று தான் ''சொற்காத்துச் சோர்விலாளாக எம்பெருமாட்டி இருஞ்சிறையில் இருந்திருக் கிறாள். 'வில்' பேசிக் கொள்ளும் என்று 'சொல்' காத்த அழகல்லவோ எம்பெருமட்டி யின் சிறப்பு!

''உலக்கை குத்த உடம்பில் வலு இருந்தா லும் ராஜமகிஷி செய்வாளோ?'' என்றார்கள். ஆம், அப்படி அவள் செய்தால் இராஜாவுக் கல்லவோ இழுக்கு! இந்த இடத்தில் நம் பிள்ளை, 'அவன் வம்சத்துக் கொத்தை' என்றார். அவனது இக்ஷ்வாகு குலப்பெருமைக்கு (வம்சத் துக்கு) இவள் அடிமை என்றும், அவனது வம்சத்திற்கு (மூங்கில் வில்லுக்கு) அடிமை என்றும் இருபொருள்தரும் அழகே அழகு!

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்னும் பேரிலக்கணத்திற்கு ஒப்பற்ற இலக் கியமன்றோ பிராட்டி!

வறியவர் உண்டோ?

பி. சி. சீதாபதி — 'குறளடிமை' — சேலம்-5.

கோசல நாட்டின் வளமும், அதன் தலைநக ரான அயோத்தியின் செழுமையும் எல்லை அற்றது.

நாட்டு வளத்தைப் பாட. வந்த கம்ப நாட் டாழ்வார்,

''வரம்புஎலாம் முத்தம்; தத்தும்
  படைஎலாம் பணிலம்; மாநீர்க்
குரம்புஎலாம் செம்பொன்; மேதிக்
  குழிஎலாம் கழுநீர்க் கொள்ளை;
பரம்புஎலாம் பவளம்; சாலிப்
  பரப்புஎலாம் அன்னம்; பாங்கர்க்
கரம்புஎலாம் செந்தேன்; சந்தக்
  காஎலாம் களிவண்டு ஈட்டம்''

எனப் பாடி, முத்தும் சங்கும் செம் பொன்னும் பவளமும், செந்தேனும் மண்டிய சூழலுக்கு நம்மை இழுத்துச் சென்று செல்வச் செழிப்பில் மூழ்கடிப்பார்!

நகரத்தின் வளம் பாடும் பொழுது,

''கள்வார் இலாமைப் பொருள்
  காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்
  பார்களும் இல்லை மாதோ.''

''எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமும்
  எய்த லாலே
இல்லாரும் இல்லை; உடை யார்களும் இல்லை
  மாதோ!''

என்றெல்லாம் பாடிச் செல்வச் செழிப்பினை வியந்து வியந்து நிற்பார் மாதோ!

''வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்''

என்று பாடும் அளவிற்குப் பெருமை வாய்ந்த, செல்வச் செழுமை சிறந்து விளங்கிய அந்த நாட்டின் மன்னர் மன்னனே வறியவரை அழைக்கின்றான்!

நாட்டில், மங்கையரின் மாண்பை,

''பெருந்தடங்கண் பிறைநுத லார்க்குஎலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?''

எனப் பாடுவார் கவிச்சக்கரவர்த்தி.

'வறுமை இல்லாமையால் வள்ளன்மை இல்லை' என்று பாடப் பெற்ற நாட்டில், வருந்தி வந்து ஈகைபெறுதர்க்கு எவரும் இரார் எனவே, வருந்தி வந்தவர் அயல் நாட்டவரே' என்பர் விளக்கம் தந்திடும் வித்தகர்கள்!

அப்படியானால் அந்த நாட்டின் சக்கரவர்த்தி வறியவரை அழைப்பிப்பது அயல்நாட்டி லிருந்தா'? இருக்கமுடியாது! ஏனென்றால்,அவன் தன் நாட்டில் பறையறைவித்து அல்லவா வறிய வரை அழைக்கின்றான்!

தன் மனைவிமார் மூவரும் நான்கு மக்களை ஈன்றனர் என்ற செய்தியை அறிந்தான் அம் மன்னர் மன்னன், தயரதன்; அறிந்த அம் மாத்திரத்தே,

''இறைதவிர்ந் திடுகபார் யாண்டுஏழ்
  ஏழ்நிதி
நிறைதரு சாலைதாள் நீக்கி, யாவையும்
முறைசெட, வறியவர் முகந்து கொள்கஎன
அறைபறை என்றனன்-அரசன் கோமகன்''

இது என்ன? முன்னுக்குப் பின் முரணைப் பாடுகின்றாரா, கவிச்சக்கரவர்த்தி! இல்லை!

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

என்றார் செந்நாப்போதார்.

தயரதன், மன்னன்தான் மாமன்னன்தான் மூன்று பட்டத்து அரசியரைக் கொண்ட மனை மாட்சி மங்கலம் பெற்றவன்தான்; ஆனால்,

நன்க்லம் ஆகிய மக்கட்பேறு இன்றி மனம் வருந்தி இருந்தான். ஆகவே,

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை
அறிவறிந்த
மக்கட்பேறு; அல்ல பிற''

என்பதற்கு இணங்க எல்லா வளங்களும் எல்லை யின்றிக் கொழித்திருந்தும் தயரதனைப் பொறுத்தவரையில் மக்கட்செல்வ நோக்கில் வறியவனுகவே இருந்து வந்தான்; இப்பொழுது ஈரிரு குழவியரை அடைந்து வறுமை நீங்கி ஞன்! அவ்வாறு வறுமை நீங்கிய பெருமகிழ்ச்சி யில் மூழ்கினுன்! மேற்கண்டவாறு அன்பின் ஆணையிட்டான்!

தான் மனத்தகத்தே வறியனுய் இருந்து மாறினமையால் நாட்டின் வளமையையும் மறந்து மகிழ்ச்சிப் பெருக்கில், வறியவர் இருப்ப தாகத் தவருன ஒரு மயக்கம் கொண்டுவிட் டான்!

''எழுபிறப்பும் தீயவை தீண்டா
பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்''

அல்லவா! ஆக, பிறப்பிற்கு ஓராண்டாய்க் கணக்கிட்டு 'ஓர் ஏழாண்டு வரி செலுத்த வேண் டாம்' என்று கூறினுன் போலும்!

பறையறை செய்தி கேட்டு வறியவராய் எவரேனும் வந்தனரோ? இல்லையே! மாருக மக்கள் எல்லோரும் பேருவகை பூத்துத் தம் முடைய நீள் நிதியை அல்லவா தூர்த்தனர்!

எனவே, இந்நோக்கில் பார்த்தால், கோசல நாட்டில் வறியவர் இல்லையென்ற கவிச்சக்கர வர்த்தியின் கற்பனையே உண்மை; தயரதனின் மயக்கக் கற்பனையில் வறியவர் தோன்றியது தவறு என்றே தெளிகின்ருேம்!

இனி, பண்பின் சிறந்தோர்-தூயோர்-நாவில் வரும் சொற்கள் - அவை அவச்சொற்களாக இருப்பினும் - அநேகமாக உண்மையாகி, அவற்றிற்கேற்ப செயல்கள் நிகழ்ந்துவிடுகின் றன என்ற அனுபவ பூர்வமான உண்மை நம் மனத்தே உறுத்தத் தொடங்குகின்றது!

இதுவரை நாட்டில் இல்லாத வறியவள் ஒருத்தி தோன்றினுள், தயரதன் வாய்ச் சொல்லை உண்மையாக்குவது போலே! அவள் செல்வச் செழிப்பினை உன்னத நிலையில் அனு பவித்துக்கொண்டிருப்பவள்தான்! ஆனுலும் நெஞ்சத்தளவில் அவளும் வறியவள் ஆகி விட்டாள்! வறியவள் ஆக்கப்பட்டுவிட்டாள்!

மந்தரை என்னும் கூனி மாண்புமிகும் கைகேயிக்கு எவ்வளவோ சொல் விடம் ஏற்றி ஞள்; இராமன் பட்டத்திற்கு வந்துவிட்டால் கைகேயியின் செழுமை, வளமை எல்லாம் குன்றும், அதிகாரம் போம் என்று என் னென்னவோ கூறினுள். கைகேயி மனம் மாற வில்லை.

மாருக, இராமன், பட்டம் சூட்டிக்கொள் வதை எண்ணிப் பூரிப்படைந்திருந்தாள். கூனி விட்டாளா?

''தூண்டும் இன்னலும் வறுமையும்
தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துஉனை இரந்தவர்க்கு, இருநிதி,
அவனை
வேண்டி ஈதியோ? வெள்குதியோ? விம்மல்
நோவால்
மாண்டு போதியோ? மறுத்தியோ?
எங்ஙனம் வாழ்தி''

''சிந்தை என்செயத் திகைத்தனை? இனி, சில
நாளில்
தம்தம் இன்மையும், எளிமையும்,
நிற்கொண்டு தவிர்க்க,
உந்தை, உன்ஐ, உன்கிளைஞர், மற்றுஉன்
குலத்துஉள்ளோர்
வந்து காண்பதுஉன் மாற்றவள் செல்வமோ?
மதியாய்''

இவ்வாறு, 'ஏழையர் வந்து இறைஞ்சும் போழ்து, யாருடைய அனுமதியின் பேரில் தானம் செய்வாயோ? உன்னைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பொருளாதாரத் தொல்லையைப் போக்கிக்கொள்ள உன்னை அண்டி ஏது பயன்?' என்றெல்லாம் கேட்டவுடனேயே கைகேயி கருத்து அழிந்தாள்! தான் ஒரு வறியவளாய் நிற்பதாக மயங்கினுள்! இராமன் அரசு ஏற்று, தான் ஏழ்மையில் முழுமையாய் வீழ்ந்து விட்டது போன்ற கற்பனையில் வறியவளாய் ஆகிவிட்டாள்! அதனுல்தான்

''இந்த நெடுஞ்சொல்அவ் ஏழை கூறுமுன்''

எனக் கம்பர் பாடுகின்ருர், கைகேயியைக் குறிப்பிட்டு!

அவ்வாறு வறியவளாகிவிட்டவள், தயரதன் அன்று—குழந்தை பிறந்த அன்று—பறையறை வித்தவண்ணம் 'நிதி நிறை தரு சாலை தாள் நீக்கி' வேண்டியதை எடுத்துக்கொண்டாளா? தயரதனின் வார்த்தைக்கு வார்த்தை மெய்ப் பிப்பது போலல்லவா நடந்துவிட்டது!

அவள், தாள் திறவாமலேயே யாவையும் கைப்பற்றிக்கொள்ள முடிவுகொண்டுவிட்டாள்! தன் மகன் பரதனுக்கு முடி சூட்டிவிட்டு இராமனைக் காட்டிற்கு அனுப்பும் வாயிலாக அதனைச் சாதித்துக்கொள்ளவும் உறுதி கொண்டுவிட்டாள்!

'இது முறையா?' என்றால், இல்லைதான்! பேரன்புளத்து கோசலை வாயாலேயே, 'முறைமை என்று ஒன்று உண்டு (அது மாறு கின்றது!) என வந்துவிட்டதே!

ஆனால் தயரதன் சொல்லும் பொழுதோ 'முறைகெட' என்றிட்டானே! அதனால் அந்தக் கற்பனை வறியவளாகிய கைகேயியும் 'பதி சொல் தாண்டாப் பத்தினியாய்' முறை கெடவே அனுபவிக்கத் துணிந்துவிட்டாள்!

ஆக, இப்பொழுது புரிந்துகொள்கின்றோம், கோசல நாட்டில் சூழ்நிலை காரணமான வறிய வரும் இருந்தனர் என்று! மேலும், 'தவறியும் பெரியவர்கள் வாயால் வேண்டாத சொற்கள் தோன்றக் கூடாது' என்றும் உணர்கின்றோம்!

கம்பன் தொடாத இடங்கள்!

அருட்பா S.R. தங்கவேலு

கம்பராமாயணம், மனித வாழ்க்கையின் பல்வேறு அரங்குகளில் காணப்படும் பல்வேறு உணர்ச்சிகளைப் பல்வேறு கோணங்களில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தான் வாழ்ந்த காலத்து மக்களது நாகரிகம், பண்பாடு, நடைஉடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பின்னணியாகக் கொண்டு கம்பன் கதைப்போக்கைப் பின்னுகின்றான். ஒரு கவிஞன் தான் இருக்கும் சூழலிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. அவன் சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் குழந்தையேயாவான் (Creature of circumstances) எனவே, இராம காதையினின்றும் அன்றைய மக்களது வாழ்க்கை முறைகளையும் தத்துவக் கோட்பாடுகளையும் நம்மால் நன்கு உணர முடிகின்றது.

இறந்த காலத்தின் தொடர்ச்சி நிகழ் காலமாகவும், நிகழ்காலத்தின் தொடர்ச்சி எதிர்காலமாகவும் இருப்பதால் மனித வாழ்க்கையில் எந்த முனையிலும் புரட்சிகரமான சமூக மாற்றங்களைக் காணவியலாது; மூலக்கோட்பாடுகள், பழக்கவழக்கங்களில் எத்தகு பெரும் வேறுபாடுகளைக் காணல் அரிது. பழையன கழிதலும், புதியன புகுதலும் கால நியதியெனினும் அடிப்பீடம் அசைவதில்லை. இலையுதிர் காலத்து இலைகள் வீழ்ந்து வசந்தத்தில் மீண்டும் மரம் பச்சை இலைகளோடு பூத்துக் குலுங்குவது போல, சமுதாயத்தின் அடித்தளம் ஒன்றே. ஆனால், அப்போதைக்கப்போது மக்களது நடையுடை பாவனைகளில், பழக்கவழக்கங்களில் சில மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. இந்தக் கண்ணோட்டத்தோடு காணும் நமக்குக் கம்பன் காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் எத்துணையோ வேறுபாடுகள் தோன்றுகின்றன. அரசியல் சமூகப் பொருளாதாரத் துறைகளிலே என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன வென்பதையும், இவைகளைக் குறித்துக் கம்பன் அன்று தீர்க்கதரிசனத்தோடும் தொலைநோக்கு உணர்வோடும் ஏதாவது சொன்னானா என்பதையும் ஆராய வேண்டும். உண்மையாகவே இன்று நம்முள் ஊடும் பாவுமாகப் பின்னிப் பிணைந்துள்ள பல சமுதாயப் பழக்கவழக்கங்களையும் வாழ்க்கை வழிமுறைகளையும் அன்று கம்பன் சூசகமாகக்கூடச் சொல்லவில்லை. நிச்சயமாக அன்று ஏதோ ஒரு பாங்கிலே இவை மக்கள் மத்தியிலே இருந்திருத்தல் வேண்டும். இவை திடும்பிரவேசமாகச் சமுதாயத்தில் குதித்திருக்க முடியாது.

கம்பன் ஏன் இவைகளைப்பற்றி ஏதும் சொல்லவில்லை? அவை உப்புச்சப்பற்ற, அர்த்தமற்ற மூடச் சம்பிரதாயங்களென்று விட்டுவிட்டானா? அல்லது இவை சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந்தடங்கல்கள் இவைகளைச் சொல்லி ஏன் வருங்காலத் தலைமுறைகளை குருட்டுச் சந்துகளில் (Cul-de-Sac) நுழைக்க வேண்டும் என்று தூக்கி எறிந்து விட்டானா?

அரசியலைப் பொறுத்தமட்டில் கம்பன் காணும் அரசியல் கோட்பாடு கொள்கையளவிலாவது இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. முடியாட்சி, ஜனநாயகம், சர்வாதிகாரம், பிரபுத்துவ ஆட்சி-எல்லாமே மக்களையே மையமாக வைத்து ஆட்சி செய்வதாகத் தம்பட்டம் அடிக்கின்றன. எந்த அரசாட்சி முறையானாலும், சர்வ வல்லமை பொருந்திய சர்வாதிகாரி ஒருவன் திரைக்குப் பின்னாலிருந்துகொண்டு, எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்கின்றான் என்பதை யாவரும் அறிவர். மக்களுக்காக மக்களது ஏகோபித்த எண்ணத்தின்மீது அரசு புரியும் மக்கள் ஆட்சி இன்று உலகில் எங்குமே இல்லையென்று சொல்லிவிடலாம். இப்பாங்கிலேயே சோஷியலிஸம், கம்யூனிஸம் போன்ற அரசியல் முறைகளும் தத்துவங்களும் இருக்கின்றன. இந்த சோஷியலிஸம் என்னும் பதம் இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள் அதிகம் பொருள் படைத்ததாக அமைந்திருக்கின்றது. உண்மையாகவே இந்தப் பதத்திற்கு எல்லோ

ரும் ஏற்கும் வண்ணம் யாருமே பொருள் சொல்லவில்லை. சமதர்மம், அபேதவாதம், சமத்துவம் என்னும் வார்த்தை ஜாலங்கள் பாமர மக்களை மயக்கும் அபினியே.

எந்த அரசியல் முறையாயிருந்தாலும் நல்ல ஜனபலமும் பண வளமும் செல்வாக்கும் படைத்தவர்களே வாழ்க்கையின் எல்லா போக பாக்கியங்களையும் அனுபவித்துக்கொண்டு இந்த ''மரப்பாம்பூச்சி'' அரசாட்சியை ஆட்டி வருகின்றார்கள். சமதர்மம் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகளிலே இந்த மயக்கம் அதிகம்; ஒரு வலிமைமிக்க கூட்டம், ஆண்டாண்டு புத்திர பௌத்திரர்களோடு அந்த நாடுகளைச் சுரண்டி, பேரானந்தப் பெரும் போக வாழ்க்கை வாழ்கின்றது. இது எத்தகு முரண்பாடு?

ஆனால், கம்பன் காணும் அரசியல் எல்லோருக்கும் பொதுவான, மக்கள் நலத்தையே மையமாகக்கொண்ட ஓர் எடுத்துக்காட்டான, அற்புதமான அமைப்பாயிருக்கின்றது. கம்பன் அரசியல் சித்தாந்தத்திலே மக்கள் சேவையை மகேஸ்வரன் சேவை, 'நரர்கள் சேவையே நாராயணன் சேவை!' என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கின்றது. வறுமையற்ற அரசியலை, பரிபூரணமான அரசியல் என்பதைப் பற்பல நோக்குகளிலே நமக்குக் காட்டுகின்றான்:

''தெள்வார் மழையும் திரைஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மா நகர்வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ!''

(பாலகாண்டம், நகரப்படலம்)

ஆம்! இங்கு அயோத்தியிலே ஏழை, பணக்காரன் என்று எவனுமில்லை. இந்நிலை ஏற்படவேண்டுமெனின் எத்தகு, தார்மிக, அறக்கோட்பாடுகளும் நன்னெறி ஒழுக்க சீலங்களும் வாழ்க்கையின் மதிப்பீடுகளும் தரங்களும் இருந்திருத்தல் வேண்டும்.

இப்பொழுது கம்பன் பொருளாதாரத் தத்துவத்திற்கு வருவோம். அரசியலும் பொருளாதாரமும் ஒரு நாணயத்தின் பூவுந்தலையும் போல. எனவே, கம்பன் சுரண்டலில்லாத ஓர் அரசியல் அமைப்பை நம்முன் காட்டும் போது, பாலுந் தேனும் பெருக்கெடுத்தோடும் ஒருவளமான பொருளாதாரப் பொலிவையும் நம் முன் நிறுத்துகின்றான். அன்றிலிருந்து இன்று வரைக்கும் — கம்பன் காலத்திலிருந்து காந்தி அடிகள் காலம் வரைக்கும் — கம்பன் சொன்ன 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ'' என்னும் பொருளாதாரக் கோட்பாடு ஏட்டலங்காரமாகத்தான் இருக்கின்றது. இன்றைய மனிதனுக்குத்தான் ஒழுக்க நெறிகளிலே, அறப்பண்புகளிலே, சமய உண்மைகளிலே நம்பிக்கையில்லையே! பின்னர் எவ்வண்ணம் அவனை நல்லாற்றுப்படுத்துவது?

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் பெரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும்'' என்று வள்ளலார் ஒரு பொருளாதாரக் கோட்பாட்டைக் கொடுத்தார். பிறவியிலேயே மனிதனினின்றும் மனிதன் அறிவிலே ஆற்றலிலே ருசிகளிலே அணுகுமுறைகளிலே வேறுபடுகின்றான். பின்னர் இந்த அடிப்படையில் எல்லோரும் சரிசமம் என்பது முரண்பாடு என்று பெருமானார் 'எவரும் ஒருமை உளராகி' எனச் சொல்லி மனத்தளவே நமது சமத்துவம் இருக்க முடியுமென்றும், வேறு வகையான 'சரிநிகர் சமானங்கள்' இருப்பது சாத்தியமல்லவென்பதையும் நமக்குக் காட்டுகின்றார். "ஏற்றத்தாழ்வுகளே உலக இயக்கத்திற்கு ஆதாரசுருதி'' என்று வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தர் சொல்லுகின்றார்: ''Disturbed Equilibrium is the vibration of Life''—இது சாகா வரம் பெற்ற உண்மை!

இப்பொழுது கம்பன் காலத்துச் சமுதாய அமைப்பை நோக்குவோம். திருவள்ளுவரது திருக்குறள், இளங்கோவடிகளது சிலப்பதிகாரம், கம்பனது இராமாவதாரம்—இம்மூன்றும் தமிழ் வானில் மின்னும் அற்புதமான தாரகைகள். இவை மூன்றும் பல விஷயங்களில் வேறுபடுகின்றன. இம்மூன்றும் அன்றைய மக்களது நடையுடை பாவனைகளையும் பழக்க வழக்கங்களையும் நமக்குக் காட்டுகின்றன. எனினும், ஒன்று சொல்லுவதை மற்றொன்று சொல்லுவதில்லை.

இன்று நம்முன் மிகப் பிரபலமாக விளங்கும் தெய்வ மூர்த்தங்களுள் விநாயகருக்கும் முருகனுக்கும் முக்கியமான இடங்களுண்டு.

ஏன்? ஷண்மதத்திலே முறையே காணபத்தியத்தையும் கௌமாரத்தையும் அலங்கரிக்கும் அதிதேவதைகள் இவை. இந்த மூர்த்திகள் திடீரென நமது ஹிந்து தர்மத்திலே நுழைந்தவையல்ல. மிகத்தொன்மையான நமது இதிகாச புராணங்கள் இவைகளைப்பற்றிப் பேசுகின்றன. அப்படியிருக்க மேலே கண்ட மூன்று நூல்களுமே ஏன் தெளிவாக இவைகளைப்பற்றிப் பேசவில்லை. எங்கோ இலைமறை காய்போலத் தொட்டுந் தொடாமலும் பேசியிருக்கலாம்; ஆனால், வலுக்கட்டாயமாக இவைகளைக் கட்டி வைத்து, அடித்து உரித்துப் பொருள் கோடல் கூடாது! மற்ற தெய்வ மூர்த்தங்கள் இம்மூன்றிலும் வந்து வந்து போகின்றார்கள். இதே நிலையை வைத்து, அன்று விநாயக முருக வழிபாடு இல்லையென்றும், இது மத்தியில் நுழைந்ததென்றும் சொல்ல ஏலுமா ?

தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகள் அவைகளில் எங்கு பேசப்பட்டுகின்றன? ஏதோ இந்திர விழாவென்று சிலப்பதிகாரத்திலே காண்கின்றோம்; அதுவே கோவலனின் வாழ்க்கையின் அஸ்தமனத்திற்கு முதற்படியாக அமைந்துவிடுகின்றது. அங்ஙனமாயின் இப்பண்டிகைகள் இடையில் நுழைந்தனவா? கம்பனும் இளங்கோ அடிகளும் வள்ளுவரும் நமது நாட்டிலே இன்றுவரை மிகப்பரவலாக மிக்க குதூகலத்தோடு கொண்டாடப்படும் பண்டிகைகளையும் நோன்புகளையும் பற்றி ஏதும் பெரிதாகச் சொல்லுவதில்லை. ஓர் ஆயிரம் ஆண்டு என்பது ஒரு நாட்டின் வரலாற்றிலே, அதன் கலாச்சார நாகரிக மரபுகளிலே ஏதும் பெரிய மாறுதல்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்திவிட முடியாது. எனவே, நமது பண்டிகைகளையும் நோன்புகளையும் பற்றிக் கம்பன் பேசாதது ஒரு புதிரேதான்!

கம்பன், திருமணத்தில், மணமகன் மணமகளுக்கு மங்கலநாண் - திருமாங்கல்யம் - அணிவிக்கும் சடங்கை முக்கியமாகச் சொல்லவில்லை. ஆனால், ஓரிரண்டு இடங்களிலே இதைக் காட்டுகின்றான். சீதாப் பிராட்டியின் திருமணத்திலேயே இராமர் சீதைக்கு மங்கலநாண் அணிவித்ததைக் குறிக்கவில்லை-நேராகவோ, குறிப்பாகவோ,

''வலம்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம்பொரி செய்வன செய்பொருள் முற்றி
இலங்கொளி அம்மி மிதித்து எதிர்நின்ற
கலங்கல்இல் கற்பின் அருந்ததி கண்டார்''

(பாலகாண்டம்:
எதிர்கோள் படலம்)

இங்கு அம்மி மிதித்து, அருந்ததி காணும் சடங்கைக் கவிஞன் அழுத்தமாகச் சொல்லுகின்றான். ஆனால், ''தாலி கட்டும்'' சடங்கை ஏனோ சொல்லவில்லையே! இந்த அம்மி மிதித்து அருந்ததி காணும் சடங்கு இன்றுவரை நம்மிடையே இறுக்கமாகப் பிணைந்துள்ளது.

ஆண்டாளுங்கூட ''நாராயணன் நம்பி செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி அம்மி மிதிக்கக் கனக் கண்டேன் தோழீ நான்'' என்று மேலே கண்ட சடங்கையே காட்டுகின்றாள். தாலியைப்பற்றிப் பேசவில்லை.

எனினும் கம்பன், அமங்கலியான தாரை தனது விதவைக் கோலத்திலே இலக்குவனைக் காணவரும் காட்சியைச் சொல்லுகின்றான்:

'' மங்கல அணியை நீக்கி
மணிஅணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக்
குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள்பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப நின்றான்''

இங்கு கம்பன் ''மங்கல அணி'' என்று சொல்லும்பொழுது ''தாலி''யைத்தான் குறிப்பிடுகின்றான். ஆக, தாலி கட்டும் பழக்கம் அன்று ஏதோ ஒரு குறிப்பிட்ட சமூகங்களிடையே நிலவியிருந்தது எனக் கொளின் தப்பில்லை.

இன்று மக்களை மிக்க வசீகரித்துள்ள சோதிடக்கலை அன்று இந்த ரூபத்திலேயில்லை என்று துணிந்து கூறலாம். கம்பனோ இளங்கோவோ வள்ளுவரோ சோதிடக்கலையின் நுணுக்கங்களை எங்குமே பேசவில்லை. இராமன் பட்டாபிஷேகத்திற்கு வசிஷ்டர் நாள் குறித்தாரென்றும், சீதையின் திருமணத்திற்குச் சதானந்தர் நாள் குறித்தாரென்றும் அறிகின்றோமேயொழிய நாளையும் கோளையும் பற்றித் துல்லியமாக நமக்கு ஏதும் சொல்லப்படவில்லை. விஞ்ஞானமும் பகுத்தறிவும் உலகாயதமும் பேய்க்கூத்தாடும் மேற்கத்திய நாடுகளிலே கால், அரை

சோதிடர்களுக்குங்கூட நல்ல அறுவடை! பாவம்! அத்துணை நிலைகுலைய வைத்துள்ளது அவர்களை இந்த அணுயுகம்!

எனினும், அன்று 'சாமுத்திரிகாலக்ஷணம்', 'நௌமித்திகம்', 'நேமித்திகம்' போன்ற கலைகள் மக்களது அங்க அவயவ முகபாவ அமைப்புகளைக்கொண்டு பலாபலன்களை மிகத் துல்லியமாகக் கணித்துச் சொல்லியனவாம். இன்று, இக்கலைகளோடு இன்றைய ''உருவ அமைப்பில் குணவியல்'' (Physiognomy) என்னும் கலையை ஒப்பிடலாம். ஆனால், அன்று இந்த சாமுத்திரிகாலக்ஷணமும் நௌமித்திகமும் அடைந்திருந்த உன்னதத்தையும் முழுமையையும் இன்றைய 'பிஷியாக்னமி' அடையவில்லை. அன்று முக பாவத்தைக் கொண்டே ஒரு நௌமித்திரன், மூத்தவன் சேரன் செங்குட்டுவன் இருக்க இளையவன் இளங்கோவே அரசாள்வான் என்று சொன்னானல்லவா? ஆகையாற்றானே இளங்கோ, இளங்கோ அடிகள் ஆகி நமக்குச் சிலப்பதிகாரம் கிடைத்துள்ளது.

கம்பன், நிமித்தங்கள், சகுனங்கள் ஆகியவற்றைப்பற்றியும் இலேசாகப் பேசுகின்றான். இராமன் இலங்கையில் நுழையும்பொழுது திரிசடையிடம் சீதை தனது இடக்கண்ணும் இடத்தோளும் துடிப்பதாகச் சொல்லுகின்றாள். திரிசடை இவைகளெல்லாம் நன்னிமித்தங்கள் என்று சீதைக்குச் சொல்லுகின்றாள்.

கம்பன் தனது நீண்ட, நெடிய காவியத்திலே, பேய்கள், பிசாசுகள், பேய் ஆடுதல், ஆவேசங் கொண்டு சாமி ஆடுதல் முதலியவைகளைக் குறித்து ஏதும் சொல்வதில்லை. ஆனால், திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் இவைகளைப் பற்றிப் பேசுகின்றார்கள்:

''உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்''
(குறள் : புல்லறிவாண்மை)

என்றபோழ்து பேயாகிய அலகையைப்பற்றிப் பேசுகின்றார், வள்ளுவர். தெய்வ ஆவேசங் கொண்டு வெறியாட்டு ஆடுதலை சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் காணலாம். ஏன், மறவர்கள் தங்கள் தலைகளையே கொய்து ஹோமகுண்டத்தில் இட்டுக் கொற்றவையை ஆராதிக்கும் முறை நம்மைத் திடுக்கிட வைக்கின்றது. ஜைன காப்பியமாகிய சிலப்பதிகாரம் இம்மாதிரியான குருதி உறையும் நிகழ்ச்சிகள் பல கொண்டதாயிருக்கின்றது!

ஆதி மனிதன் காலத்திலிருந்து இன்றுவரை உலகெங்கணும் இந்தப் பேய், பிசாசு எண்ணங்கள் நல்ல அழுத்தமாக, இறுக்கமாக மக்களைப் பிடித்துள்ளன. உண்மையாகவே நாம் எவ்வளவோ பரவாயில்லை. மேற்கத்திய நாடுகளிலே இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற தேசங்களிலே, பேய் வீடுகள், பேய் அரண்மனைகள், பேய் மரங்கள் என்று எவ்வளவோ உண்டு (Ghost Houses, Ghost Palaces, & Ghost Trees). கம்பன் எவ்வாறோ இந்தப் பேய்க்கதைகளிலே எவ்விதத்தும் சிக்கிக் கொள்ளவில்லை. அவன் காட்டும் தாடகை, சூர்ப்பணகை போன்றவர்கள் அரக்கிகள்; திரிசிரன், தூஷணன், கரன் போன்றவர்கள் அரக்கர்கள்; விராதன், கவந்தன் போன்றவர்கள் பூதங்கள். மற்றவர்கள் தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள். கம்பன் கழுகு, குரங்கு, கரடி போன்றவைகளைப் பேச வைப்பது மட்டுமன்றி மனிதர்களோடு இரத்த பாச உறவு கொள்ளவும் வைக்கின்றான். இவ்வாறாக இப் பிரபஞ்சத்தையே ஒன்றாகப் பிணைக்கின்றான்.

உலக காவியங்களாகிய ஹோமரது 'இல்லியத்', வெர்ஜிலது 'ஈனியத்', 'ஒதஸி', தாந்தேயின் 'டிவைன் காமெடி' (Divine Comdey) மில்டனது 'சொர்க்க நீக்கம்', 'சொர்க்க மீட்சி' (Paradise Lost and Paradise Regained) ஆகியவை ஏராளமாகப் பேய்கள், பிசாசுகள், நரகம், சொர்க்கம் என்றெல்லாம் பேசுகின்றன. ஆனால் இவையெல்லாம் பேசாமலேயே கம்பன் இலக்கிய வானிலே ஜெகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கின்றான். அகில உலக சகோதரத்துவத்தைப் பேசிய ஓர் ஒப்பற்ற கவிஞன் கம்பன் (universal Brotherhood). ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை பண்ணுகின்றது. விண்ணையும் மண்ணையும் அற்புதமாக இணைத்துவிட்டான்!

கம்பரும் தமிழரும்

ரசிகமணி டி.கே.சி.

1

ஒரு விஷயத்தில் ஆங்கிலேயரைப்போல் யோகக்காரர் உலகத்திலேயே கிடையாது. அவர்களுடைய பாஷையானது உலகம் எங்குமே பரவி இருக்கிறது. சாமானியமாக எல்லாத் தேசத்தாரும் அனுபவிக்கும்படி ஆங்கிலத்தில் ஏதோ ஒரு புஸ்தகம் எழுதிவிட்டால், அதை வாசிக்கிறவர்களை லக்ஷம் லக்ஷமாகக் கணக்குச் செய்யவேண்டியிருக்கிறது. வாசிக்கிறவர்கள் உலகத்தில் முக்குமுடைகள் எங்கெல்லாமோ இருந்துகொண்டு புஸ்தகத்தைப் பற்றி அப்படியும் இப்படியுமாகப் பேசி அனுபவிப்பார்கள். ஒரு புஸ்தகம் எத்தனை எத்தனை பேரை எல்லாமோ ஒன்றுசேர்த்து ஒரு மனப்பாங்குக்குக் கொண்டுவந்துவிடுகிறது. இது ஆங்கில பாஷைக்கும் அதற்குரிய ஆங்கிலேயருக்கும் பெரிய யோகம்.

ஆனால், யோகத்தில் யோகம் என்னவென்றால், முந்நூறு வருஷத்துக்கு முன் எழுதிய புஸ்தகத்தை, அதுவும் தலைசிறந்த கவியை, ஆங்கிலேயர் எல்லாரும் நெடுகிலும் தக்க முறையில் பாராட்டி அனுபவித்து வருகிறார்கள் என்பதுதான். ஷேக்ஸ்பியர் என்றால் தெரியாத ஆங்கிலேயன் கிடையாது. கல்வி பயின்றவனே ஷேக்ஸ்பியரைத் தன் வாழ்க்கையோடு ஒட்டிய அங்கமாக எண்ணுகிறான். கவிஞனை இப்படி ஏகோபித்துப் பாராட்டி வருவதால், நூலுக்குச் சரியான சக்தி ஏற்படுகிறது, பயிலுகிறவர்களுக்கும் அறிவும் உணர்ச்சியும் எவ்வளவோ உயர்ந்துவிடுகின்றன.

ஷேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் தலைசிறந்த கவி என்பதுபற்றி விவாதிக்க மனுஷர்களே கிடையாது. ஷேக்ஸ்பியர்தான் உலகத்திலே சிறந்த கவி என்று ஆங்கிலேயர் சொல்லத் தயங்குவதில்லை. அயர்லாந்து, ஸ்காட்லாந்து தேசத்தார், தங்களுக்கு விரோதமான இங்கிலாந்து தேசத்தான் ஷேக்ஸ்பியர் என்று ஒதுக்குவதில்லை. சமய வேற்றுமை பற்றி விரோதிப்பதும் இல்லை. ஏதோ விதிவசத்தால், ஷேக்ஸ்பியர் தமிழ்நாட்டில் தமிழ்க் கவிஞனாகப் பிறக்க நேர்ந்திருந்தால் அவர் பாடு பெரும்பாடாகத்தான் போயிருக்கும். ஷேக்ஸ்பியர் தப்பிவிட்டார்.

கம்பராலோ தப்ப முடியவில்லை. தமிழ்நாட்டில் வந்து பிறக்க நேர்ந்துவிட்டது.

2

ஆயிர வருஷமாகவே தமிழர்கள் அவர்மேல் இல்லாத பழியெல்லாம் சுமத்தப் பார்த்திருக்கிறார்கள். கட்டின கதைகளுக்குக் கணக்கில்லை. கம்பருக்கு அம்பிகாபதி என்று மகனொருவன் இருந்தானாம். ராஜா மகளை இச்சித்து, உண்ட வீட்டுக்கு ரண்டகம் செய்தானாம். கம்பரோ ராஜா மகனைக் கொன்றாராம்.

சேர அரசனோடு சரிசமானமாக இருந்துகொண்டு சகல மரியாதைகளுக்கும் ஆளானவராய் இருந்தாராம். இருக்கும்போது அவருக்கு உயர்ந்த ஜாதிய பிறப்பு ஒன்றும் கிடையாது என்று ருஜு ஆய்விட்டதாகக் கதை கட்டிவிட்டார்கள் அந்தக் காலத்துப் புலவர்கள்.

பிற்காலத்துப் புலவர்களோ, ஜாதியை மாற்ற வேண்டி, பழைய சாற்றுகவி ஒன்றிலுள்ள பாடத்தையே மாற்றத் தலைப்பட்டார்கள்.

இராமாயணத்தைக் கம்பர் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து அரங்கேற்றியபோது ஒரு புலவர் சம்பிரதாயத்தை ஒட்டிச் சாற்றுகவிகள்

மூன்று* எழுதி வாசித்தார். கம்பர் செல்வந்தராகப் பலருக்கும் கொடை கொடுத்து, வள்ளல் என்று சொல்லும்படியாகத் திருவழுந்தூரில் வாழ்ந்து வந்தார் என்று புலவர் பாடியிருக்கிறார்.

"சீரணி சோழ நாட்டுத்
திருவழுந் தூரில் வாழ்வோன்
காரணிக் கொடையான் கம்பன்
தமிழினுற் கவிசெய் தானே"

முதல் அடியில் 'திருவழுந் தூரில் வாழ்வோன்' என்பது, இயல்பான வார்த்தை. அதைத் 'திருவழுந்தூரு வச்சன்' என்று பிற்காலத்தில் மாற்றியிருக்கிறார்கள். இரண்டாவது சாற்று கவியிலும் 'வள்ளல்' என்று மறுபடியும் புகழ்ச்சியாகப் பாடியிருக்கிறார். திருவழுந்தூருக்குப் பக்கத்தில் இருந்திருக்கக்கூடிய ஒரு கிராம வட்டம் கம்பருக்குரியதாய் அவர் பெயராலே 'கம்ப நாடு' என்று வழங்கப்பட்டிருக்கவேண்டும். இதைக் குறித்து, 'கம்ப நாடுடைய வள்ளல்' என்று சொல்லுவதும் இயல்புதானே! இப்படி எல்லாம் அந்தஸ்துள்ள ஒருவரைப் புகழ்ந்து பாட வந்தவர், 'உவச்சன்' என்று சொல்லியிருப்பாரா? சொல்ல அவசியந்தான் உண்டா?

ஆரோ ஒருவர், வேண்டுமென்றே அல்லது எழுத்தை வாசிப்பதில் ஏற்பட்ட கஷ்டத்தினுலோ பாடத்தை மாற்றிவிட்டார். இந்தப் பிழைபட்ட பாடத்தை இறுகப் பிடித்துக் கொண்டு ஜாதி நிர்ணய ஆராய்ச்சியில் புகுந்துவிட்டார்கள் புலவர்கள். சோனுடைய சமஸ்தான வித்துவான்களோ பூர்வ காலத்தில் பாடத்தை வேறுவிதமாகத் 'திருவழுந்தா "ரம்பட்டன்' என்று கூசாமல் மாற்றியிருப்பார்கள். ஜாதியைக் குறிக்க அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம்.

கம்பர் எந்த ஜாதியாய் இருந்தாலும் நமக்குக் கவலையில்லை. உலகத்தில் தலைசிறந்த ஜாதியைச் சேர்ந்தவர் அவர் என்பது உண்மை. அதாவது கவிச்சக்கரவர்த்தி—ஜாதி. காளிதாஸர், டாகூர், ஷேக்ஸ்பியர், ஹோமர்—இவர்களுடைய ஜாதிதான் கம்பர் ஜாதி. இதற்கு மேலான ஜாதி இருக்க முடியாது.

3

தற்காலத்து ஆசிரியர்கள், ஜாதியின் தாரதம்மியத்தைப் பாராட்டுவதனுல் அவ்வளவாகக் கம்பருக்குக் குறைவு ஏற்பட்டுவிடாது என்று கருதி, வேருெரு வகையில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிருர்கள். மேலே குறித்த சாற்றுகவிகளில், முதல் செய்யுளில் கம்பரை இன்னுர் என்று சொல்லிவிட்டு, இரண்டாவது செய்யுளில் கவியின் சிறப்பைக் 'கவிச்சக்கரவர்த்தி', 'நரருக் கமுதம் ஈந்தான்' என்று சொல்லுகிருர். கடைசிச் செய்யுளான மூன்ருவது செய்யுளில் அந்தக் காலத்து வழக்கின்படியும் தற்காலத்து வழக்கின்படியுமே அரங்கேற்றிய நாள், நக்ஷத்திரம், இடம், சபையோர் எல்லாவற்றையும் பற்றி ஒரு குறிப்புக் கொடுத்தார்.

"எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழில்"

அரங்கேற்றினுன் என்ருர்.

எண்ணூற்றேழாவது சகாப்த வருஷம் என்ருல் கி. பி. 885 என்ருகும். அதாவது 9-ஆவது நூற்ருண்டு கம்பர் காலம் என்று ஏற்படும். இப்படி 9-ஆவது நூற்ருண்டு என்று, செய்யுளை

---

*கம்ப ராமாயணம்—பி. நா. சிதம்பர முதலியார் பதிப்பு—பக்கம், 2.

"நாரணன் விளையாட் டெல்லாம்
நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான்
அறிந்தவான் மீகி என்பான்
சீரணி சோழ நாட்டுத்
திருவழுந் தூருள் வாழ்வோன்
காரணிக் கொடையான் கம்பன்
தமிழினுற் கவிசெய் தானே

"அம்பிலே சிலையை நாட்டி
அமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரான் என்னத் தானும்
தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல்
கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாவே
நரருக்கின் றமுதம் ஈந்தான்.

"எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவியரங் கேற்றி ஞனே."

வைத்துக்கொண்டு சொல்லுவதில் யாதொரு கஷ்டமும் இல்லை. ஆனாலும் சிலர் ஏதோ கஷ்டம் அடைந்து, 'எண்ணூற்றேழு' என்பதற்கு 'எண்ணுகிற நூற்றேழு' என்று பொருள் செய்து, அதற்கு ஆயிரத்தைச் சேர்த்து, ஆயிரத்து நூற்றேழு என்பதாகக் கணக்கிட்டுக் கம்பரைப் பன்னிரண்டாவது நூற்றாண்டுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். * கம்பர் காலை இன்னும் இறுகப் பிடித்து இழுத்து இருபதாவது நூற்றாண்டுக்கே கொண்டுவந்துவிட்டாலும் நமக்குக் கவலை இல்லை.

மேலே குறித்த ஜாதி நிர்ணயம், கால நிர்ணயம் எல்லாம் ஒன்றை மாத்திரம் தெளிவாகக் காட்டுகிறது. தமிழர்களாகிய நம்மவர் ஜாதி வெறிக்கும் மதவெறிக்கும் உள்ளாகி, யாரையும், ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த மகா கவியையும் தூற்றுவதற்கு முன் வருவார்கள்; அதற்காக ஏட்டைக் கெடுப்பார்கள்; பாட்டைக் கெடுப்பார்கள்.

மேலே சொன்ன விஷயங்களைப்பற்றிப் பேசாமலே விட்டுவிடலாம்; அவை நூலின் பெருமையைப் பாதிப்பன அல்லதான். ஆனால் சென்ற சில வருஷங்களாக்ச் சிலர் கம்பரிடத்திலும் அவர் செய்த ராமாயணத்திலும் வேண்டாத ஒரு பகைமையை உண்டாக்கிக்கொண்டு, போன போன இடங்களில் எல்லாம் பிரசாரம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள்; எழுதவும் ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தப் பிரசாரத்தின் ஆர்ப்பாட்டத்தினால் எதிர்த்துச் சொல்லுவதற்கு மனமில்லாமல் அறிவாளிகளும் பொறுப்பாளிகளுங்கூட அங்கீகரித்த முறையில் ஒத்துப் பாடிவிடுகிறார்கள். சாமானிய ஜனங்கள் என்ன செய்யக்கூடும் ? 'ரொம்பப் படித்தவர்களே இப்படி எல்லாம் சொல்லுகிறார்கள். உண்மைதான் போலிருக்கிறது!' என்று நம்ப ஆரம்பித்துவிடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட விளையாட்டும் வினயமும் நாளடைவில் சரித்திர உண்மைகளாக ஆகிவிடுகின்றன. இந்த வேண்டாத விபத்துகள் விளையாமல், பரவாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மேலே சொன்ன விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட நேர்ந்தது. அதுவும் மனமில்லாமல்தான் குறிப்பிட நேர்ந்தது. மேல் நாட்டில் இத்தகைய பிரசாரங்கள் நடந்தால் கேலிக்கிடமாகும்; இங்கோ மதிப்புக்கிடமாய்விடுகிறது. இது நம்முடைய ஜாதக பலன்; வேறென்ன?

4

பொதுவாகப் பண்டைக் காலத்துப் புலவர்கள் சம்பந்தமாக ஜாதி நிர்ணயம், கால நிர்ணயம் செய்வது கஷ்டந்தான். வள்ளுவரைப்பற்றியும் மாணிக்கவாசகரைப்பற்றியும், காரைக்கால் அம்மையாரைப்பற்றியும், பொய்கை ஆழ்வாரைப்பற்றியும் சரித்திரக் குறிப்பு ஒன்றுமே கிடையாது. கிடையாமல் போனால் என்ன? அவர்கள் எழுதிய பாடல்களை விடவா வேறொரு புறம்பான குறிப்பு,அவர்கள் இதயத்தோடு நம் இதயத்தை ஒட்டச் செய்துவிடும் !

கம்பர் சம்பந்தமாகச் சரித்திரக் குறிப்புகள் (மேலே குறித்த சாற்றுகவிகள் தவிர) அவ்வளவாக ஒன்றுமே இல்லை. மற்றக் கதைகள் கவிகள் எல்லாம் நேரான வார்த்தைகள் என்று எடுத்துக்கொள்ளக்கூடியவை அல்ல. ஏதோ அவ்வக்காலத்தில் உள்ள புலவர்களும் மற்ற ஜனங்களும் கம்பருடைய பாடல்களின் பெருமையையும் நயத்தையும் பற்றி வின்னியாச முறையில் சொன்னவைகளே ஒழிய வேறில்லை. அவ்வை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர், கம்பர் எல்லாரும் ஒரே காலத்தில் இருந்ததாகக் கற்பித்துக்கொண்டு பிள்ளைகளை 'டிரில்' வாங்குகிற மாதிரி, 'உட்காருங்கள், எழுந்திருங்கள்—ஒன்று, இரண்டு, மூன்று!' என்றெல்லாம் 'டிரில்' வாங்கிக் கதை கட்டியிருக்கிறார்கள். இவைகளை வைத்துக்கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் ஆராய்ச்சியில் புகுந்துவிடுவார்கள் என்று தெரிந்திருந்தால் முன்னோர்கள் அவ்வாறு கதை கட்டி விளையாடி இருக்க மாட்டார்கள்.

---

*(1) 'எண்ணும் நூற்றேழு' என்று உரை சொல்லுகிறதையே வியக்கிறோம். அதோடு, 'ஆயிரத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்கிற தைரியத்தைப் பார்த்தால் என்ன சொல்லுவதென்று தெரியவில்லை.

(2) வீர சோழிய உரை ஆசிரியர் காலம் பதினோராம் நூற்றாண்டாம். அவரும் தமக்குப் பின், நூறு வருஷம் கழித்து வரும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலுள்ள கம்பரைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்றால் அது இலக்கிய ஆரூடந்தான். இவைகளைப்பற்றி வாசகர்கள் தொந்தரவுபடுத்திக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படி எல்லாம் ஊன்றிப் பார்ப்பதில் கம்பரைப்பற்றிச் சரித்திரம் இல்லாமல் போய் விடுகிறதே என்று வருத்தப்பட வேண்டியதில்லை. உண்மையில் மகாகவியின் சரித்திரம் அவர் பாடல்களின்தான் கிடக்கிறது. கம்பர் வெகு விரிவாகவே தம்மைப்பற்றிய சரித்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்று சொல்லலாம். கம்ப ராமாயணத்தில் அவருடைய செய்யுளான ஒவ்வொன்றும் அவருடைய உண்மையான அனுபவத்தை-இதய பாவத்தை-பளிங்கில் வைத்துக் காட்டின மாதிரி காட்டுகிறது. இதை விடச் சிறந்த சரித்திரக் குறிப்பு ஒரு கவிக்கு இருக்க முடியாது.

ஆகவே, நாம் அறிய முயலவேண்டியன வெல்லாம் கம்பருடைய இதயம். இந்தப் பூமியையும் பேரண்டத்தையுமே தன்னுள்ளே வட்டமிட்டு ஒடச் செய்து அனுபவிக்கக்கூடிய அவ்வளவு விசாலமானது அந்த இதயம்.

''வேதங்கள் அறைகின்ற,
உலகெங்கும் விரிந்தன, உன்
பாதங்கள் இவை, என்னில்
படிவங்கள் எப்படியோ!''

என்று கடவுளின் முடிவில்லாத வியாபகத்தை அளந்து காட்டுகிறார். தமிழர்களுக்கு ஆயுள் முழுதுமே ஊடாடித் திரிந்து களிப்பதற்கு ஒர் உண்மை உலகம், அதாவது பாவ உலகம் கிடைத்திருக்கிறது. ஷேக்ஸ்பியரின் இதய உலகத்தை ஆங்கில மக்கள் ஏகோபித்து அனுபவிக்கிற மாதிரி, கம்பரது இதய உலகத்தைத் தமிழர் ஏகோபித்து அனுபவிப்பார்கள் என்பது ஏற்பட்டுவிட்டால், நமக்குக் கிடைக்கக்கூடிய உல்லாச உயர்தர வாழ்க்கை மாதிரி வேறு யாருக்கும் கிட்டாது என்று சொல்லலாம். இதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் கிரேக்க பாஷை வழக்கில் இருந்தபோது ஹோமர் பாடிய கவியைப் பாடிப் பாடி கிரேக்கர்கள் — மேதாவிகள் முதல் சாமானியம் பெண்டுகள் வரை — அனுபவித்து வந்ததைத்தான் சொல்லலாம். இது மிகையல்ல. கம்பர் அவ்வளவு எளிமையோடும், ஆடவர் பெண்டிர் எல்லாருடைய இதயத்தைத் தட்டும் படியான அவ்வளவு தெளிவான பாவத்தோடும் கவிகளைப் பாடியிருக்கிறார். அவருக்கும் நமக்கும் ஆயிரம் வருஷம் இடையே கிடப்பதால் அங்கொரு வார்த்தை இங்கொரு வார்த்தை நம்முடைய வழக்கோடு ஒட்டாமல் இருக்கலாம். மற்றப்படி பாஷை, வீட்டு பாஷையே. கம்பராமாயணத்தை ஆர, அமர பாவத்தை அழுத்திப் பாடினால் யாருமே அறிந்தனுபவிக்க முடியும் என்பது நம்மில் பலரும் கண்கூடாகக் கண்டதே.

5

ஆனாலும், கம்பராமாயண புஸ்தகத்தை இப்போது இருக்கிறபடி வாசித்து அனுபவிப்பது கஷ்டமான காரியமே. சந்திகளையும் சீரையும் சேர்த்து அச்சிட்டிருப்பதால் வாசிப்பது யாருக்குமே கஷ்டம். சாமானிய மக்களுக்கு முடியவே முடியாது. இந்தக் கஷ்டத்தை ஒருவாறு இனி நிவர்த்தி செய்து கொள்ளலாம். பழைய காலத்துப் பிடிவாதக்காரர்களான சந்திப் புலவர்கள் காலம் போய் விட்டது. 'பற்றேய்த்து வா-காற்றுட்டுத் தா —காறள்ளாடு — பாறருவாருண்டோ— முட்டைத்துவிட்டது.* என்று எழுதியும் பேசியும் வந்த காலம் போய்விட்டது. சந்தி பிரித்து, சீர் பிரித்து, செய்யுள்களை எழுதலாம், அது தமிழருக்குத் துரோகம் அல்ல என்று துணிந்து சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே ஒரு கஷ்டம் எளிதில் நீங்கிவிடும்.

தமிழ் நூல்களில் பாடம் எத்தனையோ விதத்தில் சிதைந்து கிடக்கிறது. ஆனால், கம்பராமாயணத்தில் பாடம் சிதைந்து கிடைக்கிறமாதிரி வேறொன்றிலும் பார்க்கமுடியாது. சில பாடல்களில் சீருக்குச் சீர் பாட பேதம் பாட பேதங்களைக் குறித்த எந்த பதிப்பைப் பார்த்தாலும் அது தெரிய வரும். கண்ணை எடுத்துக் காதில் வைத்திருக்கும்; அப்படியே காதைஎடுத்து மூக்கில் வைத்திருக்கும்; கையைப் பிய்த்து இடுப்பிலும் காலை வாங்கித் தோளிலும் தொங்கவிட்டிருக்கும். ஆப்பரேஷன் செய்து உருவம் ஆக்குவதென்றால் எளிதா? 'போதும், போதும் கம்பராமாயணம் போதும்'

*பல் தேய்த்து வா-கால்துட்டுத் தா-கால் தள்ளாடுது-பால் தருவார் உண்டோ-முள் தைத்துவிட்டது.

என்று தோன்றிவிடும். பழைய் ஏடுகள் ஒரு வகையில் வழி காட்டலாமே ஒழியப் பூரண மாகத் திருப்தி கொடுத்த பாடாக இல்லை. யூகித்து யூகித்து ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் பாடங்களைக் கண்டுபிடித்துத் திருத்த வேண்டி யிருக்கிறது.

பாட பேதங்கள், அதாவது பார்த்து எழுது வதில் ஏற்பட்ட பிழைகள் இருந்துவிட்டுப் போகட்டும். கம்பர் பாடாத கவிகளை ஏட்டில் புகுத்தியிருக்கிறார்களே! அதுவும் எத்தனை எத் தனையோ! இதனால் பாத்திரங்களும் கட்டங் களும் உருக்குலைந்து போயிருக்கிறதைப் பார்த் தால் ஏதோ கம்பர்மேல் துவேஷம் கொண்ட புலவர்கள் நெடுகிலும் ஆயிர வருஷமாகச் செய்து வந்த அக்கிரமம் என்று சொல்லத் தோன்றும். இந்தச் செருகு கவிகளையும் சேர்த்து ஒரு கட்டத்தை வாசித்துப் பார்த்தால் கம்ப ரானவர் கவி அல்லர் என்று மாத்திரம் தோன் றாது, பைத்திய ஆஸ்பத்திரியில் வைத்துப் பந் தோபஸ்து செய்ய வேண்டிய ஆசாமி என்றே தோன்றும். செருகு கவிகளை அறவே களைந்து விட்டுப் படித்தாலொழியக் கம்பரை உணர்ந் தோம் என்று சொல்ல முடியாது. இந்த விஷ யத்தில் பேரம் பண்ணிக்கொண்டிருந்தால் கம்பருக்குத் துரோகம் செய்கிறோம் என்றுதான் ஏற்படும். கம்பருடைய இதய பாவங்களையும், ஓசை தாளம் ஆகிய இசைப் பண்புகளையும், கை லாகவங்களையும் பார்த்தனுபவித்த சாத னம் உடையவர்கள் செருகு கவிகளைக் கண்டு பிடித்து ஒதுக்கிவிடலாம். இது ஒருவாறு சித்தி ஆவதுதான். கம்பரது கவி ஒவ்வொன்றி லும் இருக்கிறது அவர் முத்திரை. ஷேக்ஸ் பியர் கவிகளில் முத்திரையிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மகாகவிகள் எல்லோ ரிடத்திலுமே முத்திரை என்று சொல்லக்கூடிய தனித்த ஒரு அனுபவ தத்துவம் உண்டு. கம்ப ருடைய தனித்த அனுபவ தத்துவம் ஒரு செய் யுளில் இல்லை என்றால் அந்தச் செய்யுளைத் தள்ளி விடுவதற்கு யோசிக்கவே கூடாது. வைர உட் டாணிகளால் செய்த பதக்கத்தின் இடையே காசுக்கு நாலாக வாங்குகிற கண்ணாடித் தரிப்பு இருந்துவிட்டால், அவைகளை உடனே பிடுங்கி எறிய வேண்டியதுதானே முறை. அல்லாத பக்ஷம் குறுணி வந்து கோட்டையைக் கெடுத் தது என்றபடி பதக்கமே தரிப்புப் பதக்கமாய்ப் போய்விடும். செருகு கவிகளோடு சேர்ந் திருப்பதால் கம்பராமாயணமும் இந்தச் சிக்க லான நிலையில்தான் இருக்கிறது.

6

பாட பேதம் போகட்டும்; செருகு கவி போகட்டும். அவைகளைத் திருத்திக்கொள்ள லாம். களைந்துகொள்ளலாம். ஆனால், கவி களில் எத்தனையோ விடுபட்டிருக்கின்றன. நம்மால் அவைகளை நிரப்ப முடியாது. அதற்குத் தெய்விக சக்தியல்லவா வேண்டும். போனது போனதாகத்தான் முடிந்துவிட்டது. இந்த நஷ்டத்தை இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. இந்த நஷ்டத்துக்கும் முத்தொள்ளாயிரம் இரண்டாயிரத்தறுநூறு தொலைந்து போனதற்கும் தமிழ் மக்கள் என் றென்றும் துக்கம் கொண்டாட வேண்டியது தான். ஒருகால், முத்தொள்ளாயிர ஏடு கிடைத்தாலும் கிடைக்கலாம்; குக்கிராமம் எதிலாவது இறப்பில் செருகிக் கிடைக்கலாம்; வெளியாகியும் விடலாம். கம்பராமாயணம் சம்பந்தமாக அவ்வித நம்பிக்கை வைக்க இடமே இல்லை.

இப்படியாகப் பாடல்கள் தொலைந்து போன போதிலும் மிஞ்சியுள்ள பாடல்கள் ஆயிரக் கணக்காகவே இருப்பதாலும் ஒவ்வொரு செய்யுளுமே பட்டம் பட்டமாகத் திருப்பிப் பார்த்து அனுபவித்துக்கொண்டே இருக்கக் கூடிய தனி இசைத்தமிழ்க் கவியாக (மேல் நாட்டார் 'லிரிக்' என்பார்கள்) இருப்பதா லும் கவிகளெல்லாம் ஆயுள் நாள் முழுதுமே பாடியும் பாடக் கேட்டும் அனுபவிக்கக்கூடி யவைதாம். இவை தமிழருக்கு நிலையான செல்வம்தான்.

கம்பராமாயணம் பற்றிய விவரந்தெரியாத சிலர், அது வால்மீகி ராமாயணத்தின் மொழி பெயர்ப்புத்தானே என்று அடிக்கடி கேள்வி கேட்கப் பார்க்கலாம். வால்மீகி ராமாயணத் தின் மொழி பெயர்ப்பையும் கம்பராமாயணத் தையும் ஒத்துப் பார்ப்பதற்கு எந்தக் கட்டத் தையும் எடுத்துக்கொள்ளலாம். ஒப்பிட்டுப் பார்த்தால் ஏதோ ராமர், சீதை, இலக்குவன்,

பரதன் என்றெல்லாம் இரண்டிலும் வரும். குணாதிசயங்களை நோக்குவோமானால் இனம் கண்டு பிடிக்க முடியாதபடி அவ்வளவு வித்தியாசமாய் இருக்கும். வால்மீகியின் சீதை வேறு, கம்பரது சீதை வேறு. அப்படியேதான் ராமர், பரதன் எல்லோருமே. கட்டங்களை வகுக்கும்போது கம்பர் தம் இஷ்டம்போல் பாத்திரங்களின் பாவங்களுக்குத் தெளிவும் வேகமும் உண்டாகும்படி மாற்றி வகுத்துக்கொள்கிறார். முக்கியமாகப் பாத்திரங்கள் பேசும்போது தமிழுக்குரிய தனியான தொனியோடு பேசுவார்கள். அவர்களுடைய பேச்சுக்கென்றே, பாவத்துக்கென்றே சொல்லையும் தாளத்தையும் செய்யுள் உறுப்புகளையும் தமிழ்த் தெய்வம் ஆதியில் வகுத்ததோ என்று சொல்லத் தோன்றும். உதாரணமாக, அனுமாருடைய உயர்ந்த உருவத்தையும் சக்தியையும் பார்த்துச் சீதை வியக்கிறாள். 'என்னைக் கண்டுபிடிக்க நீ ஒருவன் இல்லாது போயிருந்தால் இராமருடைய அருளை யார் அறியப் போகிறார்கள்? அவருக்குப் புகழ் ஏது? கிடையாதுதான். ஆனால் உன்னுடைய பராக்கிரமம் முழுதும் தெரிய வேண்டுமானால் இந்த இலங்கை ஏழு கடலுக்கும் அப்பால் இருந்திருக்க வேண்டாமா' என்கிறாள்.

"ஆழி நெடுங்கை ஆண்தகைதன்
அருளும் புகழும் அழிவின்றி,
ஊழி பலவும் நிலைநிறுத்தற்(கு)
ஒருவன் நீயே உளையானாய் ;
பாழி நெடுந்தோள் வீரா! நின்
பெருமைக் கேற்ப பகைஇலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த(து)
ஆகா திருந்தது இழிபன்றோ ?"

இந்தச் செய்யுளைப் பாடப்பாட, அதாவது ஆர அமர பாவத்தையொட்டிப் பாடப்பாட, என்ன தோன்றும்! சீதை பேசுவதற்கென்றே சொல், இசை, எதுகை மோனைகளைத் தமிழ்த் தெய்வம் அமைத்ததாகத்தான் தோன்றும்.

இந்த மாதிரிப் பாடல்கள் ஆயிரக்கணக்காக அல்லவா இருக்கின்றன! அவை தமிழ்மக்கள் பூமியில் தோன்றிய ஆதிகாலத்திலிருந்தே அவர்கள் மனத்தில் எழுந்த உணர்ச்சி தத்துவங்கள் எல்லாமே நிறைந்து பரிமளிக்கிற பாடல்கள். ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர் ஏகோபித்து அனுபவிக்கிறதுபோல நாமும் ஒன்றுபட்டுக் கம்பர் பாடல்களைத் தமிழ் வழங்கும் நாடெங்கும் தீவகம் எங்குமே பாடி அனுபவிப்போமானால் தமிழுலகம் வானுலகமாக மாறாதா!

'கம்பராம் புலவரைக் கருத்திருத்து வாம்.'"

இராமனும் கைகேயியும்

மு. அருணுசலம்

இராமாயணம் என்னும் இந்தியப் பேரிதிகாசம், இராமன் சீதையுடன் காட்டுக்குச் சென்று, அங்குச் சீதையை இராவணன் என்னும் அரக்கர் தலைவனிடம் பறிகொடுத்துப் பின் அவனை அழித்துச் சீதையை மீட்டு வந்த கதையைச் சொல்வது.

இக்கதை வடமொழியில் வால்மீகி முனிவர் இருபத்து நாலாயிரம் சுலோகங்கள் கொண்ட பெருங்காவியமாகப் புனைந்தளித்தார். அவர் கதையை நன்கு பயின்று, அக்கதைப் போக்கை முழுமையும் தழுவித் தம் காலத்துக்கும் தமிழ் மக்களுடைய பண்பாட்டுக்கும் தமிழ் இலக்கிய நெறிக்கும் இயையுமாறு கம்பர் ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் பத்தாயிரம் பாடல் கொண்ட பெருங் காப்பியமாகத் தமிழில் புனைந்தளித்தார். வடமொழிக் காவியத்தின் சிறப்பினுலே, வடமொழியாளர், அக்காவியம் புனைந்த வால்மீகியை வால்மீகி பகவான் என்று போற்றி வருகிருர்கள். தமிழ் இராமாயணம் செய்த கம்பரைத் தமிழ்க்கவிச் சுவை தேர்ந்த தமிழ் வாணர், கவிச்சக்கரவர்த்தி என்று சொன்னுல் போதாது என்று கருதி, கம்பநாட்டாழ்வார் என்றும் போற்றிப் பணிந்து வருகிருர்கள்.

இந்தியாவிலேயே வால்மீகிக்குப் பிறகு முதல் முதலாகத் தமிழ் மொழியில்தான் இராமாயணம் எழுதப்பட்டது. கம்பருக்கு முன்னும் தமிழில் இராமாயணம் செய்யப்பட்டிருந்தமைக்குச் சான்றுகச் சில பாடல்கள் கிடைத்த போதிலும், நூல் எதுவும் இல்லை. கம்பராமாயணமே வழிநூல். பிற எந்த மொழியிலும் கம்பருக்கு முன் இராமாயணம் எழவில்லை. இது இயல்பே. பிற மொழி இலக்கியங்கள் யாவுமே தமிழிலக்கியத் தோற்றத்துக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றின என்பதே சரித்திர உண்மை.

முற்சொன்ன இராமகதையில், இராமன் சீதையோடு வனம் செல்வதே கதைக்கு முக்கிய கரு நிகழ்ச்சியாக அமைகிறது. இராமனைக் காட்டுக்குச் செல்லவைக்கும் பாத்திரம் கைகேயி. கைகேயி இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை என்றுல் மிகையாகாது. இராமன், கைகேயி என்னும் இரு பாத்திரங்களின் தொடர்பை வால்மீகியும் கம்பரும் எப்படிச் சித்திரிக்கிருர்கள் என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இராமாயணம் தெரிந்தவர் அனைவருக்கும் கைகேயியின் வரலாறு நன்கு தெரிந்திருக்கும். இவள் கேகய மன்னன் புதல்வி. வான்மீகத்தின்படி தசரதன் மனைவியருள் இளையவள். சம்பரனுடன் தசரத மன்னன் போர் செய்து மிகவும் சோர்ந்துபோன நேரம் கைகேயி சாரதியாய் இருந்து, தேரைப் பக்குவமாய்ச் செலுத்தி அவன் உயிரை அந்நேரம் காத்தாள். அந் நன்றிக்குக் கைம்மாருக மன்னன் அவளுக்கு இரு வரங்களை அளித்து, எப்போது விரும்பினுலும் வரங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருந்தான். மந்தரையால் தூண்டப்பட்ட கைகேயி, இராமன் மகுடாபிஷேக சமயம், மன்னனிடம் தான் பெற்ற வரங்களை வலியுறுத்தி, ஒன்றினுல் தன் மகன் பரதன் முடி புனைய வேண்டும் என்றும், மற்றென்றினுல் இராமன் பதினுன்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டுமென்றும் உறுதி செய்தாள். பின்னர்ப் பரதன் இராமனைச் சென்று சித்திரகூட பர்வதத்தில் காணும்போது, கைகேயியையும் ஏனையரோடும் உடன்கொண்டு சென்றுன். எனினும் இங்கு நாம் இராமனும்

கைகேயியும் என்று பேசும்போது, தொடர்புள்ள கதைப்பகுதி இவ்வளவே. இருபெருங் கவிஞர்களும் தங்கள் பாத்திரங்களை எவ்வாறு நடத்திச் செல்கிறார்கள் என்பதே நாம் பார்க்கத் தக்க பொருள்.

இராமனுக்கு முடிசூட்டுவதற்காகத் தசரதன் மந்திராலோசனை, பின் மந்தரை சூழ்ச்சி என்னும் இரு படலங்களுக்குப் பின் 'கைகேயி சூழ்வினை', 'இராமன் நகர் நீங்குதல்' என்னும் இரு படலங்களில் 347 பாடல்களால் (அயோத்தியா காண்டம், படலங்கள் 3-4) கம்பர், இராமன் - கைகேயி நிகழ்ச்சிகளைக் காட்டுகிறார். வால்மீகியோ, இந்தச் சரித்திரப் பகுதியை 10 முதல் 40 வரையுள்ள முப்பது சருக்கங்களில், 1301 சுலோகங்களால் சொல்லுகிறார். அவருடைய கதையமைப்பில் சில கிளைக்கதைகளும் வருகின்றன. அவற்றைக் கம்பர் விலக்கிவிடுகிறார். கைகேயி தசரதனிடம் இருவரங்களைப் பெற்றது முதல் இராமன் கானகம் செல்வதற்காகச் சீதையோடும் இலக்குவனோடும் சுமந்திரன் கொணர்ந்த தேரில் ஏறுகிற வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கம்பராமாயணப்படி பின் வரும் காட்சிகளாக அமைத்துக்கொள்ளலாம்.

முதலாவது, பொழுது விடியவும் வசிட்டன் கட்டளைப்படி தசரத மன்னனை அழைத்து வருமாறு சென்ற சுமந்திரன், தசரதனை அவனது அரண்மனையில் காணாது, கைகேயி அரண்மனையில் இருப்பதறிந்து, அங்குச் சென்று, தன் வரவைத் தெரிவிக்கிறான். கைகேயி சுமந்திரனைப் பார்க்காமல் சேடியர் மூலம் 'பிள்ளையைக் கொணர்க!' என்று சொல்லக் கேட்டு, அவ்வாறே அங்கிருந்து மீண்டு, இராமன் அரண்மனைக்கு செல்கின்றான். சென்று, அவனைத் தேரிலேற்றி மீண்டும் கைகேயி கோயில் அடைகிறான். அங்குத் தந்தையைத் தேடுகின்ற நிலையில் 'நானே அவனுக்குச் சொல்லுவேன்' என்று துணிந்து, அவன் முன்னே கைகேயி வருகிறாள். ''உனக்கு உன் தந்தை உரைப்பது ஓர் உரை உண்டு'' என்கிறாள். பின், நிகழ்ச்சியைச் சொல்லும் பாடல்கள், இலக்கிய உலகில் பிரசித்தி பெற்றவை. ''தந்தையும் தாயும் நீரே, தந்தையின் ஏவலை நீரே சொல்விராக' என்று இராமன் கூறக் கைகேயி, ''பரதன் முடி சூடுவான். நீ பதினான்கு ஆண்டு வனவாசம் செய்வாய் என்பது அரசன் ஆணை'' என்கிறாள். கேட்ட இராமன், அப்பொழுது அலர்ந்த செந்தாமரையை வென்ற முகத்தினனாகி, ''மன்னவன் பணி அல்லாவிட்டாலும் உம்பணியை யான் மறுப்பேனோ?'' என்று சொல்லி, அப்போதே கானகம் செல்ல விடைகொண்டு வெளிச் செல்கிறான்.

இங்கு நோக்கத்தக்கது, இராமன் தந்தையைக் காணவுமில்லை, அவன் சொல்லைக் கேட்கவுமில்லை என்பதாகும். பின்னால் நடைபெறும் துன்பியல் நிகழ்ச்சிகளுக்கு இது மிகவும் பொருத்தமுடையதே. ஏனெனில், காணாமலேயே மகன் பிரிவுக்காக உயிர் விடுகின்ற தசரதன், கண்டு பிரிவதானால் என்ன ஆகியிருப்பான் என்று சொல்வதற்குச் சொற்களில்லை.

இதை வால்மீகத்தில் காணலாம். வசிட்டனால் ஏவப்பட்ட சுமந்திரன், கைகேயி கோயில் உட்சென்று, துயரத்தால் நொந்திருக்கும் தசரதனைக் காண்கிறான். சுமந்திரன் தசரதனுக்கும் மிகவும் அந்தரங்கமானவன் ஆனபடியால் அவன் அரசனைக் காண்பதற்கு அனுமதி பெற வேண்டியதில்லை. காலையில் சென்று வெகு நேரம் பள்ளி உணர்த்துகிறான். கேட்ட தசரதன் வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போலப் பின்னும் வருத்தமுறுகிறான். ''கைகேயினுடைய கொடிய சொற்களால் புண்பட்டிருக்கிற என்னுடைய மார்பை உன்னுடைய தோத்திரம் ஆகிய வேல் மீண்டும் புண்படுத்துகிறது'' என்கிறான். சுமந்திரன் ஒன்றும் விளங்காமல் அச்சத்தோடு நிற்க, கைகேயி, ''அரசர் ராமன் முடிபுனைதல் காரணமான மகிழ்ச்சியினால் இரவு தூக்கமில்லாமல் இப்போது அயர்ந்திருக்கிறார்'' என்று சொல்லி, உடனே இராமனை அழைத்து வருமாறு கட்டளை இடுகிறாள்.

கேட்ட சுமந்திரன் உண்மையாகவேஇராமன் முடிபுனையப் போகிறான் என்றெண்ணி மகிழ்ந்து வெளி வரும்போது, அங்கே இருந்த அரசர்கள் முதலானோர் முடிபுனையும் நேரம் நெருங்கிவிட்டதென்று அவசரப்படுத்தவும்,

சுமந்திரன் மீண்டும் உட்சென்று அரசனைத் துதி பாடவும், அரசன் திரைக்குப் பின்னுலிருந்து "இராமனை அழைத்து வருமாறு கைகேயி சொன்னது நான் சொன்னதுதான்; விரைந்து சென்று இராமனை அழைத்து வருக'' என்றான். ஒன்றுமறியாத சுமந்திரன் மகிழ்ச்சியோடு வெளிப்பட்டு, இராமன் கோயில் நோக்கிச் செல்லுகிறான்.

அங்குத் தன் வருகையைத் தெரிவிக்குமாறு சொல்லி, அனுமதி பெற்று, உட்சென்ற சுமந்திரன் இராமனிடம் சொல்ல, இராமன் சீதையிடம் விடை பெற்றுத் தேரேறி அரசனுடைய அந்தப்புரம் அடைந்து, கைகேயியோடு வாடிய முகத்தோடிருக்கிற தந்தையைப் பார்க்கிறான். தந்தையின் வாயில் ''ராமா'' என்னும் ஒரு சொல்லைத் தவிர வேறு சொல் எழவில்லை. கைகேயியைப் பார்த்து வினவவும் அவள், ''உன் தந்தை எனக்கு இரண்டு வரம் முன் அளித்திருக்கிறார். அதை இப்போது உன்னிடம் சொல்ல அஞ்சுகிறார். நீ அதை நிறைவேற்றுவதாயிருந்தால் யானே சொல்லுகிறேன்'' என்றாள். அப்போது இராமன், ''அரசனுக்காக எதையும் நான் செய்வேன் தீயிலும் புகுவேன், நஞ்சையும் உண்பேன், கடலிலும் மூழ்குவேன். சொல்லுக'' என்றான். அதன் மேல் கைகேயி செய்தியைச் சொல்லி, ''தந்தையின் வாக்கை நீ காப்பாற்றுவாயாக'' என்கிறாள். அதன் மேல் இராமன், தான் கட்டளையை நிறைவேற்றுவதாகச் சொல்லி, பரதன் முடிபுனைவதற்காகக் கேகய நாட்டிலிருந்து பரதனை விரைந்து அழைத்து வர வேண்டுமென்றும் சொல்லுகிறான். அதற்குக் கைகேயி, ''பரத பட்டாபிஷேகம் காண்பதற்காக நீ இங்கு தங்க வேண்டாம். உடனே வனம் செல்வாயாக, நீ செல்லுகிற வரையில் உன் தந்தை நீராடார், உண்ணார்'' என்றாள். கேட்டுக்கொண்டிருந்த தசரதன் மூர்ச்சையடைந்து வீழ்ந்துவிட்டான். அவனைத் தூக்கி வைத்து உபசரித்த இராமன், மீண்டும் கைகேயி தூண்டவே, வனம் செல்ல விரைகிறான். கதறுகின்ற தந்தையை விட்டுவிட்டு இருவரையும் வலம் வந்து வணங்கி வெளிப்பட்ட இராமன், நேரே தன் தாயின் கோயிலை அடைகிறான்.

துயரத்தில் மூழ்கியிருக்கின்ற தந்தையை இராமன் சந்தித்துப் பின் மிக்க மனத்துயரத்தோடு தானும் பிரிகின்ற ஒரு நிலையைச் சம்பர் உண்டாக்கவில்லை. கைகேயியே முன்னின்று அனைத்தையும் சொல்லி நடத்துகிறாள்.

அடுத்த காட்சி: முடிபுனையும் கோலமல்லாமல் வெறும் தோற்றத்தோடு இராமன் தன் தாயின் கோயிலை அடைகிறான். அவள், செய்தியை அவன் உரைக்க உணர்கிறாள். மிகுந்த துயரத்துக்குள்ளாகும் அன்னையைத் இராமன் தேற்றுகிறான். முடிவாகக் கோசலை, 'பரதன் முடி சூடினும் இராமன் காடு செல்வதையேனும் தடுக்கலாம்' என்னும் எண்ணத்தோடு கோசலை அரசனிருக்குமிடம் செல்கிறாள். சென்று அரசனுடைய துயர்நிலையைக் கண்டு அழுகிறாள். அழுகுரல் கேட்ட வசிட்டன் அங்கு வருகிறான். வசிட்டன் மன்னனைத் தேற்றிக் கைகேயியைக் கடிந்துரைக்கிறான். அப்போது தசரதன், இளமையில் தாய் தந்தையருக்கு ஒரே பற்றுக்கோடாயிருந்த ஒரு பார்ப்பனச் சிறுவனை அறியாது அம்பெய்து கொன்ற காரணத்தால், அவர்களுடைய சாபம் பெற்று, இப்போது தன் புதல்வன் பிரிவால் தானும் உயிர் துறக்க நேர்கின்றது என்பதை உரைக்கிறான்.

வால்மீகத்தில் இராமன், தாயைக் கண்டு தான் வனம் போவதைச் சொல்லுகிறான். அவள் வருந்தும்போது பல செய்திகளோடு கைகேயியின் காதல் வசப்பட்ட தசரதன், தனக்கு அவள் அவமதிப்பு தருவதாகவும் கூறுகிறாள்.

அச்சமயத்தில் அங்கு வருகிற இலக்குவன் அரசனுடைய அநீதியைப் பொறுக்க முடியாது ''சத்துருவாகிய தந்தையைக் கொல்லவும் கூடும்'' என்று கூறுகிறான். இச்சொற்களைக் கேட்ட இராமன் மிகவும் வருந்திப் பலவிதமாக அவனுக்குச் சமாதானம் கூறுகிறான். கூறித் தாயை வணங்கிச் சீதையைப் பார்க்கச் செல்லுகிறான்.

கம்பராமாயணத்தில் கோசலை தரசதனைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்ற பிறகு நகரமாந்தருடைய துயரத்தால் இலக்குவன் செய்தியறிந்து, தசரதன்மீதும் கைசேயியின்மீதும் மிகுந்த சினம் கொண்டெழுகிறான். அவனது சீரிய உள்ளத்தையுணர்ந்த இராமன், மிக முயன்று அவனுடைய சினத்தைத் தணிக்கிறான்.

இவ்வாறு இந்த நிகழ்ச்சியைக் கம்பர் வால் மீகியினின்று மாற்றியுரைத்திருப்பது மிகவும் பொருத்தமாயுள்ளது.

இந்த நிலேயில் இருவருமாகச் சுமித்திரை கோயிலுக்குச் செல்லுகிருர்கள். உண்மையை யுணர்ந்தபோது அவளுக்கு உண்டாகிய துன்பங் களுக்கு எல்லேயில்லே. அந்த நேரம் கைகேயி அனுப்பிய மரவுரியை ஏவல் மகளிர் கொண்டு வந்து தருகிருர்கள். இலக்குவன் அவற்றைப் பெற்றுக்கொண்டு, தானும் இராமனேடு வனம் போவதற்கு முறைப்படி தன் தாயை அனுமதி கேட்கிருன். இலக்குவன் தாய் என்னும் பெருந் தகுதிக்கேற்பச் சுமித்திரை அருமையாக அறி வுரை கூறி அவனே அனுப்புகிருள். ''இராம னேடு சென்று வா. இராமனிருக்கும் வனமே உனக்கு அயோத்தி. இராமனே மன்னவன். சீதையே உனக்கு உயிர்த்தாயர். சென்று வா. இனித் தாமதித்தாலும் ஏதம்'' என்று சொல்லி அனுப்புகிருள். பின் இருவரும் சுமித்திரை யிடம் விடைபெற்று இப்பால் வருகிருர்கள். இந்தக் காட்சி கம்பராமாயணத்திலேயே நெஞ்சையுருக்குகின்ற மிகச்சிறந்த காட்சி களுள் ஒன்று. இருவரும் சுமித்திரையிடம் விடைபெறும் காட்சியே வால்மீகத்தில் இல்லே. இது கம்பருடைய புதிய படைப்பு.

இனி, வெளிப்பட்ட இருவரும் எதிரே வசிட்டனேக் காணுகிருர்கள். முடிபுனேய வேண் டிய இராமன் தன் தம்பியோடு சீரைச் சுற்றி வனம் புகத் துணிந்து வந்ததைக் காண்கிருன் வசிட்டன். துன்பமும் இன்பமும் ஒருங்குநோக்க வல்ல முனிவனும் 'கௌவயம் பெருங்கடல் கால் வைத்தான்' என்ருர் கம்பர். இராமன், தன் தந்தையின் இடரை நீக்குமாறு முனிவ னுக்குக் கூற, கேட்ட முனிவன் கண்ணீர் உகுத்து நிற்கிருன். அதுவே விடையாக, இராம னும் இலக்குவனும் அவனே நீங்கிப் போகி ருர்கள்.

பின்னுல் இராமன், சீதை இருக்குமிடம் சென்று, தான் வனம் போவது சொல்லி வருந் தாதிருக்குமாறு கூறுகிருன். அவள் ''காட்டுக்கு வருவேன்'' என்பதைப் பல காரணங்கள் சொல்லித் தடுக்க முயல்கிருன். அவள் ''நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்று தன் அன்பின் பெருக்கை எடுத்துக் காட்டியபோது, இராமன் இனி என் செய்யத்தக்கது என்று ஒரு கணம் அயர்ந்து நிற்கிருன். உடனே சீதை உட்சென்று, ஒரு மரவுரியைத் தானே துணிந்து புனேந்துகொண்டு வந்து, அவன் கையைப் பற்றிக்கொண்டு நிற்கிருள். அதற்கு மேல் இராமன் சொல்வதற்கு என்ன உள்ளது ? சீதை வனம் போவது ஒரு முடிந்த செய்தியாகி விட்டது.

இராமனேப் பிரிந்து சீதை, தரியாள் என் பதைத் தன்னுடைய பெண்ணுள்ளத்தினுல் சுமித்திரை நன்கு உணர்ந்திருந்தாள். இதனுல் தான் போலும் இலக்குவனுக்கு, 'வனத்தில் சீதையே உனக்குத் தாயர்' என்று அவள் சொன்னபோது, சீதை வனம் புகுவது முடிந்த செய்தியாகவே வைத்துப் பேசியிருக்கிருள்.

இராமன்—சீதை குறித்த செய்திகள் ஒரே அன்பின் உச்ச நிலேயில் கம்பர் சித்திரிக்கிருர். ஆனுல், இந்த நிலேயை வேறு விதமாக வால்மீகி காட்டியிருக்கிருர். சீதையைப் பரீட்சிப்பதற் காகவே வரவேண்டாம் என்று தான் சொன்ன தாக அங்கு இராமன் கூறுகிருன்.

மேலும், அங்குச் சீதை போவது முடிவான பிறகுதான், இராம இலக்குவ சம்வாதமும் இலக்குவனே இராமன் உடனழைத்துச் செல்லச் சம்மதமும் சொல்லப்படுகின்றன.

கம்பராமாயணத்தில் இராமன் தசரதனேப் பார்க்கவேயில்லே. விடை பெறும்போதுகூடப் பார்க்கவில்லே. கைகேயி கொடுத்ததே விடை. ஆனுல் வால்மீகத்தில் முன்னமே நாம் காட்டிய படி இராமன் தசரதனே மூர்ச்சை தெளிவிக்க முயன்ற செயல் மட்டுமன்றிப் பின்னரும் பல செயல்களேப் பார்க்கிருேம். இராமன், இலக்கு வன் சீதையோடு தசரதனேச் சென்று காண் கிருன். அவனேச் சென்று தழுவ முயன்ற தசரதன் மூர்ச்சித்து விழுகிருன். மூர்ச்சை தெளிந்த தசரதன் இராமனே நோக்கி, ''வஞ் சனேயால் நான் வரங்கொடுத்தேன். ஆகவே என்னே இப்போதே நிக்ரகித்துவிட்டு முடி சூடிக் கொள்'' என்று பலமுறை வேண்டுகிருன். அப் போது இராமன் ''தந்தை சத்திய சந்தன் என்ற பெயரைக் காப்பாற்ற வேண்டும். தர்மம் கெடக்கூடாது'' என்று தந்தைக்குப் பலமுறை

உபதேசிக்கிருன். அன்றிரவு மட்டுமே தங்கிப் போகுமாறு தசரதன் வற்புறுத்தியும் இராமன் இணங்கவில்லே.

அந்த நேரம் எல்லார் முன்னிலேயிலும் கைகேயி மரவுரி கொண்டுவந்து கொடுத்தாள். இராமனும் இலக்குவனும் தாங்கள் அணிந்திருந்த பட்டாடைகளேக் களேந்து, மரவுரி அணிந்துகொண்டார்கள். சீதைக்கோ, தன் மரவுரியை அணிந்துகொள்ளத் தெரியவில்லே. அதன் மேல் இராமன் அவள் அணிந்திருந்த பட்டாடையின்மீது மரவுரியைச் சுற்றினுன். பார்த்தோர் அனேவரும் கதறினர். அந்த நேரம் வசிட்டரும் இதைத் தடுத்து, சீதை வரத்தினுல் பாதிக்கப்படவில்லே, அவள் மரவுரி அணிய வேண்டுவதில்லே என்று தடுத்தார். இராமன் கேட்கவில்லே.

பின்னர்த் தசரதனே முன்னின்று, சுமந்திரனேக் கொண்டு, இராமனுக்கு வேண்டிய தேர் முதலியன கொண்டு அனுப்புகிருன்.

இவ்வாறு இந்தக் காட்சிகளேப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பார்க்குந்தோறும், ஒவ்வொரு நிலேயிலும் வால்மீகி—கம்பர் இருவரிடையும் பெருத்த வேறுபாட்டைக் காண்கிரும். கம்ரில் ஒவ்வொருவரும் ஓர் லக்ஷ்ய பாத்திரம்-கோசலே, சுமித்திரை, சீதை, இலக்குவன், தசரதன், சுமந்திரன்—அனேவருமே. கைகேயி கூடக் கொடுமைக்கு ஓர் இலட்சியப் பாத்திரம். வால்மீகியில் இத்தகைய இலட்சியப் பாத்திரப் படைப்பு இல்லே. அனேவரும் சாமானிய உலகில் உலவுகின்ற சாமானிய மக்களாகவே காட்சி தருகின்றனர். தமக்குக் கிடைத்த சாமானிய மக்கள் ஒவ்வொருவரையும் லக்ஷ்ய நிலேக்கு உயர்த்திக்காட்டியது கம்பர் பெருமை. இதை இந்தச் சிறு நிகழ்ச்சியிலும் நன்கு காண்கிரும்.

கன்னிப் போர்

பி. ஸ்ரீ. ஆச்சாரியா

இலைகளில்லாமல் உலர்ந்துபோன மூங்கில்களும், உடல் பிளந்து பேய் நிற்பதுபோல நிற்கும் வைரம் பாய்ந்த கள்ளி மரங்களும் தாம் காணப்படுகின்றன, அந்தக் காட்டிலே. நிலமோ, ஈரப்பசை முழுவதையும் உறிஞ்சி விட்டுச் சூரியன் உமிழ்ந்த சக்கைபோலக் காண்கிறது. அந்த வெப்பத்தை வருணிக்க நாவும் கூசுகிறதாம், 'வெந்து போவோமே!' யென்று. 'ஏக வெங்கனல் அரசிருந்த' அதாவது, அக்கினி தேவனே ஏகபோக ஆட்சி நடத்துகிறானென்று சொல்லும்படியிருந்த அந்தப் பாலைவனத்திலே அடி வைக்கிறார்கள், விசுவாமித்திர இராம லட்சுமணர் மூவரும்.

அயோத்தியைக் கடந்து, சரயு நதியைத் தாண்டி, அன்று இரவு ஒரு சோலையிலே தங்கி, மறுநாள் நடுப்பகலில் பாலைவனத்தையடைந்ததும், இராமன் முனிவரை நோக்கி, 'சக்கரவர்த்தியின் இராஜ்ஜியத்தில், ஒரு பகுதி இப்படி அழிந்து போனதற்குக் காரணமென்ன?' என்று ஆச்சரியத்தோடு கேட்டான். அதற்கு உத்தரமாக விசுவாமித்திரர் ஒரு கொடிய இராட்சஸியின் கதையைச் சொன்னார்.

சொல்லி,

''சூடக அர(வு)உறழ் சூலக் கையினள்,
காடுறை வாழ்க்கையள், கண் ணிற்
காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவும்
தோளினாய்,
தாடகை யென்ப(து)அச் சழக்கி
நாமமே''

[சூடகம் - கைவளை; கங்கணம். அரவு - பாம்பு. உறழ் - பொருந்திய. உறை - வசிக்கிற. அவாவும் - ஆசைப்படும். சழக்கி- குற்றவாளி.]

என்று, பேர்வழியை வருணித்து, அந்தப் பெயரையும் குறிப்பிட்டார்.

விஷப்பாம்பைக் கங்கணமாக அணிந்திருப்பதே, அரக்கியின் விஷம் போன்ற நெஞ்சுக்கும் சங்கற்பத்திற்கும் ஓர் அறிகுறி. அவள் கையும் பாம்பு போலிருக்கிறதாம். அந்தக் கையிலுள்ள பயங்கரமான சூலாயுதமும் பாம்பு போல் ஒடுங்கி, நீண்ட உடலும் விரித்த படம் போன்ற தலையும் உடையது. தான் பாழாக்கிய அந்தப் பிரதேசத்திலேதான் அந்தக் குற்றவாளி வசிக்கிறாளென்றும் முனிவர் தெரிவிக்கிறார். இராமனைப் பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தவர், அந்தப் பயங்கரியின் வரலாறு சொல்லிப் பெயரையும் சொல்வதற்கு முன்னமே, இராமனுடைய திவ்ய சௌந்தரியத்தில் ஈடுபட்டு, 'கண்ணில் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!' என்று அவனை ஆசைதீர அழைக்கிறார். புருஷோத்தமனை இராமனுடைய பேரழகு விசுவாமித்திரரின் கண்ணையும் கருத்தையும் அடிக்கடி வசீகரித்துவிடுகிறதென்று ஊகிக்கலாம். இராம சௌந்தரியம் தசரதனை வசீகரித்ததுபோல், இந்த ஞானத் தந்தையையும் வசீகரிக்கிறது. 'காதலித்த உருவாகி அறம் வளர்க்கும்' தெய்விக அழகல்லவா ?

'தாடகை ஒருத்தியே இப்படி நாட்டின் வளத்தையும் வனப்பையும் அழித்தாளா?' என்று அந்த அழகனுள்ளத்திலே ஒரு சந்தேகம் தோன்றக் கூடுமல்லவா? அந்தச் சந்தேகத்தையும் எதிர்பார்த்தவர்போல் பேசினார் முனிவர்:

''உளப்பெரும் பிணப்பறு உலோபமீ
ஒன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு
மாறுபோல்,
கிளப்பருங் கொடுமைய் அரக்கி, கேடிலா
வளப்பெரு மருதவைப்(பு) அழித்து
மாற்றினாள்.''

[உளப்பெரும் பிணிப்பு - உள்ளத்தின் பெரிய பந்தம். அரு - நீங்காத. இளப்பரு - சொல்லமுடியாத. வளப்பெரு மருதவைப்பு - வளம் பொருந்திய பெரிய மருத நிலம் : மருதம் - வயல்களும் வயல்கள் சூழ்ந்தஇடமும்.]

ஒருவனுக்கு எத்தனை நற்குணங்கள் இருந்த போதிலும் இராட்சஸ குணமான உலோபம் ஒன்றே போதுமாம், அந்த நற்குணங்களையெல் லாம் கெடுத்து உள்ளத்தை வறண்டொழிந்த பாலைவனமாக்குவதற்கு. அப்படி அந்த இராட் சஸி ஒருத்தியே விசாலமான வயற்காடுகளை யும் அவற்றின் வளங்களையும் அழித்துவிட்டாள் என்கிறார். எவ்வளவு பொருத்தமான—உலகி யல் அறிவு பொதிந்த - உவமானம்!

இலங்கையரசனான இராவணன் கட்டளை யினாலேயே அவள் தம்முடைய யாகத்தைக் கெடுக்கிறாளென்று குறிப்பிட்டுத் தீமைகளுக் கெல்லாம் மூலகாரணமான இராட்சஸ ஏகாதி பத்தியத்தையும் பேச்சோடு பேச்சாய் ஞாபகப் படுத்தித் தாடகையின் செய்தியை முடித்தார்.

''முன்னுல(கு) அழித்து, முறைநின்ற
உயிரெலாம்
தன்னுண வெனக்கருது தன்மையினள்;
மைந்த!
என்இனி உணர்த்துவ(து)? இனிச்சிறிது
நாளில்
மன்னுயிர் அனைத்தையும் வயிற்றில்இடும்!
என்றான்.''

[முன் உலகு - பழமையான இந்த உலகத்தை, முறை - ஒழுக்கம், நீதி. உணர்த்துவது - சொல்ல வேண்டுவது.]

'மைந்தனே! நல்லொழுக்கத்திலே நிலைநின்ற உயிர்களைத் தனக்கு உரிய உணவாகக் கருதும் இயல்பினையுடையவள் அவள். அந்த உயிர்களை யெல்லாம் இன்னும் சில நாளில் அந்த இராட் சஸி தன் வயிற்றுக்குள்ளே தள்ளிவிடுவாள்!' என்றார். ஜீவகாருண்யத்திற்காகவே அவளைக் கொல்ல வேண்டுமென்பது குறிப்பு.

அது கேட்ட இராமன், பூக்கள் சூட்டிய தன் முடியை அசைத்துக்கொண்டு, 'இப்படிப்பட்ட தொழிலைச் செய்கிறவள் எங்கேயிருக்கிறாள்?' என்று வினவினான்.

''கைவரை யெனத்தகைய காளையுரை கேளா,
ஐவரை அகத்திடை அடைத்தமுனி, 'ஐயா!
இவ்வரை இருப்பதவள்' என்பதனின்
முன்(பு)ஓர்
மைவரை நெருப்பெரிய வந்ததென
வந்தாள்.''

[கைவரை - துதிக்கையுடைய மலைபோன்ற யானை. கேளா - கேட்டு. ஐவரை - (இங்கே) பஞ்சேந்திரியங்களை. வரை - மலை, மைவரை - கரிய மலை.]

இராமனுக்கு விசுவாமித்திரர் அருகேயிருந்த ஒரு மலையைச் சுட்டிக் காட்டி, 'இந்த மலைதான் அவள் இருப்பது!' என்று சொன்னார். அப்படிச் சொல்லி முடிப்பதற்கு முன்பே, ஒரு கரிய மலை தங்களுக்கு எதிரே நடந்து வருவதுபோலத் தோன்றியதாம் அம்மூவருக்கும். பிறகு அது 'எரிமலைதானோ?' என்று பிரமிக்கும்படி நெருப் பைக் கக்கிக்கொண்டு வந்தது! ஆம், அந்த 'மாமிச பர்வதம்'தான் தாடகை!

அப்படிக் கரிய மலை போன்ற உடலோடும், செம்பட்டை மயிரோடும், கோபக்கினியோடும் வந்தவள், அம்மூவரையும் கண்களில் நெருப் புப் பொறிகள் பறக்கப் புருவம் நுனி துடிக்க விழித்துப் பார்த்தாள். என்ன கோரமான வாயும் பல்லும்! என்ன விழி! என்ன விழிப்பு!

''இறைக்கடை துடித்தபுரு வத்தள்,
எயி(று) என்னும்
பிறக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்,
மறக்கடை அரக்கி,வட வைக்கனல்
இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ
விழித்தாள்.''

[இறை - சிறிது. கடை - நுனி. எயிறு - பல்; (இங்கே) கோரப்பல். பிறை - இளஞ் சந்திரன். கடை - கடைவாய். பிறக்கிட - வெளியே விளங்கும்படி. பிலம் - குகை. மறக்கடை - பாவத்தின் முடிவு. வடவைக் கனல் - வடவாமுகாக்கினி. நிறைக்கடல் - நிறைவுள்ள கடல்.]

கோரப் பற்கள் பிறைச்சந்திரர்களைப்போல் கடைவாயில் வெளியே தெரியும்படி மடித்துக் கொண்டிருந்தாள். அந்தக் குகை போன்ற வாயை. கரிய கடலிலே வடவாமுகாக்கினி இரு கூறுகித் தோன்றி ஜொலித்து எரிவது போல் சிவந்து விளங்கின கண்கள், அந்த முகத்திலே! பாவத்தின் சிகரமே அப்படி வந்து நின்றதாம்.

பாடிப்பாடிப் பாருங்கள். இதன் வல்லோசை எவ்வளவு நன்ருகப் படம் பிடித்துக் காட்டு கிறது, தாடகையின் வலிய கொடிய தோற்றத் தையும் குணஞ்செயல்களையும் என்று.

வருகையும் பார்வையுமே இப்படியென்ருல், இந்த அரக்கியின் ஆரவாரத்தையும் அட்ட காசத்தையும் என்னவென்று சொல்வது?

''ஆர்த்(து) அவரை நோக்கி நகைசெய்(து)
எவரும் அஞ்சக்
கூர்த்தநுதி முத்தலை அயிற்கொடிய
கூற்றைப்
பார்த்(து) எயிறு தின்று, பகுவாய்முழை
திறந்(து) ஓர்
வார்த்தை உரை செய்தனன் இடிக்கும்
மழை அன்னுள்!''

[ஆர்த்து - ஆரவாரஞ்செய்து. கூர்த்த நுதி - கூர்மையான நுனி. அயில் - சூலம். படு - பிளவுபட்ட. முழை - குகை. மழை- மேகம்.]

''கடக்கரும் வலத்(து) எனது காவல்இது; யாவும்
கெடக்கரு அறுத்தனன்! இனிச்சுவை
கிடக்கும்
விடக்(கு) அரி(து) எனக்கருதியோ?
விதிகொடு உந்தப்'
படக்கருதியோ ? பகர்மின் வந்தபரி(சு)'
-என்ருள்.

[கடக்க அருவலம் - (எவராலும்) கடக்க முடியாத பலத்தையுடைய. விடக்கு - மாமி சம். கொடு - கொண்டு. உந்த - பிடித்துத் தள்ள. பட - நாசமடைய. பரிசு- விதம்.]

தாடகை ஆரவாரஞ் செய்துகொண்டு இம் மூவரையும் நோக்கி ஒரு சிரிப்புச் சிரித்தாளாம். அந்தச் சிரிப்பிலேதான் என்ன இகழ்ச்சி! பிறகு, சூலாயுதம் என்னும் அந்தக் கொடிய யமனை ஒரு பார்வை பார்த்தாளாம், 'அவர்களுடைய உயிரை ஊனக்கு விருந்தாக்குவேன் !' என்று அதை உத்ஸாகப்படுத்துவது போலே. அப் பால் பற்களைக் கடித்து, வாயைக் குகைபோல் திறந்து, இடிக்குரலில் பேசத் தொடங்கினுள்.

தாடகையின் பேச்சென்ருல், எப்படி யிருக்குமோ? என்று நினைக்கிறோம். கேளுங்கள். 'இது என் இராஜ்ஜியமாயிற்றே!' என்கிருள். இந்த இராஜ்ஜியத்தைத்தான் எவ்வளவு அழ காய்க் காவல் செய்கிருள், இந்த அரசி! 'யாவும் கெடக்கரு அறுத்தனன்!' என்று பெருமை பாராட்டுகிருள். சருவும் இல்லாதபடி உயிர் களை அழித்த இந்த 'மகராசி'யின் மாட்சியே மாட்சி! அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! 'சுவை யுள்ள மாமிசம் இனிமேல் எனக்கு இங்கே கிடைக்காது என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்ததோ? எனக்கு உணவு தர வேணு மென்று உடம்பை அருமையாக வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே! உங்கள் கருணையே கருணை! உங்கள் தியாகமே தியாகம்! உங்கள் புத்தியே புத்தி!' என்று பரிகசிக்கிருள். 'அன்றி, விதியே - ஆம், என் அதிர்ஷ்டமும் உங்கள் துரதிர்ஷ்டமுமாகிய விதிதான்- பிடர் பிடித்துத் தள்ள வந்தீர்களோ? சொல்லுங்கள்' என்று பயமுறுத்துகிருள், பாலைவன ராணி.

இப்படியெல்லாம் உறுமிக் காலால் நிலத்தை உதைத்துக்கொண்டு, 'சூலத்தை இவர்கள் மார்பிலே எறிவே' னென்று தீர்மானித்துவிட் டாள். அவளைக் கொல்ல வேண்டுமென்ற விசுவாமித்திரர் கருத்தை இராமன் அறிந்திருந் தும், அம்பு தொடுத்தானில்லை. தங்கள் உயி ருக்கே ஆபத்தான செயலை அவள் செய்யத் தொடங்கியிருந்தும், தற்காப்பைக் குறித்தும் யோசித்தானில்லை. 'பெண்ணென மனத் திடை பெருந்தகை நினைந்தான்.'

இராமன் கருத்தை விசுவாமித்திரரும் ஊகித் தறிந்து, 'தாடகையையும் பெண்ணென்று எண்ணுவதோ?' என்ற கருத்து அமைய,

''தீதென்(று) உள்ளவை யாவையும்
செய்(து)எமைக்
கோதென்(று) உண்டிலன்; இத்தனை
யே குறை!
யாதென்(று) எண்ணுவ(து) இக்கொடி
யாளையும்?
மாதென்(று) எண்ணுவதோ? மணிப்
பூணினுய்!''

[கோது - சக்கை. பூண் - ஆபரணம்.] என்ருர்.

தீதென்று உள்ள எல்லாவற்றையும் செய்து உயிர்களையெல்லாம் வதைக்கிறவளென்று முனிவரும் சொன்னுர்: 'உயிர்க்குலத்தைக் கரு வறுத்து வருகிறேன்!' என்று தாடகையும்

பெருமையாகச் சொல்லிக்கொண்டாள். எனினும், இராமன் உள்ளத்தில் இவ்விஷயமாய் ஒரு சந்தேகம் தோன்றக் கூடுமேயென்று விசுவாமித்திரர் எண்ணினராம். 'ஜீவஹிம்ஸையே தொழிலாகக் கொண்டவள் இந்த முனிவரைத் தின்னமல் விட்டுவிட்டாளே!' என்று நினைக்கலாமல்லவா? அந்தச் சந்தேகத்தை எதிர்பார்த்துத்தான், 'எமைக்கோதென்று உண்டிலள்: இத்தனையே குறை!' என்று சொன்னர் முனிவர். தவமும் யாகமும் செய்து வற்றிப் போய் எலும்பும் தோலுமாயிருக்கிருரல்லவா?' எனவே, 'இந்த உடம்பு சாரமற்ற சக்கை!' என்றுதான் தின்னமல் விட்டு வைத்தாளாம். இதனல்தான் இவரைப் போன்ற முனிசிரேஷ்டர்கள் பிழைத்திருக்கிருர்களாம். 'இப்படிப் பட்ட பேர்வழியைப் பூதம், பேய், துஷ்ட மிருகம் முதலிய வர்க்கங்களில் எந்த வகுப்பிலே சேர்த்து எண்ணுவது?' என்பது தெரியவில்லை. வேறு எந்த இனத்தில் சேர்த்தாலும், தாய்க் குலமாகிய பெண் குலத்தில் மட்டும் சேர்ப்பது தகாது, தகாது என்கிருர் விசுவாமித்திரர்.

பிறகு யமனைக்காட்டிலும் தாடகை கொடியவள் என்ருர் முனிவர்.

''சாற்றுநாள் அற்ற(து)' என்று தருமம்
பார்த்(து)
ஏற்றும் விண்ணெனப(து) அன்றி, இவளைப்
போல்
நாற்றம் கேட்டலும் தின்ன நயப்பதோர்
கூற்றும் உண்டுகொல்? கூற்(று)உறழ்
வேலினய்!''

[சாற்றும் நாள் - (ஊழ்வினையின்படி) விதித்துள்ள ஆயுள்நாள். நாற்றம் - வாசனை. உண்டுகொல்- உண்டோ. கூற்றுறழ்-யமனைப் போன்ற.]

யமனைக் கொடியவனென்று உலகம் சொல்லுகிறதல்லவா? அவனே ஆயுள் முடிந்தவர்களைப் பார்த்துத்தானே கொண்டு போகிருன். ஆகவே, அவன் தருமம் பார்க்கிறவன்; தருமராஜா. இந்தப் புதிய யமனுக்கோ அப்படிப்பட்ட கவலையே கிடையாது. ஆயுளையும் பார்க்க மாட்டாள்; அறத்தையும் பார்க்கமாட்டாள். வாசனையை மோப்பம் பிடித்து அறிந்துகொண்டாலே போதும். இல்லை; 'நாற்றம் கேட்டலும்' தின்ன விரும்புகிருளாம். 'நரவாசனை வீசுகிறது!' என்று யாராவது சொல்லக் கேட்டாலும் போதுமாம். உடனே ருசி பார்க்கக் கிளம்பிவிடுகிருள்! என்கிருர் விசுவாமித்திரர்.

கடைசியாக முனிவர், தாம் தருமம் பார்த்தே பேசுவதாகக் கூறினர் :

''ஈறில் நல்லறம் பார்த்திசைத் தேன்; இவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்;
ஆறி நின்ற(து) அருளன்(று); அரக்கியைக்
கோறி' யென்றெதிர் அந்தணன் கூறினன்''

[ஈறில் - முடிவில்லாத. இவட்சீறி - இவளைச் சீறி. கோறி - கொல்வாயாக. அந்தணன் - ஜீவகாருண்ய மூர்த்தியான விசுவாமித்திரர்.]

'தருமம் என்னும் சட்டப் புத்தகத்தைப் பார்த்துத்தான் இவளுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்' என்ருர்.

'என்னுடைய மனநிலை ஒரு நீதிபதியின் மனநிலைதான்; எனக்கு இவள்மேல் கோபம் கிடையாது' என்கிருர். 'இதைக் குறித்துப் பொறுமையோடு பின்னல் பார்த்துக்கொள்வோமென்று நீ நினைத்தால், அது அருளாகாது!' என்றும் இராமனுக்கு எச்சரிக்கை செய்துவிடுகிருர். 'ஆறி நின்றது அருளன்று' என்று கூறுவதைக் கவனியுங்கள். ஏன்? 'இனிமேல் அரக்கி செய்யும் கொலைகளுக்கெல்லாம் நீ பொறுப்பாளி!' என்கிருர். 'தாடகையைக் கொல்லவேணும். இப்போதே கொல்ல வேணும்; தயங்காமல் கொல்லவேணும்; இதுதான் அருள்! அதுவே இவளுக்கும் அருள் செய்வதாகும். ஏனென்ருல், இவள் பாவச் சுமையை ஒழிப்பதற்கு வேறு வழியே கிடையாது' என்கிருர் விசுவாமித்திரர். இப்படிச் சொல்லும் முனிவரை, உயிர்களுக்கு அருள் பூண்டொழுகும் அந்தணனென்று பாராட்டுகிருன் கவிஞன்!

இந்த வாதத்திற்கு இராமன் என்ன பதில் சொல்லுகிருன்? 'மெய்ய! நின் உரை வேதமெனக் கொடு செய்கை யன்ருே, அறம் செயுமாறென்ருன்! மெய்யைக் குறித்தும் அருளைக் குறித்தும் எத்தனையோ சோதனைகளைச் செய்து பார்த்த நிபுணர் விசுவாமித்திரர். எனவே, 'உம்முடைய வார்த்தையை வேதமென்று கொண்டு செய்வதுதான் அறம் செய்யும்முறை' என்று ஒப்புக்கொள்ளுகிருன் இராமன்.

இப்படி ஒப்புக்கொண்டும் பளிச்சென்று தாடகைமேல் அம்பு போடவில்லையாம். அவள்

தான் போர் தொடங்குகிறுள், அவன் கருத்தை ஊகித்துக்கொண்டு.

''கங்கைத் தீம்புனல் நாடன் கருத்தையும்.
மங்கைத் தீஅனே யாளும் மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
வெங்கண் தீயொடு மேற்செல வீசினுள்.''

[கங்கைத் தீம்புனல் நாடன் - இராமன். மணக்கொளா - மனத்திலே கொண்டு. வெந்தீ - கொடிய நெருப்பு. தீய - கொடிய. வெங்கண் - கொடிய கண்கள்.]

பெண் வடிவம் கொண்ட தீயென்கிறுன், தாடகையைக் கவிஞன். இவள் கண்ணிலும் தீ; கையிலும் தீ! கண்ணிலே கோபத்தீ; கையிலே அழலும் சூலமாகிய தீ. தானும் தீயைப்போல அழன்றுகொண்டே, சூலாயுதமென்ற தீயைக் கண்களில் வீசும் கோபத்தீயோடு இராமன் மேலே செல்லும்படி வீசினுள்.

இப்போதுதான் இராமன் அம்பைத் தொடுக்கிறுனும். ஆனுல், அவளைக் கொல்வதற்காக அல்ல; தற்காப்பிற்காகத்தான்.

''மாலும் அக்கணம் வாளியைத்
தொட்டதும்,
கோல விற்கால் குனித்ததும் கண்டிலர்;
கால ஊெப்பறித் துக்கடி யாள்விட்ட
சூலம் இற்றன துண்டங்கள் கண்டனர்.''

[மால் - விஷ்ணுவின் அவதாரமான இராமன். வாளி - பாணம். கோல வில் - அழகிய வில். குனித்ததும் - வளைத்ததும். கடியாள் - கொடியவள்.]

இராமன் பாணத்தைத் தொட்டதையும், வில்லை வளைத்ததையும் ஒருவரும் பார்க்கவில்லையாம். தாடகை மட்டுமல்ல; இலட்சுமணனும் விசுவாமித்திரருங்கூடப் பார்க்க முடியவில்லையாம். அவ்வளவு விரைவாக அந்தச் செயல்கள் நிகழ்ந்தன. தாடகை வீசின சூலம் அறுபட்டதும், அந்தத் துண்டுகளைத்தான் பார்த்தார்களாம்.

சூலத்தை யிழந்த தாடகை கற்களை யெடுத்து வீசினுள்.

''அல்லின் மாரி அனைய நிறத்தவள்,
சொல்லு மாத்திரை யிற்கடல் தூர்ப்பன
கல்லின் மாரியைக் கைவகுத் தாள்; அதை
வில்லின் மாரியின் வீரன் விலக்கினுன்.''

[அல் - இருள். மாரி - மழை. மாத்திரையில் - அளவிலே. வகுத்தாள் - எடுத்துப் பொழிந்தாள்.]

தாடகை கற்களை மழையாகப் பொழிந்தாளாம். அந்தக் கல்மழையை இராமன் வில் மழையாகிய அம்புகளால் தடுத்துவிட்டான். இனிமேல் இவளால் முனிசிரேஷ்டருக்கு ஆபத்து விளையக்கூடுமென்று தெரிந்து,

''சொல்லொக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னுள்மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா(து)
அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே!''

[சரம் - அம்பு. புல்லர் - மூடர்.]

கல்லாத கீழ்மக்களுக்கு நல்லவர்கள் சொன்ன பொருள் போலே போய்விட்டதாம் இராம பாணமும், தாடகை நெஞ்சிலே தங்காமல். தான் பாழாக்கிய பாலைவனத்தைக்காட்டிலும் பாழ்பட்டிருந்த அந்த நெஞ்சை, 'வயிரக் குன்றக் கல் ஒக்கும் நெஞ்சு' என்று வருணிக்கிறுன். அந்த வனத்திலே அவள் தங்கியிருந்த கல்மலையைக்காட்டிலும் எவ்வளவோ கடினமாயிருந்ததாம், அந்தப் பாவி நெஞ்சு.

இராம பாணத்தையோ 'சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்று வருணிக்கிறுன். யாருடைய சொல்? விசுவாமித்திரரைப் போன்ற மகரிஷிகளின் சாபச் சொல்லா? கம்பனைப் போன்ற மகாகவிகளின் - நெருப்பைக் கக்கும்- சொல்தானு?

தாடகை அலறிக்கொண்டே மடிந்து விழுந்தாள். இந்தப் போரைக் 'காகுத்தன் கன்னிப் போர்' என்கிறுன் கவிஞன். இராவணன்பாட்டி, வலிமையிலும் கொடுமையிலும் ஒருங்கே முற்ற முத்து முதிர்ந்திருந்தாள். அந்த இராட்சஸ சக்கரவர்த்தியின் விநாச காலத்தைக் காட்டும் உற்பாதமாக அவனது வெற்றிக்கொடி அற்று விழுந்தது போலிருந்ததாம் அந்த வீழ்ச்சி.

வில்லை முரித்துச் சீதையை மணஞ்செய்து கொள்ளப்போகும் 'கைவண்ணம்' இப்படிப் பட்டதென்று இந்தக் கன்னிப்போர் முன் கூட்டியே ஒருவாறு அறிவிக்கிறது.

மகளிர்க்கு அறிவுரை

மகாகவி பாரதியார்

பாரதியாருக்கு உதவி புரிவதையே தம் கடமையாகக் கொண்ட மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியார் குடும்பத்தைச் சார்ந்த யதுகிரி அம்மையாருக்குச் சில புத்திமதிகள் சொன்னார், பாரதி. அந்தப் புத்திமதிகள் எல்லாப் பெண் மணிகளுக்கும் வேத வாக்கியங்களாகும். புத்திமதிகளின் பொன்மொழிகளுள் சில :

''யதுகிரி, நான் சில புத்திமதிகள் சொல்கிறேன், மறக்காதே! பெண்களுக்கு மிக முக்கியமானது கற்பு. அதை உயிரைக்காட்டிலும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவது முதல் கடமை. அதற்காகக் கூண்டுக்கிளிபோல் அடைபட்டுக் கிடக்க வேண்டாம். உலகத்தில் கணவன் ஒருவன் தவிர பாக்கிப் புருஷர்கள் எல்லாம் அண்ணன் தம்பிமார்கள். எல்லாருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம், வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லாருடனும் பேசலாம். கணவனிடம் முதல் முதல் வெட்கம், பழகப்பழக அதுவும் வேண்டியதில்லை. அச்சம், நாணம், பயிர்ப்பு—என்று புத்தகப் பாடத்தை உருப்போட்டு நம் நாட்டுப் பெண்கள், புருஷர்கள் எல்லாரும் அடிமை வாழ்வில் முழுகியிருக்கிறார்கள். நீங்கள் தைரியமாக இருந்தால் தான் உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக்கும். கோழைத்தனம் இந்தியாவின் மேன்மையை நாசம் செய்துவிட்டது. அத்தோடு காலமும் உதவி செய்தது.

நீ புக்ககத்திற்குப் போனாலும் தைரியமாக இரு. பயப்படாதே. ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே. மனதில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட வாயினால் சொல்லிவிடுவது நல்லது. உன்னால் முடிந்த அளவு அவர்கள் சொற்படி நட. உன்னால் முடியாவிட்டால் விஷயத்தைச் சுத்தமாகச் சொல்லிவிடு. மறைக்காதே. அதில் நன்மை உண்டு. பணம், காசு விஷயங்களில் தலையிடாதே. அதைப் பெரியவர்களுக்கு விட்டுவிடு. வேலை செய்யப் பின்வாங்காதே. சக்தி மீறிச் செய்யாதே. செய்வதை உன் மனம் ஒப்பச் செய்.

''நீ இரண்டு வீட்டிற்கும் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கை கலப்பது முதலில் கஷ்டமாக இருக்கும். பழகியபின் வழக்கமாய்விடும். தலை நிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண்குளிரப் பார். நேர் பார்வையில் பார். கடைக்கண் பார்வையில் பார்க்கத் தக்கவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக்கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை.''

தமிழர்க்கு அறிவுரை

மகாகவி பாரதியார்

தமிழா, தெய்வத்தை நம்பு; பயப்படாதே; உனக்கு நல்ல காலம் வருகின்றது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புத மான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ''ஜாதியிரண்டொழிய வேறில்லை'' என்ற பழந்தமிழ் வாக்யத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமை என்று கருதாதே! முற்காலத்துத் தமிழர், மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று; ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்துகொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்துகொள்ளாதே.

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிதமிஞ்சிவிட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதீக நடை—எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு; வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மையிருக்க வேண்டும்; உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது; பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது; பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக்காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா! எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. ''முந்திய சாஸ்திரந்தான் மெய்; பிந்திய சாஸ்திரம் பொய்'' என்று தீர்மானம் செய்துகொள்ளாதே! காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? ''தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லிய மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்'' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள்என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது, உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறருக்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. பிறர் என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல்; நல்ல மக்களைப் பெறுதல்; இனப்பெருமை சேருதல் — இவையெல்லாம் செல்வம்! இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. ''வீடு'' என்ற சொல்லுக்கு ''விடுதலை'' என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிப் பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கூடுக!

—·—

கம்பர், திருவள்ளுவர், இளங்கோ

மகாகவி பாரதி

தமிழ்நாட்டு வீரர்களுக்கும் கவிகளுக்கும், லோகோபகாரிகளுக்கும் இதுவரை எவ்வித மான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமாக, பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஒரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்து சக்திமான்களை வியப்பதும், அவர்களுடைய தொழிற்பெருமையை உலகறிய முழக்குவதும், கூடியவரை பின்பற்ற முயல்வதும் ஆகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கணிப்பார்கள்.

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது, எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்துபோகும். பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும். அறிவுடையோரையும், லோகோபகாரியையும், வீரரையும், கொண்டாடாத தேசத்தில் அறிவும், லோகோபகாரமும், வீரமும் மங்கிப்போகும். தமிழ்நாட்டில் இப்போது ''புதிய உயிர்'' தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச்சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். திருவள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. ஜன்மதினம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை அந்தக் கோயிற்பூசாரிக்குத் தெரியக்கூடும்.

ஐந்து மகாகாவியங்களிலே சிறந்ததாய் 'சிலப்பதிகாரம்' செய்த இளங்கோ முனிவர் வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் இப்போது திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டித மு. ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசிரியரது ஜன்ம தினத்தையும் நிச்சயமாகச் சொல்வதற்கு வழியில்லை.

மயிலாப்பூரிலே திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழை நிலைமையில் இருக்கிறது. திருவழுந்தூரிலும், கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தவேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயிக்கப்பட வழியில்லை. ஆதலால் ஸரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்ஸவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால் அந்த ஸமயத்தை ஒட்டி நமது மகாகவிகளுக்குத் திருவிழாக் கொண்டாடுதல் ஸுலபமாக இருக்கும்.

பண்டித சபைகளையும், பொதுஜன ஆரவாரங்களையும் கோலாஹலமாக நடத்தி, எல்லா வர்ணத்தாரும் எல்லா மதஸ்தரும் சேர்ந்தால், சந்தோஷமும் அறிவுப் பயனும் உள்ள மாண்பும் பெற இடமுண்டாகும். மத பேதங்கள் பாராட்ட இடமில்லாத திருவிழாக்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு அவசியமென்பதை ஒவ்வொரு அறிவாளியும் எளிதாக ஊகித்துக்கொள்ளலாம்.

கவிஞனைப் போற்றிய கவிஞன்

கம்பன் அடிப்பொடி

தமிழகத்திற் பிறந்த கவிகளுள் மகாகவி பாரதி ஒரு தனிப்பெருமை யுடையவன். தன்னேர் இல்லாத தத்துவப் புலவன். இது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. கம்பன் வாக்கிற்கூறினால், ''இவன் கல்லாத கலையும் வேதக் கடலும் உலகத்து எங்கும் இல்லை'' என்னலாம்.

நாடு, மொழி, சமுதாயம், சமயம், தத்துவம், அரசியல், காதல், வீரம், அன்பு, அறம், நாட்டு விடுதலை, ஆன்ம விடுதலை, சர்வதேசியம், சமரசம், சமத்வம், ஆன்மநேய ஒருமைப்பாடு முதலான எல்லாத் துறைகளிலும் கருத்தைச் செலுத்திக் கவிதை பொழிந்த கார்மேகம் பாரதியே! நல்லனவற்றை நாவார வாழ்த்துவதைப் போலவே அல்லனவற்றை அகங் கொதித்துச் சாடியுள்ளான். எங்கெல்லாம் மக்கள் விறுகொண்டெழுந்து விடுதலைக்குப் போராடினும் அவர்களையெல்லாம் வாழ்த்தி மகிழ்ந்திருக்கின்றான்.

கவி, கவிதை, செய்யுள், பாட்டு, காப்பியம், வசன கவிதை, கட்டுரை, கதை முதலியவற்றில் காணும் எளிமையும், தெளிவும் உணர்ச்சியும், சுவையும் எல்லாம் பாரதியின் பெருமைக்குக் கட்டியங் கூறுவனவாம்.

கம்பனைப்போல், வள்ளுவன்போல், உலகெலாம் ஒன்று; உலக மக்கள் யாவரும் ஒரு குலம்; காக்கை குருவி முதல் எல்லாம் நம் ஜாதி என்றெல்லாம் ஆன்ம நேய ஒருமைப் பாட்டு அத்வைதியாக மிளிர்கிறான், பாரதி.

சாதி பேதம், மத வேற்றுமை, ஆண்-பெண் உயர்வு தாழ்வு, ஆண்டான் அடிமை நிலை முதலிய கேடுகளை எல்லாம் சுட்டுப் பொசுக்கி விட்டு,

''எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓர்இனம்;
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

என்று வெற்றி முரசு கொட்டுகிறான்.

இப்படி எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்து அறமுரைத்த அற்புதக் கவிஞன் மகாகவி பாரதியே. அவனையன்றி மற்றொரு கவிஞனைக் காணலும் காட்டலும் அரிதே!

கம்பனை வள்ளுவனை இளங்கோவை காளிதாசனை தாயுமானவனைப் பாராட்டிப் பாரதி வியந்து பாடுவதை நாம் அறிவோம். ஆனால், அவர்களுள் எல்லாம் கம்பனைப் பாராட்டியதே அளவாலும் முறையாலும் அதிகமாகும். காரணம், கம்பன் அருளிய இராமகாதைக் காப்பியம், அவன் கவிதா சந்நதம் பாரதியைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது.

கம்பனுடைய புரட்சிகரமான நோக்கும், கதை நடத்தும் போக்கும், பரந்துபட்ட பேரறிவும், கையாளும் உத்திகளும், ஓசை நயமும், ஒப்பற்ற பாத்திரங்களை அற்புதமாய்ச் செயல்படச் செய்யும் நேர்த்தியும், வேத உபநிடதக் கருத்துகளை வெளிப்படுத்தும் சீர்த்தியும், வள்ளுவத்தைப் பிழிந்து வடித்து வைக்கும் பெற்றியும், கலையெலாம் வல்ல பாரதியின் உள்ளத்தைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை.

கம்பன் கையாண்ட உத்தியையும், அவன் பொருளை உணர்த்தும் முறைகளையும் பாரதியின் படைப்புகளில் மணக்கக் காண்கிறோம்:

''சொல்லடா 'ஹரி'என்ற கடவுள் எங்கே?
சொல்!''என்று ஹிரணியன்தான்
உறுமிக் கேட்க
நல்லதொரு மகன்சொல்வான்—''தூணில்
உள்ளான்
நாரா யணன்துரும்பில் உள்ளான்''
என்றான்.

வல்லபெரும் கடவுள்இலா அணுஒன்.
                    றில்லை;
மகாசக்தி இல்லாத வஸ்து இல்லை!''

என்று மகாகவி பாடும்போது கவிச்சக்கரவர்த்தியின் ஹிரண்யன் வதைப்படல நினைவுதான் அவன் உள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்.

''காதலிலே இன்பம்எய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போர் எண்ணு வாரோ?''

என்று பாடும்போது கவிச்சக்கரவர்த்தியின்,

''யாரொடும் பகைகொள்ளிலன் என்றபின்
போரொடுங்கும்; புகழ்ஒடுங்காது''

என்னும் அடிகளே மகாகவியின் மனத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

இனி, மகாகவி பாரதி கவிச்சக்கரவர்த்தி கம்பனை நேரடியாகவே போற்றி மகிழும் இடங்களைப் பார்ப்போம்.

''கல்வி சிறந்த தமிழ்நாடு''

என்று தமிழ்நாட்டின் கல்விச் செழிப்பை எடுத்தோதியதும், உடனே, மகாகவியான நினைவில் நல்ல பல்விதமாயின சாத்திரத்தின் மணத்தை நுகர்ந்து களிக்கும் பருணிதனை கம்பன் தோன்றியது இயல்பேயன்றோ? எனவே அடுத்து,

''புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு''

என்னும் சொற்கள் உதிர்கின்றன.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி
                    போல்
இனிதாவது எங்கும் காணோம்''

என்று பெருமிதத்தோடு பாடித் தமிழ்மொழியின் எழில் உணர்த்தும் மகாகவி,

''யாம்அறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவன்போல், இளங்கோ
                    வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை!வெறும் புகழ்ச்சி இல்லை''

என்று காரணமும் காட்டுகிறான்.

இங்கே ஓர் ஐயம் ஏற்படலாம். மூன்று பேரைக் கூறி இவர்க்கு நிகர் எங்கும் இல்லை என்றால், ''இவர்களுள் ஒருவருக்கு மற்றவர் நிகர்தானே?'' என்ற வினா எழுதல் இயல்பே. ஆனால், கவிஞனின் மதிப்பீட்டை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

கவிஞன் காட்டிய மூவரும் வெவ்வேறு வகையில் தனிப் பெருமையுடையவர்கள். கம்பன் பெருங்காப்பியம் படைத்தவன்; வள்ளுவன் நல்லறம் பாடியவன்; இளங்கோ வரலாற்றுக் காப்பியம் வடித்தவன். எனவே, மூவரும் மேற்கொண்ட துறைகள் முற்றிலும் வேறு வேறானவை. ஆகவே, அந்த ஒரு சொற்றொடரை மூன்று சொற்றொடர்களாகப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

1. ''யாம்அறிந்த புலவரிலே கம்பனைப்
                    போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த
                    தில்லை.''

2. ''யாம்அறிந்த புலவரிலே வள்ளுவன்
                    போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த
                    தில்லை''

3. ''யாம்அறிந்த புலவரிலே இளங்கோ
                    வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த
                    தில்லை.''

இப்படிப் பிரித்துப் பொருள் கொண்டால் சிக்கல் தீர்ந்து தெளிவு கிடைத்துவிடும் இல்லையா?

கம்பன்பால் பாரதி எல்லையில்லாத பெருமதிப்புக் கொண்டிருக்கிறான். ஒரு கவிஞனுக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் கம்பனிடம் ஒளிருவதாக உணர்கிறான். இத்தனை கலைகளையும் எப்படித்தான் கற்றுத் தேர்ந்து, தெளிந்து, சுவை பிலிற்ற வடித்தளிக்க முடிந்ததோ என்று பாரதி வியந்து மகிழ்ந்திருக்கிறான். ஆம்; பற்பல கலைகளையும் கற்றுத் தேர்ந்த ஒரு மகாகவி தானே மற்றொரு கவிஞனை அளவிட முடியும்? அங்ஙனம் அளவிட்டபோது ஏற்பட்ட வியப்பே,

''கம்பன் என்றொரு மானிடன்!''

என்ற கவிதையில் மலர்ந்துள்ளது போலும்!

கம்பனின் கவிதாசந்நதத்தை எத்துணையளவுக்குப் போற்றி மகிழ்ந்திருக்கிறான் என்பது அவன் வாக்கில் மலர்ந்த,

''கன்னனொடு கொடை போயிற்று:
உயர்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று''

என்னும் அடிகளால் தெளிவாகப் புலப்படுகிறது.

இறைவன் கூற்றுகச் சில செந்துறைகளைப் பொழிகிறான் மகாகவி. சர்வாண்டங்களும், சர்வகோடி ஜீவன்களும் நானே! அனைத்தையும் ஆக்கியவனும் அவற்றை நிலைதடுமாறாமல் இயக்குபவனும் நானே என உணர்த்துகிறான், அவற்றின் மூலமாக. அப்படி ''எல்லாம் நானே!'' என்று பேசுகிற பரம்பொருள் மகாகவியின் வாக்கில்,

''கம்பன் இசைத்த கவிஎலாம் நான்''

என்று காட்டுகிறது.

காட்டுதற்கு அருமையான ஒரு தனிப் பொருள் கடவுள் என்பர் ஆன்றோர்.

''இப்படியன் இந்நிறத்தன்;
இவ்வண்ணத்தான்;
இவன்இறைவன் என்றுஎழுதிக்
காட்டொணாதே!''

என்று, பேரருட் பெருஞானியாகிய அப்பர் அடிகளே கூறுவார். அவற்றையெல்லாம் முழுதுணர்ந்தவன் மகாகவி பாரதி. அவன் கம்பனில் ஆழங்காற்பட்டவன். கம்பனுடைய பேராற்றலில், பெரும்புலமையில் மனம் பறி கொடுத்தவன். மகாகவியின் சீரிய புலமை, கவிச்சக்கரவர்த்தியின் சிறந்த முயற்சியை வாயாரப் பாடுகிறது.

''எல்லைஒன்று இன்மை எனும்பொருள்
அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான்
தமிழச்
சாதியை அமரத் தன்மைவாய்ந்
ததுஎன்று
உறுதிகொண் டிருந்தேன்!''

என்னும் அடிகளிலே மகாகவியின் வியப்பும் வேட்கையும், ஏன், ஒரு திருப்தியுமே பளிச்சிடுகின்றதன்றோ?